மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய

மூவரையன் விறலி விடுதூது

பதிப்பாசிரியர்

டாக்டர் இரா. நாகசாமி

மகாமகோபாத்தியாய
.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
ன்மியூர், சென்னை-600 041.

மூவரையன் விறலி விடுதூது

மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் இயற்றிய

மூவரையன் விறலி விடுதூது

டாக்டர் இரா. நாகசாமி
எழுதிய குறிப்புரை நூலாராய்ச்சி முதலியவற்றுடன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர்—சென்னை-41
1982

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண். 73

முதல் பதிப்பு :—1982, 1000 பிரதிகள்.

விலை :—ரூ 12·00

Printed with the financial assistance from the Ministry of Culture, Govt. of India.

Printed at RAJAN & Co. (Printers) 1, Goomes Street, Madras-1

முன்னுரை

மூவரையன் விறலி விடு தூது என்னும் நூல் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் சேமித்த ஓலைச்சுவடிகளுள் ஒன்று. இதுவரை அச்சாகாதது, மிதிலைப்பட்டிக் கவிராயர் குடும்பத்திலிருந்து பெறப்பட்ட சுவடி. வீரைத் திரு வேங்கடநாதன் என்னும் மூவரையன் மீது மல்லைச் சிற்றம் பலக் கவிராயரால் பாடப் பெற்றது. சிற்றம்பலக் கவிராயர் 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களில் சிறந்தவர்களில் ஒருவர். பல நூல்களை இயற்றியவர். அவர் குடும்பமே பல நூல்களை இயற்றித் தமிழுக்குப் புகழ் சேர்த்த குடும்பம். கவிராயரைப் பற்றித் தனி ஒரு ஆராய்ச்சியே மேற்கொள்ள லாம். ஆதலின் அவரைப்பற்றி விரிவாக இந்நூலில் முன்னர் கொடுத்துள்ளேன்.

'விறலி விடு தூது' என்னும் சிற்றிலக்கியம் ஒரு புதுப் பாணியைத் தனக்கென வகுத்துக்கொண்ட இலக்கியமாம். சிருங்காரமாகிய இன்பச் சுவையைப் பிரதானமாகக் கொண்டு அறம் போதித்தலைக் குறிக்கோளாகக் கொண் டது. காமச்சுவை அதிகம் இருப்பதால் முதியோர் இந்நூல் களை ஒதுக்கினர். ஆயினும் அன்றைய சமுதாயச் செய்திகளை இந்நூல்கள் அள்ளித் தருகின்றன. உதாரணமாக நாகம நாயக்கர் விறலி விடு தூது இசை பற்றியும், பரதநாட்டியம் பற்றியும் சிறப்பாகவும் விரிவாகவும் கூறுகிறது. ஆதலின் அச்செய்திகளைச் சற்று விரிவாக இங்கு ஆராய்ந்துள்ளேன். அன்று பெண்கள் அணிந்த சிலைகள், கச்சுகள் பற்றிய செய்திகளும் வழக்குச் சொற்களும் இடம்பெறுவதை நூலாராய்ச்சியில் குறித்துள்ளேன். மிதிலைப்பட்டிச்சிற்றம் பலக் கவிராயர், இப்பாட்டுடைத் தலைவனான மூவரையன் மீது ஒரு வண்ணம் பாடியுள்ளார். அது இந்நூலில் பிற் சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூலைப் பதிப்பிக்க எனக்கு வாய்ப்பளித்த நூல் நிலைய அதிபர் திருமதி. ருக்மணிதேவி அம்மையாருக்கும் உ. வே. சாமிநாதையர் நூலகக் காப்பாளரும் ஐயரவர் கள் பெயரருமான திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும் எனது நன்றி.

சென்னை. 600090. இரா. நாகசாமி.
1—11—82,

MUVARAIYAN VIRALI VIDU DUTU

INTRODUCTION

Muvaraiyan Virali Vidu Dutu is a messenger poem composed around 1650 A.D., by Chirrambalak Kavirayar of Mallaiyur also called Mithilaippatti in Ramnad district. The poet is known for his erudition and his several compositions like *Sivandelunda Pallavarāyan ulā*, *Āndavarāyan Kovai*, ‘ *Pirānmalaipurānam* etc. As many as 20 works are known to have been composed by him. His family is acknowledged as the Kavirayar family, as a number of his descendants were also poets of great eminence. A recently published work ‘ *Susilavallal Ammānai*,’ by one of his family members, gives a detailed account of this poet and his accomplishment. Three to four generations of this family have contributed to the enrichment of Tamil literature by their works. Several palm leaf manuscripts, that were used mainly for his critical editions by Dr. U V. Swaminatha Iyer belonged to this family.

The ‘ *Virali Vidu Dūtu* ’ works are a class by themselves which gained popularity from about the 17th Century. The earliest known work of this class is called *Deivachilayār Virali Vidu dūtu* written by one Kumaraswami Avadani on a patron Deivacchilayar of Krishnapuram near Tirunelveli. The work has been edited by Dr. S. Vaiyapuri pillai who assigns it to mid 16th Century but it could at best be assigned to 1600 A.D. The present work is on ‘ Muvaraiyan ’ a patron hailing from Virai identical with Viravanallur in Tirunelveli district. The patron was a contemporary of Thirumalai Nayak, the famous Nayak ruler of Madurai. From other works also, it is known that the poet Chirrambalak Kavi lived in 1650 A.D. and thus the present work is assigned to mid 17th Century (1650 AD) and is the second work of this class of poetry so far known. The third work of this class was written in 1710 A.D, in the reign of the Tanjore Mahratta ruler Shaji, on one of his officers. But the most famous of this class of poems was composed in 1720 AD, on the chieftain Kulappa Nayak of Nilakkottai, in Ramnad district, by Supradeepa Kavirayar. Several editions of this work have appeared in print on account of its excellence both in diction and content. Many other compositions of this class are known.

The main intention of this class of poems is to eulogize the patron and his munificent gifts, but the poets use an ingenious way to achieve this end. A Brahmin, well versed in Vedas and deeply learned in all the sastras, is made the hero. A pious man at the beginning, he parts with his wife during a sexual quarrel and visits a number of holy places and temples. At one such temple he sees a beautiful dancing girl and falls in love with her. Besides being an accomplished dancer, she is an expert prostitute. The Brahmin spends his entire fortune on her and the whole sex act is portrayed in all its nakedness. When the prostitue comes to know that her paramour has no more money to offer she chases him out of the house, while the Brahmin refuses to leave her. The matter is taken to the village court. The court enquires and passes a verdict against the Brahmin, who is ordered at once to quit the prostitute's house. Dejected and disappointed the Brahmin wanders and meets on the way, the patron coming in a procession. The patron, a lover of learning and poetry takes pity on the Brahmin and bestows wealth on him. The Brahmin sends a Virali (a female minstrel) as messenger to his wife and finally returns home and unites with his wife.

In view of its detailed description of amorous sports (*sambhoga sringāra*) this class of poetry once introduced, suddenly became very popular with a number of local Chieftains. From 1600 to 1750 A.D many such compositions have appeared. In all the works of this class, it is the Brahmin who falls from his pedestal and succumbs to carnal desires and makes a fool of himself. Secondly in all these works, the narration of the Brahmin is in first person which infuses a vicarious satisfaction on the mind of the reader and hence their popularity. The poet uses this as a plank to depict his mastery over several fields of learning. The Kamasutra had its counterpart in Tamil, familiarly called *Kokkōka Sāstra*, dealing with the science of sexual pleasure. In all this class of Virali dutu poetry, the sexual act is so vividly portrayed that the orthodox school despised this composition and the then Govt. issued orders censoring certain portions from the text. Besides sex aspect, there are several other aspects dealt with in this work which are of great value to Sociologists.

Invariably the prostiutes are depicted as dancers. The *Kulappa Nāyakkan Virali Vidu dutu* gives the names of all the musical ragas and also the complete sequence of Bharata Natya, that is a veritable treasure-house of music and dance for a historian. Similarly the art of prostitution, the process and adminsitration of justice, etc. are well brought out in this text. Other works give details about various textiles that were in use, the costume, jewellery, etc.

The *Muvaraiyan Virali Vidu dutu* edited with notes is being brought out for the first time. There are three manuscripts in Dr. U. V. Swaminatha Iyer Library, two palm leaf manuscripts and the third, a paper manuscript. The earliest seems to be the one no. 844 in palm leaf which might be about 250 years old. The other two are later copies of the first.

A '*Vannam*' (a composition meant for dance recital) by the same poet, Mallai. Chirrambalakkavirayar on the same patron Muvaraiyan is appended at the end.

The book is being brought out with the financial assistance from the Govt. of India. I am thankful to Smt. Rukmini devi, the Adyaksha of the Library, and to Shri K. Subrahmanya Iyer the grandson of Dr. U. V. Swaminatha Iyer, who is also the curator of the library, for having given me this oppurtunity to edit the work.

R. NAGASWAMY

இந்நூலாராய்ச்சிக்கு உதவிய நூல்கள் :

1. தெய்வச்சிலையார் விறலி விடு தூது.
   பதிப்பாசிரியர்- S. வையாபுரி பிள்ளை, சென்னை- 1936.

2. செண்டலங்காரன் விறலி விடு தூது.
   (ப-ர்)-புலவர். கோவிந்தராசனார், தஞ்சாவூர்- 1969.

3. கூளப்ப நாயக்கர் விறலி விடு தூது.
   (ப-ர்)- ராய. சொக்கலிங்கன், காரைக்குடி—1949.

4. கூளப்ப நாயக்கர் விறலி விடு தூது.
   (ப-ர்) சரவணப்பெருமாளையர், மதராஸ்—1948.

5. தூதுத்திரட்டு
   (ப-ர்) T. சந்திரசேகரன், சென்னை-1957.

6. நண்ணுவூர் சங்கமேசுரசாமி விறலி விடு தூது.
   (ப-ர்) வித்வான் வி. சொக்கலிங்கம், தஞ்சாவூர்— 1969.

7. மூன்று காதல் பிரபந்தங்கள்—
   (ப-ர்) சிரஞ்சீவி, சென்னை—1958.

8. கூளப்ப நாயக்கன் காதல்.
   (ப-ர்) மு: அருணாசலம், சென்னை—1943.

9. அதிவீரராமன் கொக்கோகம்.
   (ப-ர்) புலியூர்க்கேசிகன், சென்னை-1957.

10. சுசீல வள்ளல் அம்மானை.
    (ப-ர்) எஸ். சௌந்திரபாண்டியன், சென்னை— 1981.

11. மான் விடு தூது.
    (ப-ர்) டாக்டர் உ. வே. சாமிநாதையர், சென்னை— 1936.

12. அழகர் கிள்ளை விடு தூது.
    (ப-ர்) உ. வே. சாமிநாதையர், சென்னை—1938.

13. கல்வெட்டு-காலாண்டிதழ்.
    தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறை, சென்னை—1975-76.

உள்ளடக்கம்

சிவமயம்

நூல் ஆராய்ச்சி

சிற்றம்பலக் கவிராயர் :

மூவரையன் விறலிவிடுதூது என்னும் நூல் மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் இயற்றியது. திருநெல்வேலி மாவட்டத்தில் வீரை என்னும் வீரவநல்லூர்த் தலைவன் திருவேங்கடநாதன் என்றும் மூவரையன் என்றும் பெயர் பெற்ற தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றது. சுமார் கி. பி. 1650இல் பாடப்பெற்ற இந்நூல் கவிராயர் குடும்பத்திலிருந்து உ. வே. சாமிநாதையரால் பெறப்பட்ட சுவடிகளில் ஒன்று. இரு சுவடிகள் நூலகத்தில் உள்ளன. 'சிவந்தெழுந்த பல்லவராயன் உலா' முதலிய பல அரிய நூல்களை இயற்றிய சிற்றம்பலக் கவிராயர் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவோரில் கவிராயர் என்ற பட்டம் பெற்றவர். மிகச் சிறந்த புலவர். சொல் நயமும், பொருள் நயமும் சிறக்கப்பாடும் ஆற்றல் பெற்றவர்.

ஐயர் அவர்கள் குறிப்பு :

மல்லைச் சிற்றம்பலக் கவிராயரைப் பற்றி ஐயரவர்கள் கீழ் வரும் குறிப்புகளை எழுதி வைத்துள்ளார்கள்.[1]

"சாலி. 1570 மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர், இவருடைய தந்தையார் பெயர் தில்லையாடியா பிள்ளை என்பது. அவருடைய பிதிரார்சிதமான ஊர் தொண்டை நாட்டிலுள்ள மல்லை என்பது. மேற்கண்ட தில்லையாடியாபிள்ளை என்பவர் பாலைவனம் ஜமீந்தாராகிய வணங்காமுடிப் பண்டாரத்தார் ஒருவருடன் அவ்வூருக்கு வந்து அந்த ஜமீன் ஸ்தானபதி வேலையில் இருந்தார். அவருக்கு நடராஜ மூர்த்தியினிடத்து அன்பு மிகுதியாக இருந்ததைப் பற்றி இவருக்கு இப்பெயர் இடப்பட்டது. இவருடைய ஆசிரியர் சதாசிவர் என்பவர். சதாசிவதேசிகர் என்பவர் வைத்தியநாத தேசிகருடைய புத்திரர்.

அது பின்வரும் பாடலால் விளங்குகிறது.

கூடுஞ்சபையிற் கவிவாணர் தங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு பாற்றமிழ்தானுங்கற்றுப்
பாடும் புலவர்களானேரும் செம்மல பட்டியெனும்
காடுஞ் செடியும் இலக்கணங் காவியம் கற்றதுவே

(இலக்கண விளக்கப் பதிப்புரை 4 பக்கம் பார்க்க)

இவருடைய காலம் சாலிவாகன சகாத்தம் ... என்று வேங்கட நாயக்கர், கொடுத்த ஒலைப்பட்டயத்தால் தெரிகின்றது. சதாசிவ சற்குருவென்றது இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரின் புத்திரரை.

பாலைவனம் ஜமீன்தாராகிய அருணசல வணங்காமுடியார் புத்திரரான ஆண்டவராய வணங்கா முடிப் பண்டாரத்தார் மீது சில பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் செய்தனர். அவர் யானை முதலிய பரிசுகள் அளித்தார் (யானை கட்டிய கல் இவர் வீட்டுக்கு மேற்கில் இன்றும் காணப்படுகிறது. சிவிகை தண்டிகையு முண்டு). அப்பால் சேது சமஸ்தானம் சென்று இரகுநாத சேதுபதியின் மீது .... என்னும் செய்யுளைப் பாடி அவரால் நன்கு மதிக்கப்பட்டு இராசசிங்க மங்கலம் என்னும் கிராமம் பெற்றூர். அவ்வூரில் உள்ள ஏரியில் 48 மடைகளுள் ஒரு மடைப்பாய்ச்சல் நிலத்தை இராமநாத ஸ்வாமிக்கும் மற்றொரு மடைப் பாய்ச்சல் நிலத்தை அக்கிரகாரத்தாருக்கும் தானஞ் செய்து அம்மடைத் தலைப்பில் தம்முடைய பெயரைத் தானஞ் செய்ததற்கறிகுறியாகக் கல்லில் நாட்டியிருக்கின்றனர். அப்பால் அவ்வூரிலேயே இருந்தார். மந்திரியின் முயற்சியால் ரகுநாதசேதுபதி இவரிடம் வந்து மேற்கண்ட கிராமத்தை வாங்க எண்ணி:-

சிற்றம்பலவன் திருஞான சம்பந்தன்
உற்ற தமிழுக்குரையாணி-வெற்றிப்புனை
தேவைரகுநாதனுக்குச் செல்வப் பிதாவெனவே
பூவுலகில் வந்தானிப் போது

என்னும் வெண்பாவைச் சொன்னர். அதைக் கேட்டுக்

கிராமத்தை விரும்பிய குறிப்பை உணர்ந்து மேற்கண்ட கிராமப் பட்டயத்தைக் கொடுத்துவிட்டு கவிராயர் சொன்ன பாடல்

வள்ளைக் கருமேதிகு தட்டிய தேவைத்தள
வாய்க்கண் மணியே மோகக்
கிள்ளை மொழிச்சியர்வேளே சேதுபதி
ரகுநாதா கேண்மோ நீதான்
எள்ளை நிகரறியாத வென்னையினித் தந்தை
யென்று யென்றுலந்தப்
பிள்ளை தனைமறந்தோர்க்குக் கதியுண்டோ
ஓரேழு பிறப்புந்தானே.

(தளவாய் சேதுபதி-ரகுநாதர் தந்தை) சேதுபதியதற்குப் பிரதியாகக் கொடுத்த கிராமங்கள் 1. நாகரத்தினப் பள்ளம், 2. நாரத்தம் பள்ளம், 3. கொற்றமங்கலம், 4. பிள்ளையார்பட்டி இன்னும் சில, 5. கோனூர்பட்டு, 6. மறவணியேந்தல்,

மருங்காபுரியைச் சார்ந்த செம்மலபட்டியை அடைந்து தாம் அதில் தோரணம் நாட்டி அனுபவிப்பாராய்த் தங்கி அங்குள்ள எல்லோருக்கும் தமிழ் கற்பித்து வந்தனர். அப்போது மருங்காபுரி ஜமீந்தார் வந்து மாடு மேய்ப்பான் முதல் யாரும் சைவ ஒழுக்கத்தோடு மிக்க படிப்புள்ளவராக இருப்பதையறிந்து வியந்து புலவனுக்குடி முதலிய சில கிராமங்களை அளித்தார். தேனி மலையில் முருகக் கடவுளைப் பிரதிஷ்டித்து அக்கோயிலுக்கு ஓர் ஏந்தலை விட்டு விட்டனர். அப்பால் பிரான்மலை சென்று இருந்துகொண்டு மேற்கண்ட ஸ்தல புராணம் முதலிய நூல்களைப் பாடினர்.

1. பிரான்மலைப் புராணம், 2. பிரான்மலைக் கழிநெடில். அங்கே இறந்து போயினர்.

திருநெல்வேலி சென்று அங்கே இருந்த மூவரையன் என்னும் பிரபுவின் மீது வண்ணமும், விறலிவிடு தூதும், கோவையும் பாடி சில கிராமங்களைப் பெற்று ஸ்ரீவேணுவனலிங்க மூர்த்திக்குக் கொடுத்து விட்டனர்,

சேலத்திலிருந்த கட்டியப்ப முதலியை அடைந்து அவரால் நன்கு மதிக்கப் பெற்று அவர் மகளுக்குத் தமிழ் சொல்லி வைத்தனர். பிரான்மலைக்கு மேற்கே 15 மைலிலுள்ள நத்தம் ஜமீந்தார் மீது வருக்கக் கோவையும் வேறு சில பிரபந்தங்களும் பாடி பூசாரிப்பட்டி என்னும் கிராமத்தில் இரண்டேந்தல் பெற்றார். அங்கே ஆய்வி ஊருணி என்று ஒன்று வெட்டுவித்து அதன் கரையில் விநாயகப் பிரதிஷ்டை செய்வித்து பூசைக்காக ஒரேந்தலை விட்டு விட்டார். மேற்கண்ட கிராமம் விட்டதற்குரிய பட்டயத்தில் உள்ள பாடல்:-

காநிக ராங்கொடைச் சொக்கலிங்கையன் கனிந்தொழுகுந்
தேனிகராம் வருக் கக்கோவை கொண்டுசிற் றம்பலம்பால்
தானிய நெல்விளை பூசாரிபட்டி தனைச்சருவ
மானிய மீந்தனனீடூழிகாலமும் வாழ்க வென்றே.

இவர் செய்த நூல்கள் :

1. ஆண்டவராயன் கோவை
2. பெருந்துறை ஆன்மநாதர் யமக வந்தாதி
3. ஆண்டவராயன் கட்டளைக் கலிப்பா
4. விருத்தம்
5. கட்டளைக் கலித்துறை
6. கொச்சகங்கள்
7. மகா நவமி விருத்தங்கள்
8. வெண்பாக்கள்
9. ஆண்டவராயன் மகன் குழந்தைத் துரை மீது பலகவி.
10. ஆண்டவராயன் வண்ணம்
11. மேற்படி சமுக விருத்தம்-10
12. பிரான்மலைப் புராணம்
13. பிரான்மலை மங்கை பாகக் கடவுள் விருத்தம் 10.
14. மூவரையன் வண்ணம்
15. மூவரையன் விறலி விடு தூது
16. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா

17. சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ்
18. மருங்காபுரி வீரப் பூச்சிய நாயக்கர் கோவை
19. மருங்காபுரி வீரப் பூச்சிய நாயக்கர் பிள்ளைத் தமிழ்.

இவர் மிக்க கொடையாளியாகவுமிருந்தது பற்றிப் பலரால் கொண்டாடப்பட்டுள்ளார்.''

சுசிலன் அம்மானையில் கவிராயர் [2]

சுசீல வள்ளல் அம்மானை என்ற நூலை இயற்றியவர் குமார சாமிக் கவிராயர். அவர் அந்நூலில் தமது குலத்தின் பெருமையையும் பாடியுள்ளார். அதில் தாம் மல்லையூர் சிற்றம்பலக் கவியின் வழி வந்தோன் என்கிறார். அத்துடன் சிற்றம்பலக் கவிராயரின் சிறப்புகளையும் கூறுகிறார். மல்லைநகர்த் தலைவன் மிதிலைப்பட்டியில் வாழ்ந்தவர். பிரான்மலைக்கு தலபுராணம் சொன்னவர் என்று கூறுகிறார். மேலும் சேதுபதி மன்னர் சிற்றம்பலக் கவிராயருக்கு ராசசிங்க மங்கலத்தை தானமாக அளித்தார். ராசசிங்க மங்கலத்தில் 46 மடைகளைத் தாம் வைத்துக் கொண்டு 2 மடைகளில் ஒன்றை கன்யாகுமரி இறைவருக்கும், மற்றதை அந்தணர்க்கும் தானமாகக் கொடுத்து அதில் கல்லும் வெட்டிவைத்தார். வணங்காமுடி என்ற வள்ளல் மீது பாடல் பாடி விருதுகள் பெற்றார். சிற்றம்பலக் கவிஞர் பெற்ற நிலங்கள், பூசாரிப்பட்டி, செம்மலவுபட்டி, புலவன்குடி, கவிராயர்பட்டி, கொத்தமங்கலம், கோனாடுபட்டி, மறவன் ஏந்தல், மண்மேட்டு பட்டி, செவ்வூர், தேனாட்சிபட்டி, காரைச்சூரான்பட்டி, கருக்கைப் பிலான்பட்டி முதலியனவாகும். அவர் மங்கைபாகர் கோயிலில் (பிரான்மலையில்) மணிவிளக்கு ஏற்படும் வண்ணம் சாயுச்சியம் அடைந்தார். சிற்றம்பலவன் சதாசேர்வை என்று அங்கு கல் நாட்டப்பட்டது என்று தெரியவருகிறது. அதைக் கீழ்வரும் பகுதி

இந்தக் கதையை யியல்பா யெழுதினவன்
சந்ததிப்ப ரம்பரையைச் சாற்றுவேன் அம்மானை!
தில்லை நடேசன் திருத்தாள் மறவாமல்
மல்லைநக ரம் ஆண்டே வந்தோன் மிதுலைநகர்

யெல்லைமிகு செல்வமுடன் எந்நா ளும்வாழ்வோன்
சொல்லைப் பகுந்துபொருட் சொல்லுங் கவிவலவன்
வாதிட் டரசனுடன் வண்ணப்பாச் செய்துவென்றான்
மேதினியோர் மெச்ச விருதுமிக வாங்கினவன்!
எம்பிரான் மேவி இருக்கும் பிரான்மலைக்குச்
சம்பிர மதாயோர் தலபுராணஞ் சாற்றினவன்
சேதுபதி மன்னர் சிறப்பான தந்தையென்றே
ஓதுதமி ழைப்புனைந்து உள்ளம்மிகவே மகிழ்ந்தே
ராச சிங்கை மங்கல முன் னாளீய்ந்தாய் நம்தமிட்காய்!
ராசனே ரெண்டுமடை நான்தான மீய்ந்ததுகேள்
கன்யாகுமரி நிறை கர்த்தருக்கு ஓர்மடையும்
உன்னி மறையாள ருயர்ச்சிபெற வோர்மடையும்
ஈய்ந்துகல்லுந் தானட்டி யென்பே ரதிற்பொறித்துக்
காய்ந்துவரும் பானுமதி கண்டவரை கைக்கொடுத்தேன்
நாற்பத்தி யாறுமடை நானுள வைத்திருந்தேன்
காற்புள்ள வேந்து கவியென்மேற் சாற்றினதால்
இந்தாரும் என்று யிறைகரத்தில் பட்டயத்தைச்
சந்தோஷ மாய்க்கொடுத்து சணத்தில் நீரளித்தோன்
வணங்கா முடிக்கோன்மேல் வண்தமிழை யேசொரிய
யிணங்கமதாப் பாகனி யியல்பாக வாங்கினவன்
சிற்றம்பலக் கவிஞன் சிறந்த எங்களையனிடங்
கற்றவருஞ் சொல்லரிது, கணக்கிலடங் காததினால்!
வாங்கின பூமி வழுத்துவேன், நான்சிலது
பாங்கான பூசாரிபட்டி, செம் மலவுபட்டி,
அடுத்த புல வன்குடியு மானகவிராயர்பட்டி,
கொடுத்த கொத்த மங்கலமும், கோனாடு பட்டியுடன்,
மறவணி யேந்த லென்றும் மண்மேட்டுப்பட்டியென்றும்
திறமான செவ்வூரென்றுந் தேனாட்சி பட்டியுடன்,
காரைச்சரான் பட்டி யுங் கருகைப்பி லான்பட்டியும்
பாரையெல் லாம் ஆண்டார் புலவாய்ச் சிலவழித்தும்

மங்கைபா கன்கோவில் மணிவிளக்கு மேற்படவே
அங்கேசா யுச்சியம் அடைந்திடத்திற் கல் நாட்டிச்
சிற்றம் பலவன் சிறப்பாய்ச்சதா சேர்வை
கற்றவருங் காணவென்றே கல்லிற் பொறித்தனர் காண்!
காசிபர் கோத்திரத்தான் கருது வள்ளல் சந்தானன்
மாசில்லா சைவதுல்யன் மன்னர்மெச்ச வாழ்ந்திடுவோர்
ஆளப் பிறந்தா னிலாஞ்சனை யாய்வாழும்
வேளொப்ப னையாகும் விள்ளுசைவ ராசகுரு
தாளைவணங் கும்நேயன் தமிழ்க்கடலின் சந்ததியான்
வாளைவென்ற கண்மடவார் வள்ளிதெய்வ குஞ்சரிக்கே
கோலமண மாலைபுனை குமரவே ளின் தாசன்
ஆலமுண்டா ரோடெதிர்த்தே அம்பலத்தில் ஆடினவள்
சிங்கைப் பதியிற் சிறப்பாய்க் கொலுவிருப்பாள்
மங்கைக் கரசாம் மதிந்தசிகை வாகினி யாள்
அழகிய தேவியெந்தன் அன்னைகுல தெய்வமதை
வளம்மையாய்ப் பூப் பேற்றி வருவோந்த வறாமல்
பழமறையுந் தேடரிய பாண்டிய ரதித்தாயை
வளம்மகிழ்வ தாயவளுக் காண்டுக் கோர்தினத்தில்
மனையில்வட பாரிசத்தில் மனமகிழ்ச்சி யாய்ப் படைப்போம்.
அணை போலக் காத்திடுவாள் அவளை வணங்கிடுவான்!
அழகிய சிற்றம்பலம் மாலரருள் தவத்தால்
வளமை மிகுந்த யிந்த வங்கிசத்தி லேசிறியோன்
நவமாந் தலமுறையில் நானும் அவதரித்தேன்
சிவனார் மகவருளாற் செய்யலுற்றான் அம்மானை
மாரன் குமார சுவாமி மனமுவந்து
சார முளகதையாய்ச் சாற்றினா னிப்பூவில்
கல்விக் கடலருகே கைவாய்க்காலோடுதலாய்
வல்கெருடன் முன்னாலோர் மசகம் பறப்பதுபோல்
அஞ்சுதலை யரவம் ஆடல்கண்டு பூநாகங்
கொஞ்சி யதனுடனே கூட நின்று ஆடுதலாய்க்
கூறினே னானிது னுள் குற்ற மிருந்தாலுந்
தேறினோ ரேசிறியேன் செந்தமிழைக் கொள்வீரே!

செவ்வேல வன்வாழி! சேவற் கொடிவாழி!
மூவ்வோர்க ளும்வாழி! முனிநா தரும்வாழி!
பாடினோர்வாழி! பகுத்தறிவோரும்வாழி!
ஆடினார் மனதில் அவர் பாத மேவாழி!
தில்லைமூ வாயிரவர் திருத்தாளுந் தான்வாழி!
மல்லைக் கவிராஜன் மைந்தர்கிளை யும்வாழி!
வெண்டா மரையுறைவாள் வெள்ளைநிற மேனியினாள்
கொண்டாட்ட மாயென் குலம்வசிப்பாள் வாழியவே!

என்று குறிக்கிறது. இதிலிருந்து சிற்றம் பலக் கவிராயர் சிறந்த சிவபக்தர் என்றும், முருகவேளின் தாசர் என்றும் இராசசிங்க மங்கலத்தில் உள்ள தேவி சிங்கவாகினியை குல தெய்வமாகக் கொண்டவர் என்றும் அறிகிறோம். இப்பாடலில் சிற்றம்பலக் கவிஞர் மல்லைக் கவிராஜர் என்றே அழைக்கப் பட்டுள்ளமையைக் காணலாம். இவர் பெற்ற ஊர்களில் இரண்டு ஊர்கள் பெயர்ச் சிறப்புடையவை. புலவன்குடி என்பது ஒன்று. கவிராயர்பட்டி என்பது இரண்டாவது.

சுசீல வள்ளல் அம்மானையின் இறுதிப்பாடல்கள்

மல்லைக் கவிராஜர் மைந்தர்கிளையும் வாழி
வெண்டாமரை யுறைவாள்:வெள்ளைநிற மேனியினுள்
கொண்டாட்ட மாயென்குலம் வசிப்பாள் வாழியவே

என்பது முற்றிலும் உண்மை. கவிராயர் குடும்பத்தில் அனைவரும் சரஸ்வதி கடாக்ஷம் பெற்றவர்களாக, கவிஞர்களாகத் திகழ்ந் திருக்கிறார்கள்.

தனிப்பாடல்கள் :

சிவந்தான் மல்லைப் பல்லவராயன் என்பவன் மீது பாடியதாக மூன்று தனிப்பாடல்களை மு. இராகவையங்கார் தமது 'பெருந் தொகையில்' குறித்துள்ளார்.[3] அவை பின்வருபவன ஆகும்.

மாதாம்படியுண்டு மெய்சிவந் தான்குழல் வைத்திசைத்துச்
சேதாம்ப லங்கனி வாய்சிவந் தான்செம் மலர்த்திருவின்

சூதாங் தனங்தைத் துரஞ்சிவங் தானெவர் தூதுசென்று
பாதாம் புயஞ்சிவங் தான்சிவங் தான்மல்லைப் பல்லவனே.
(1274)

பாடுங் தமிழுக்குச் சிவங்தெழுங் தான்மல்லைப் பல்லவர்கோன்
காடுஞ் செடியுங் திரியாதி ரட்டைக் கடுக்கன்செய்து
போடும் பொழுதென்ன பூட்டக மோஅற்பப் புல்லரைக்
கொண்
டாடும் பொழுதிரு கன்னத்தி லேநின் றடிக்கின்றவே
(1275)

குளக்காவி மலர்த்தொடையான் சிவங்தெழுந்த
பல்லவனைக் கூடா நாளில்
இளக்கார மோபிரிந்த வாறுகண்டோ
நானேழை யென்று தானே
உளக்காத றாண்டுகோல் பனிநீர்நெய்
யானுறங்கு மூச னல்ல
விளக்காக வெனைத்திரியா விடியுமட்டு
மெரித்தனையே வெண்ணி லாவே. (1276)

இம் மூன்று பாடல்களையும் "பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் வாக்கென்பர்" என்று இராகவய்யங்கார் குறிப்பார். அழகர் கிள்ளை விடு தூது முதலிய நூல்களை இயற்றிய பலபட்டடை சொக்கநாதப் புலவர், சற்றேறக்குறைய 1720ல் வாழ்ந்தவர். 'முத்துவிஜயரகுநாதசேதுபதி காலத்தவர். இவரது சமகாலத்தவர் சுப்ரதீபக் கவிராயர். அவரும் 1720ல் மதுரையை ஆண்ட முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது பாடியுள்ளார்.[5] ஆனால் சிவங்தெழுந்த பல்லவராயன் என்பவன் 1650ல் அதாவது 75 ஆண்டுகட்கு முன்னம் வாழ்ந்தவன். ஆதலின் இப்பாடல்களை பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடி இருக்க முடியாது சிவங்தெழுந்த பல்லவராயன் மீது உலாப் பாடியுள்ள இந்நூல்

புலவரான சிற்றம்பலக் கவிராயரே இப்பாடல்களைப் பாடியிருக்கக்கூடும்.

மூவரையன் விறலி விடு தூது - கதை அமைப்பு :

தம்பாடலில் சிவபெருமானையும், திருமாலையும், நான்முகனையும் வணங்கிப் பின்னர் விறலியின் சிறப்பைப் பாடுகிறார். யாழிசையிலும், மிடற்றிசையிலும், நாட்டியத்திலும் சிறந்த மதங்கி என்று அவள் புகழப்படுகிறாள். மறையோன் தன் கதையைக் கூறுவதுபோல் தொடங்கி நூலின் அமைப்பு முழுவதையும் சுருக்கமாகக் கூறுகிறார். பின்னர் யாரைப் புகழ்ந்து பாடுவதற்காக இந்நூல் இயற்றப்பட்டதோ அந்தத் தலைவன் மூவரையன் என்னும் திருவேங்கடநாதன் புகழும் சிறப்பும் இடம் பெறுகின்றன. இதன் பின்னர் கதை தொடர்கிறது.

சாந்தை நகர் என்ற ஊரைச் சேர்ந்தவன் வாசுதேவ மறையோன் என்னும் அந்தணன். காசிப கோத்திரத்தில் பிறந்தவன். அவன் இரண்டு மனைவியரைப் பெற்றிருந்தான். ஒருத்தி பெயர் அபிராமி என்பது. மற்றவள் பெயர் மோகவல்லி. இருவர் வீட்டுக்கும் முறைவைத்துச் செல்லுகிறான். ஒருநாள் மோகவல்லியிடம் சென்றிருந்தபோது மறந்து மற்றவள் பெயரிட்டு அழைக்கிறான். அதனால் மோகவல்லி ஊடல் கொள்கிறாள். ஊடல் வினையாக மாறுகிறது. வாசுதேவன் வீட்டை விட்டு வெளியேறுகிறான். திருப்பதி, காளத்தி, தில்லை, திருவாரூர், திருவையாறு, திருப்பெருந்துறை, காளையார்கோயில், திருப்புல்லாணி, திருப்புணலூர், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய ஊர்களுக்குத் தலயாத்திரை செய்கிறான். இறுதியில் சீவில்லிப்புத்தூர் சென்றடைகிறான்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கோதை சன்னதியில் கீதத்துக்கு ஏற்ப நாட்டியம் ஆடும் பரிகலத்தாளான தேவரடியாள் காமகலாவாணி என்பவள் உள்ளாள். அவள் பலகாலம் குழந்தை இன்றி விரதம் மேற்கொண்டு பெண்குழந்தையைப் பெறுகிறாள். பெண் பிறந்ததால் பேருவகை கொள்கிறாள். அக்குழந்தையை சீராட்டித்

தாலாட்டி வளர்க்கிருள். வளர்க்கும் போதே அப்பெண்ணுக்குத் தன் தொழிலுக்கு வேண்டிய பொய், புனே சுருட்டு முதலியவற்றை கற்றுக் கொடுக்கிருள். அப்பெண் பருவம் அடைகிருள். அவளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் வழிகளை எல்லாம் கற்றுக் கொடுக்கிருள். வேசையைத் தேடி வருவோர் யார்? அவர்களை எவ்வாறு மயக்க வேண்டும்? எப்படி பொருள் பறிக்க வேண்டும், யாரைச் சேரக் கூடாது என்பதெல்லாம் விரிவாகக் கூறுகிருள். அப் பெண்ணின் வலையில் சிக்கித் தவித்தோர் பலர் உண்டு.

இந்த நிலை அறியாது வாசுதேவ மறையோன் அவளைக் கோயிலில் காண்கிருன். அப்பெண் இந்திராணி அங்கு அழகுற வந்து நின்று நாட்டியம் ஆடத் தொடங்குகிருள். புஷ்பாஞ்சலி தொடங்கி, வைணவ ஸ்தானத்தே நின்று, நாட்டியம் ஆடத் தொடங்கி பல ஆடல்கள் புரிகின்ருள். வாசுதேவன் அவள் மீது மையல் கொள்கிருன். அவளைப் பின்தொடர்ந்து அவளைப் பற்றி அறிகிருன். அவளைக் கூடுவதற்கு ஒரு இரவுக்கு 120 பொன். சுகந்தங்களுக்கு 10, படுக்கைக்குப் பொன் 10, தரகு செய்யும் பெண்ணுக்குப் பொன் 20, ஆக 700, 800 பொன் ஆகும் என்று அறிகிருன். வாசுதேவன் கொடுக்கிறேன் என்கிருன்.

பொன் கொடுக்கிறேன் என்று அவன் சொன்னதும் "எங்கே எங்கே" என்று எதிர் வந்தாள் இந்திராணி. அவளைத் தொடர்ந்து அவள் தாய், ஒடுங்கி ஒதுங்கி கன்னமிடும் கள்ளர் போல் வந்து நின்று 'இவன் வரவு எவ்வளவு மங்களமானது' எனப்புகழ்கிருள். "நாங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்படோம்" என்று பசப்பு கிருள். பிறகு வாசுதேவனும், இந்திராணியும் சுகம் காண் கின்றனர். கொக்கோக நூல்களில் குறித்துள்ளது போல் அமை கிறது அவர்கள் சேர்க்கை.

அவள் மோகத்தில் அவன் முழுமையாகச் சிக்கியதும் மருந்தரைத்து ஊட்டுகிருள். பின்னர் வாசுதேவனிடம் பணம் பறிக்க வழிசெய்கின்றனர். பல காரணங்களைக்கூறி வாசுதேவ னிடம் பணம் கறக்கின்றனர். இவனிடம் இனிப் பணம் இல்லை

என்று அறிந்ததும் இவனை விரட்ட வழி செய்கின்றனர். இதனால் வெறுத்து வாசுதேவன் மாமியை பலவாறு திட்டுகிறான். தாய்க் கிழவி வாசுதேவனை வெளியே துரத்துகிறாள். இருவருக்கும் சண்டை மூள்கிறது. நீதி மன்றத்துக்கு வழக்கை எடுத்துச் செல்கிறாள் கிழவி. வழக்கை கோயில் ஸ்தானிகர், கொத்துக் கணக்கு முதலியோர் விசாரிக்கின்றனர். முதலில் தாய்க்கிழவியே வழக்கை எடுத்துரைக்கிறாள். இவனால் எமக்கு எவ்வித லாபமு மில்லை என்கிறாள். தன் பெண்ணை இவன் மருந்திட்டுக் கெடுத்த தாகக் கூறுகிறாள். பின்னர் வாசுதேவன் தன் பக்கம் கூறுகிறான். நீதிமன்றத்தார் அவனுக்குப் புத்திமதி கூறி வேசையிடம் கொடுத்த பணம் மீளாது என்று பலபடச் சொல்லி அவனை ஊருக்குப் போகும்படியும் அவன் வழக்குத் தோற்றது என்றும் கூறுகிறார்கள்.

மனம் நொந்து வாசுதேவன் திரும்புகிறான். திரும்பும்போதும் அவன் மனம் அப்பெண்ணை நினைந்து ஏங்குகிறது. பிறகு அய்யோ நான் இவளுக்குக் கொடுத்ததை நல்ல காரியம் செய்திருந்தால் பயனுண்டே, புண்ணியம் உண்டே என எண்ணி வருந்துகிறான். வரும் வழியில் பவனி வரும் வீரை வேங்கடநாதனைக் காண் கிறான். அவனுக்கு 'செய விசய மங்கள கல்யாணம்' என்று போற்றுகிறான். மூவரையன் வாசுதேவனின் புலமையை அறிந்து அவனுக்கு பொருள் அளிக்கிறான்.

மூவரையனிடம் பொருள் பெற்றுத் திரும்பும் வாசுதேவன் விறலியைக் கண்டு, தன் மனைவியரிடம் தன் வரவைச் சென்று எடுத்துரைக்கக் கூறுகிறான். அதுவே இந்நூலுக்கு 'மூவரையன் விறலி விடு தூது' எனப் பெயர் அமைய ஏதுவாகிறது. இறுதி யில் வாசுதேவன் தன் மனைவியருடன் இணைந்து வள்ளலாகிய மூவரையனை வாழ்த்துகிறான் என நூல் முடிகிறது,

இந்நூலின் அமைப்பு, பெரும்பாலும் இதற்கு முன்னர் எழுதப் பெற்ற தெய்வச் சிலையார் விறலி விடு தூது என்னும் நூலின் அமைப்பையே பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்

'தெய்வச் சிலையார் விறலிவிடு தூதை' அறிந்திருப்பாரா என்று கூற சான்று இல்லை. இருப்பினும் திருநெல்வேலிக்கருகில் கிருஷ்ணபுரத்தை மையமாகக் கொண்டு அந்நூல் பாடப்பட்டுள்ளதாலும், இந்நூலும் திருநெல்வேலிக்கருகில் வீரவ நல்லூரை மையமாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளதாலும், இரண்டு நூல்களும் 50 ஆண்டுகளுக்குள் எழுதப்பெற்றவை ஆதலாலும், தெய்வச்சிலையார் தூது இவ்வாசிரியருக்குத் தெரிந்திருக்கக்கூடும் என்று கொள்வதில் தவறில்லை.

விறலி விடு தூது வரலாறு :

கால அடிப்படையில் சில விறலி விடு தூது நூல்கள் கீழ்க் கண்டவாறு இயற்றப்பட்டுள்ளன.

கி. பி. 1600 "தெய்வச் சிலையார் விறலிவிடு தூது":—திருநெல்வேலி வாசல் காரியகர்த்தராய் இருந்த தெய்வச் சிலையார் என்ற பிரபுவினைப் புகழ எழுதப்பட்டது. ஆசிரியர் குமாரசுவாமி அவதானி என்பவர். 1936-ல் சென்னை திருஞானமுத்திரைக் கோவை வரிசையில் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் முழுமையாக பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1650 'மூவரையன் விறலி விடு தூது':—வீரவ நல்லூர் வீரைத் திருவேங்கடநாதன் என்பவரின் சிறப்புகளைப் புகழ எழுதப்பட்ட நூல். மல்லையூர் சிற்றம்பலக் கவிராயரால் எழுதப்பட்டது. இப்பொழுதுதான் பதிப்பிக்கப் பெறுகிறது. அக்காலம் ஆண்ட அரசர்-மதுரை திருமலை நாயக்கர்.

கி. பி. 1710 'செண்டலங்காரன் விறலி விடு தூது':—அக்கால அரசன்-தஞ்சாவூர் மராட்டிய மன்னர் சகோசி. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. சகோசி அரசனின் கிராம மணியத்து அட்டவணை அதிகாரி செண்டலங்காரன் மீது பாடியது. பதிப்பாசிரியர் புலவர் கோவிந்தராசனார். சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர். 1969.

கி.பி. 1720 "நாகம கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது":—நிலக்கோட்டை பாளையப் பட்டு கூளப்ப நாயக்கர் மீது பாடப் பெற்றது. அக்கால அரசர் மதுரை நாயக்க மன்னன் முத்து விஜயரங்க சொக்கநாத நாயக்கர். நூலாசிரியர்: சுப்ரதீபக் கவிராயர். பல பதிப்புகள் வந்துள்ளன. 1948. சரவணப் பெருமாள் அய்யர், சென்னை. 1949-ல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் காரைக்குடியில் பதிப்பித்துள்ளார். ராய. சொ அவர்கள் பதிப்பில் இடையில் பல பகுதிகள், குறிப்பாக சம்போக லீலை கூறும் பாடல்கள் அரசாங்க ஆணைப்படி நீக்கப்பட்டு பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

கி. பி. 1770 'சிவசாமி சேதுபதி விறலி விடு தூது':—இராமநாதபுரம் சேதுபதி, முத்து விஜயரகுநாத சேதுபதிக்கும் முத்து வீராயி நாச்சியாருக்கும் பிறந்த விஜய ரகுநாத சிவசாமி சேதுபதி மீது பாடியது. இந்நூலை இயற்றியவர் சரவணப் பெருமாள் என்று தெரிகிறது. பதிப்பாசிரியர் சிரஞ்சீவி.

கி. பி. 1804 'நண்ணூர் சங்கமேசுர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடு தூது':—இயற்றியவர் வரதபாரதி முத்தையர். பதிப்பாசிரியர்: வித்வான் வீ. சொக்கலிங்கம். ஆண்டு: 1969. சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

தெய்வச் சிலையார் விறலி விடு தூது:

1577ஆம் ஆண்டு, [6]மதுரை வீரப்ப நாயக்கர், கிருஷ்ணபுரம் கோயிலுக்கு தன் தந்தையின் நன்மையின் பொருட்டு தானம் கொடுத்துள்ளார். வீரப்ப நாயக்கரின் காரியகர்த்தராக வீரராகவ முதலியார் பணிபுரிந்திருக்கிறார். வீரராகவ முதலியாரின் தம்பி வேலு முதலியாரின் மச்சுனர் தெய்வச் சிலையார். இவர் கிருஷ்ணபுரத்துக்குச் செய்த திருப்பணிகள் சற்றேறக் குறைய 1600 செய்யப்பட்டவை என்று கொள்ளலாம்.

தெய்வச்சிலையார் விறலி விடு தூதைப் பதிப்பித்த எல். வையாபுரி பிள்ளை, கிருஷ்ணபுரம் கோயில் கட்டியது குறித்து கீழ்க்கண்டவாறு குறிக்கிறார்: "கிருஷ்ணபுரம் கோயிலைக் கட்டியவர் கிருஷ்ணப்ப நாயக்கர் என்று சதாசிவராயரின் செப்பேடுகள் கூறுகின்றன, ஆனால் இதைக் கட்டியவர் மயிலேறும் பெருமாள் முதலியார் எனத் தலத்தில் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன," என்று குறித்துள்ளார். இதைப்போல் மதுரையில் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவர் அரியநாயக்க முதலியார் எனக் கர்ண பரம்பரைச் செய்தியும், வீரப்ப நாயக்கர் என்று திருப்பணிமாலையும் கூறும். வரலாற்று அடிப்படையில் இதில் எவ்வித முரண்பாடும் இல்லை. வீரப்ப நாயக்கரின் கீழ் காரியகர்த்தராக தளவாய் அரியநாத முதலியார் இருந்தார். அரசன் தன் பெயரால் பணி நடத்துகிறான். அதை அவனது காரியகர்த்தர் முன்னின்று மேற்பார்வையிட்டு முற்றுவிக்கிறார். இதையே வரலாற்றுச் சான்றுகள் அரசன் செய்ததாகக் குறிக்கும். அதுபோலவே கிருஷ்ணபுரம் பணி செய்வித்தது கிருஷ்ணப்ப நாயக்கரே. சதாசிவராயரின் செப்பேடுகள் அதைத்தான் கூறுகின்றன. மயிலேறும் பெருமாள்' செய்ததாக தெய்வச் சிலையார் விறலி விடுதூது குறிப்பது, அவர் காரியகர்த்தராக பணி முடித்ததைக் குறிக்கிறது. இப்பணி ஏறக்குறைய 1565ல் நடைபெற்றதெனலாம். மயிலேறும் பெருமாள் செய்த பணிகள், கிருஷ்ணபுரம் அமைத்தது, வேங்கடவர்க்கு கோயிலமைத்தது, திருச்சுற்றுமதிள், கோபுரம், தேர் அமைத்தது முதலியவாகும். 'சதாசிவராயரின் தாம்பர சாஸனம்' எழிலார்ந்த ரங்க மண்டபத்தையும், தேரோடும் வீதியையும் செய்ததாகக் குறிக்கிறது.

தெய்வச்சிலையார் செய்த பணிகள் காலத்தால் பிற்பட்டவை என்பதில் ஐயமில்லை. "அந்நாளிலாண்ட அரிய நயினான் மகிபன் தன்னருயிர் மருகன்" என்று பாடலில் உள்ளதைக் காணும் போது இது முன்னர் நடந்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது. தெய்வச்சிலையார் செய்த பணிகள் வீரப்ப நாயக்கர் காலத்திலோ அல்லது சற்றுப் பின்னரோ நடந்திருக்கவேண்டும். கி. பி. 1600ல்

இது முடிந்திருக்கலாம். ஆதலின் தெய்வச்சிலையார் விறலி விடு தூதும் ஏறக்குறைய கி. பி. 1600ல் தோன்றிய நூல் என்பதில் ஐயமில்லை ஆதலின் "இந்நூல் 16ம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் இயற்றப்பற்றிருக்கவேண்டும்" என்று எஸ். வையாபுரி பிள்ளையவர்கள் கூறியுள்ள கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள விறலி விடு தூதுகளில் இது தொன்மையானதாக உள்ளது. ஆதலின் இதன் அமைப்பைச் சற்று ஆராய்தல் இன்றியமையாததாகும்.

இந்தப் பாட்டுடைத் தலைவன் தெய்வச்சிலைதாதன் என்பவன். அவன் திருநெல்வேலி சீமையை மதுரை நாயக்க அரசர்களுக் காகக் காரியம் பார்த்து வந்தவன். வாசல் நிர்வாகம் என்பது அப் பதவியின் பெயர். அவன் சிறப்பையும் அவன் கொடையையும் புகழும் நூல் இது. அதற்குப் பின் அந்தணன் விடும் விறலி விடு தூது அமைகிறது. இத்தூதில் திருச்செந்நூர் நடலிங்கபட்டன் என்ற அந்தணன் வருகிருன். அவன் மாமனுர் அவனை ஒரு நாள் இழிவாகப் பேசவே, தன் மனைவியையும் குழந்தையையும் விட்டு வெளியேறுகிருன். மனைவி தனித்து வாடுகிருள். பல நாட்கழித்து நடலிங்கன் திரும்புகிருன். அவன் மனைவியைக் கண்டு வந்த விறலி, நடலிங்கனை எதிரே காண்கிருள். அவளிடத்தில் அவன் சங்கரநாயனுர் கோயிலில் ஒரு வேசையிடம் சிக்கி காமவேட்கை யால் பொருளிழந்து பட்ட பாடு சொல்கிருன். சங்கர நாயனுர் கோயில் பெண்ணிடம் சிக்குவதன் முன்னர் நல்ல எண்ணத்துடன் தான செல்கிருன். கிருஷ்ணபுரம், நெல்வேலி, திருப்புடைமருதூர், பிரமதேசம், பாபநாசம், புன்னைவனம் ஆகிய ஊர்களுக்கு செல்கிருன். புன்னைவனநாதர் சித்திரைத் திருவிழாவில் நான்காம் நாள், மீண்டான் திருவாசலில் மணி மண்டபத்தில் தான் அப் பெண்ணைக் காண்கிருன். அவள் கையில் தட்டேந்தி வளையமாக வந்தாள். அவள் இராசசிங்கமங்கலம் கோயிலில் பரிகலத்தைச் சேர்ந்தவள். அதிரூபரத்னம் என்ற பெயர் பெற்றவள்.

அவள் மீது மையல் கொண்டு அவள் வீட்டுக்குச் செல்கிறான். அவனுக்குப் பலமான வரவேற்பு கிடைக்கிறது. அவளோடு காம சுகம் துய்த்தான். அவனது மன்மத லீலை கொக்கோக நூல்களில் கூறியுள்ளபடி அமைந்துள்ளது விருவிருப்பாகவும் கூறப் பட்டுள்ளது. அவளுக்கிரவுக்கு கொடுத்தது 80 பொன். அவ்வாறு அவள் மையலில் அவன் சுகித்து இருக்கும் நாளையில் மானூரை சார்ந்த கோதண்டன் என்பவனின் நட்பு தோன்றுகிறது. கோதண்டன் அவ்வேசையான அதிரூபரத்தினத்தின் தமக்கை மோகவல்லி என்பவள் வசம் சிக்கி துயருள் உழன்றவன். அவன் அதிரூபரத்தினத்தின் பிறப்பு வளர்ப்பும், அவள் தாயிடமும், தமக்கையிடமும் தான் பட்டபாடும். வேசையரிடம் சிக்கினால் படும் துன்பமும் கூறுகிறான். இதில் அப்பெண்ணின் பிறப்பும், அவள் வளர்ந்த நிலையும், தாயின் வேசைத் தொழிலுக்குகேற்ப புத்திமதி கூறலும், கோதண்டன், நடலிங்கனுக்கு கூறுவதாக அமைகிறது. கோதண்டன் புத்திமதி நடலிங்கன் செவியில் ஏற வில்லை. வேசை மயக்கி அனைத்துப் பொருளையும் பிடுங்குகிறாள். மருந்து கூட்டி மயக்குகிறாள். வில்லிபுத்தூர் விழாவுக்கு அழைத்துச் சென்று பல விலையுயர்ந்த பொருள்களை வாங்கிக் கொண்டு இவன் பொருள் கட்டும்படி செய்கிறாள். அவனிடம் பொருள் தீர்ந்தது என அறிந்ததும், அவனை விரட்ட வழி காண்கிறாள். அவனுடன் சேர மறுக்கிறாள். வெறியடைந்த நடலிங்கன் அவளை உதைக்கிறான். அவள் தமக்கையை அறைகிறான். வேசை, கூட்டம் கூட்டுகிறாள். அவன் மீது வழக்குத் தொடுக்கிறாள். கேட்டவர்களை மன்னவர்கள், என்றும் நாயன்மார் என்றும் அழைக்கிறாள். வழக்குக்கேட்டவர்கள் வேசையை அடித் தது குற்றம் என்பதோடு அவன் அவளை விட்டுச் சென்று விட வேண்டும் என்கின்றனர். கோதண்டனின் கதியை கூறுகின்றனர். பிறகு நடலிங்கனும் கோதண்டனும் திருநெல்வேலி சென்று கிருஷ்ணபுரத்து தெய்வச்சிலையாரைக் காண்கின்றனர். தெய்வச் சிலையார் உலா வருகிறார். அவருடன் வருவோர் குறிக்கப்படு கின்றனர். அவரைக் கண்டு விசையீபவ என்று கூறுகின்றனர். அவனிடம் தனித்துத் தங்கள் இடர்களை கூறுகின்றனர். அவன்

பெரும் பொருள் கொடுக்கிறான். அதைப் பெற்று திரும்புகின்றனர். அப்பொழுதுதான் விறலி காண்கிறாள். அவளை தன் மனையா ளிடம் சென்று பக்குவமாய் எடுத்துக்கூறி தூதுவிட, அவளும் மனையாள் எதிர்வந்து மணாளனை வணங்கி ஏற்றுக் கொள்கிறாள். இது கதையின் அமைப்பு.

இதில் சில அங்கங்கள் வரையறுக்கப் பெறுகின்றன. பாட்டுடைத்தலைவனின் புகழ்ச்சி, அறிவில் சிறந்த அந்தணன் வீட்டில் கோபித்து மனைவியை துறந்து வெளியேறல், புண்ணிய இடங்களுக்கு செல்லல்,

வேசை மையலில் சிக்கல்

வேசை கோயிலில் ஆடும் குலத்தவள்.

அவளது பிறப்பு

அவளைத் தாய் வளர்த்தது

வேசைத் தொழிலில் ஈடுபடுத்தியது

இருவரும் சம்போகம் கொக்கோக மரபில் செய்தல்

மருந்திடல்

பணம் பறித்தல்

விழாவிற்கு இட்டுச் சென்று பொருள் வாங்கிப் பணம் பிடுங்குவது.

விரட்ட வழிகாணல்

மாமியைத் திட்டல்

வழக்குத் தொடுத்தல்

தீர்ப்பு.

பாட்டுடைத்தலைவனைக் கண்டு பொருள் பெற்று விறலியைத் தூதுவிடல்.

மனையாளுடன் புத்தி வந்து சேர்தல்.

என்பன விறலி விடு தூதின் அங்கங்கள்.

இதை இயற்றிய குமாரசாமி அவதானியையே பெரும்பாலும் பின் வந்தவர்கள் பின்பற்றியுள்ளனர்.

விறலி விடு தூது-ஒப்பு நோக்கல் :

விறலி விடு தூது அனைத்தும் பாட்டுடைத் தலைவனின் சிறப்பைப் புகழவே எழுதப்படுகின்றன. அனைத்து விறலி விடு தூதுகளிலும், அந்தணனே மனைவியைப் பிரிந்து வேசை வசப் படுகிறான். சம்போக சிருங்காரம் பச்சையாகப் பாடப்படுகிறது. வேசையர் கையாண்ட வழிகளும் யுக்திகளும் இடம் பெறுகின்றன. மருந்து கூட்டும் முறை கூறப்படுகிறது. தாய்க்கிழவியை ஏசுதலும் வழக்காடுதலும் இடம் பெறுகின்றன. இவ்வாறு ஒரு இலக்கியத்தைப் படைக்க முன்னோடியாக அமைந்த முதல் நூல் எது எனத் தெரியவில்லை. தெய்வச்சிலை விறலிவிடு தூது தோன்றிய ஒரு நூற்றாண்டுக்குள்ளாக பலபுலவர்கள் ஆங்காங்கே இருந்த தலைவர்களை மையமாகக் கொண்டு விறலி விடு தூதை இயற்றி யுள்ளனர். இதில் இரண்டாவதாகக் காணப்படுவது “மூவரையன் விறலி விடு தூது” என்னும் இங்குப் பதிப்பிக்கப்படும் நூலாகும்.

முதல் நூலுக்கும்வழிநூலுக்கும் ஒற்றுமை வேற்றுமை-ஆய்வு :

மூவரையன் விறலி விடு தூதை இயற்றிய புலவர் மல்லையூர்ச் சிற்றம்பலக் கவிராயர் என்று சுவடி கூறுகிறது. அவர் திருமலை நாயக்கர் காலத்தவர். அவரைப் பற்றி விரிவாக நூலாசிரியர் என்ற தலைப்பின் கீழ்க் காணலாம். இந்நூல் கி.பி. 1650 (அதாவது தெய்வச்சிலையார் விறலி விடு தூதுக்கும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு) எழுதப்பட்டது. இந்நூலின் அமைப்பில் ஒரு சில மாற்றங்களே உள்ளன. (1) தெய்வச்சிலையார் விறலி விடு தூதில் வேசையிடம் சிக்கி உழன்றவர்கள் இருவர். ஆனால் இங்கு ஒருவரே குறிக்கப்படுகிறார். ஆதலின் இந்நூலில் பாத்திரப் படைப்பு கட்டுக்கோப்பாக அமைகிறது. (2) தெய்வச்சிலையார் விறலி விடு தூதில் மாமன் மருமகனை இழிவாகப் பேச, அவன் மனைவியைத் துறந்து வெளியேறுகிறான். இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகத்தான் படுகிறது. ஆனால் மூவரையன் விறலி விடு தூதில் அந்தணனுக்கு இரண்டு மனைவியர். ஒருமனைவியுடன் இன்பம் துய்க்க வரும்போது மற்றவள் பெயரை அழைக்கிறான்:

ஆதலால் அவள் ஊடுகிருள். பிரணயகலகமே அவர்கள் பிரிவுக்குக் காரணமாகிறது. இந்த அமைப்பு நூலின் இன்பச் சுவைக்கு ஏற்ப அமைந்துள்ளது. (3) தெய்வச்சிலேயார் விறலி விடு தூதில் வேசையின் தாய் கருவுற்றுப் பெண் பிள்ளே பெற்றதை ஒரே கண்ணியில் முடித்து விடுகிருர். ஆனுல் மூவரையன் விறலி விடு தூதில் பெண் கருவுற்ருல் அவள் உடலில் ஏற்படும் மாற்றங்களே விரிவாக விவரிப்பதுடன், அப்பெண்ணேத் தாலாட்டி அணிகலன்கள் பூட்டி வளர்ப்பதையும் நூலின் கட்டுக் கோப்புக்கு ஏற்ப அழகுறச் சொல்கிருர். (4) தெய்வச்சிலேயார் விறலி விடு தூதில் வேசைப் பெண்ணேச் சித்தரிக்கும்போது அவள் கோயில் பரிகலத்தார் குடி என்பதைத் தவிர அவள் வேசை என்ற சித்திரமே நம் கண் முன் நிற்கிறதே ஒழிய, அவளது கலேயாற்றல் ஏதும் கூறப்படவில்லே. ஆனுல் மூவரையன் விறலி விடு தூதில் அவள் மிகச் சிறந்த நாட்டியப் பெண் என்பதற்கு ஏற்ப அவளுக்கு இசையில் இருந்த வல்லமையும், நாட்டியத்தின் வல்லமையும் கூறப்பட்டுள்ளன. நாட்டியக்கலேயில் புஷ்பாஞ்சலி முதல் அவள் ஆடியது சுட்டப்படுகிறது. வைஷ்ணவ ஸ்தானம், பதாகக்கை முதலிய நுண்கலேச் சொற்கள் இடம் பெறுகின்றன. ஆதலின் நாட்டிய வரலாற்றை அறிய இது மிகவும் சிறந்த நூலாக அமைகிறது. (5) சம்போக லீலேயை விவரிப்பதில் இரண்டு நூல்களும் ஒன்ருகவே உள்ளன. (6) தெய்வச்சிலேயார் விறலி விடு தூதில் வழக்கு உரைப்பது மிகவும் சுருக்கமாக உள்ளது. ஆனுல் மூவரையன் விறலி விடு தூதில் அது விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. தெய்வச்சிலேயார் விறலி விடு தூதில் அந்தணன் நீதிமன்றத்தார் பிரித்து அனுப்பிய பிறகு அவ் வேசையை அடியோடு மறந்து சென்று விடுகிருன் அவ்வேசையும் பாடலில் இருந்து மறைந்து விடுகிருள். ஆனுல் மூவரையன் விறலிவிடு தூதில் அந்தணனே மன்றத்தார் கடிந்து பிரித்துப் புத்தி சொல்லி அனுப்புகின்றனர். வேசையின் இழி குணங்களினுல் அல்லல்பட்டு மன்றம் ஏறித் திரிந்த பின்னும் தன்னூர் செல்லும் போதுகூட அந்தணனுக்கு அவள் நினேவு வருகிறது. அவளோடு தான் சுகித்திருந்தது நினேவுக்கு வருகிறது. மனம் பேதலித்து

ஏங்குகிறது. இது மனோதத்துவத்துக்கு ஏற்பவும் நூலின் தன்மைக்கு ஏற்பவும் அமைந்துள்ளதால் இன்பச் சுவையை மேலும் சிறக்கச் செய்கிறது. ஆதலின் பின்னர் எழுதப்பட்ட கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது முதலியவற்றில் இதே அமைப்பில் காமுகனின் ஏக்கம் பின்பற்றப்படுகிறது.

திருக்குறளைச் சிறப்பிக்க எழுந்தது இந்நூல்
கவிராயருக்கு வள்ளுவர்பால் பற்று :

மூவரையன் விறலி விடு தூதை இயற்றிய சிற்றம்பலக் கவிராயர், வள்ளுவரின் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதையே வாழ்க்கை நெறியாகக் கருதியவர் என்று கூறலாம். நூலின் தொடக்கத்தில்

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்று தொடங்குகிறார். நூலின் இறுதியில்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தான் என்று
ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்று முடிக்கிறார். செவிச் செல்வமாகிய கல்வியே அனைத்திலும் தலையாயது. அதன் பயன் நல்ல இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல். அவ்வாறின்றி கல்வி கற்றிருந்தும் நெறி நில்லாமற் செல்வார் எவ்வாறு அல்லல் உறுவர் என இந்நூல் வழி எடுத்துக் காட்டி, நல்வழிப்படுத்தலை குறிக்கோளாகக் கொண்டது இவ் விலக்கியம் எனத் தெளிவாகச் சுட்டுகிறார். இந்நூலில் காமம் மிகுந்து இன்பச் சுவையின் வழியே இருப்பினும், இறுதியில் அறத்தின் ஆறு ஒழுகி வீடு பேறெய்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பது ஆசிரியர் குறள் பாக்களை அமைத்துள்ள முறையாலே விளங்குகிறது. குறளின் வழி இந்நூல் எனக்கொள்க. அதே போல வாழ்த்துப் பாடலில் "படை, குடி கூழ்" என்று பாடியுள்ளதும் வள்ளுவர் சொல்லைப் பின்பற்றியே, என்பதில் ஐயமில்லை.

சிற்றம்பலக் கவிரரயர் குடும்பமே திருவள்ளுவரின் திருக்குறளில் ஈடுபட்டு அதை வாழ்க்கை நெறியாகக் கொண்டார் எனலாம். அவர் குடிப்பிறந்த குழந்தைக் கவிராயர் தாம் இயற்றிய 'மான் விடு தூதில்' :

"சிற்றின மஞ்சாப் பெருமை . . . . ."
"அரிய வற்றுள் எல்லாம் . . . . ."
"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் . . . ."
"தொகச் சொல்லித் தூவாத . . . ."

என்ற நான்கு குறள்களை முழுமையாகப் பாடலில் வைத்துள்ளார் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

நூல் ஆய்வு :

ஆசிரியர் சிறந்த சிவபக்தர் என்று பிற சான்றுகளால் கண்டோம். இந்நூலையும் நிலாமாலைச் செய்யோனுகிய சிவபெருமானைத் துதிப்பது போல் தொடங்குகிறுர். இவர் "செல்வத்துட் செல்வம் ...... தலை" என்ற குறளை இந்நூலில் முதலில் சேர்த்துள்ள முறையே புதுமையாக உள்ளது. விறலியைப் பாடுகிறுர். விறலி 'யாழை இசைத்து' இன்பம் அளிப்பவள். "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்——தலை' எனக் குறளை பயன்படுத்துகிறுர். (கல்விச் செல்வத்தின் சிறப்பு இரண்டாவது பொருளாக இங்கு ஆக்கப்பட்டுள்ளது) அதுமட்டுமல்ல. அந்த இசைச் செல்வத்தை "கான நெறி" என்கிறுர். இச்செல்வத்தை சிவன், திருமால், நான்முகன் முதலிய எல்லாரும் போற்றுகின்றனராம். செவிச் செல்வத்தின் சிறப்பும் இதனல் பெறப்படுகிறது. குறளையே எல்லோரும் போற்றுகிறுர்கள் என்பதும் பெறுகிறேம். 'எல்லா தெய்வங்களும் போற்றுகின்றனர் எனப் பலபொருள் தொனிக்க, இசை, கல்வி, குறள் ஆகியவற்றின் பெருமையைப் பாடியுள்ளது ஆசிரியரின் சிறப்புக்கு எடுத்துக் காட்டு.

ஆசிரியர் சிவந்தெழுந்த பல்லவராயன் உலா பாடியவர். பல்லவராயர்கள் தொண்டைமான் வழியினர். இவர்களில் கருணகரத் தொண்டைமான் புகழ்பெற்றவன். கருணகரத் தொண்டைமான் கலிங்கத்தை வென்று 'கலிங்கத்துப் பரணியில்'

புகழப்பட்டவன். இதைச் சிற்றம்பலக் கவிராயர் 'சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் ......

காவிரிநாடன் கலிங்கத் தமிழ்ப் பரணி
பாவினில் வீறுமொழிப் பல்லவனும்''

என்று பாடுகிறார். ஆதலின் ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணி கவிராயரை மிகவும் கவர்ந்துள்ளது என்பது தெளிவு. கலிங்கத்துப் பரணியில் சுவையாக உள்ள பல பகுதிகளில் பேய்களைப் பற்றிய பாடல்களும் உள்ளன. அப்பாடல்களின் சாயல்போல மிகவும் சுவையாக இங்குப் பேய்களைப் பாடுகிறார்.

''கூ'' வென்று கூளி நின்று கூத்தாடக் கூத்தாடத்
தாவென்று மோட்டலகை தாள மொத்த—ஆவென்று

முக்கிக் கொழுப்பை முரட்டுக் கரட்டெலும்மை
விக்கிக் கிழப்பேய் விறைத்திருப்ப—அக்கனிப்பு

தேக்கிப் படபடென சிற்சில பேய் பச்சை ரத்தம்
தாக்கிக் கிறுகிறுத்துத் தள்ளாட—நாக்கு

குளறக் குடினை குரவை மறலி
களறக் கிளரக் கவந்தம் அழறவே''

என்றுள்ளது காணலாம்.

பெண் கருப்பம் உற்றபோது உடலிலே ஏற்பட்ட மாற்றங்களை அழகாக

"——பைந்தொடிக்கு
மெய் பசந்து செவ்வாய் வெளிறி முலைக்கண் கறுத்து
மைபரந்த கண் துளையும் வட்டணிப்ப—பையவயறு
உந்தவே உந்திமெதப்ப ஒரு தெய்வம்
தந்த கருப்பம் தரித்திடலும்''

என்று வர்ணித்துள்ளார். தேவடியாள் ஆதலாலும், யாருக்கும் கருப்பம் தரித்தாள் எனக் கூற ஒண்ணாது ஆதலாலும், "தெய்வம் தந்த கருப்பம்''என்பது காண்க. பெற்ற பெண்மகவைச் சீராட்டித் தாராட்டுவதை மிகவும் சுவையாகத் தாலாட்டுப் பாட்டுப் போலவே கவிராயர் பாடியுள்ளது காணத்தகும்.

"நாட்டிலே
தாராட்டித் தெட்டிப் பணம் பறிக்கும் கீர்த்தி சொல்லி
தாராட்டிச் சீராட்டித் தான் வளர்த்தாள்—சீராக
வாராதாரார் வந்து உன் மையலுக்குள் ஆகாதார்
ஆரார் ஆரார் என்று தாராட்டினுள்"

வேசைப் பெண்கள் என்ன என்ன கற்றனர் என்றும் கவிராயர் குறிக்கிருர். கல்வியை நன்கு கற்றனர். சங்கீத நிலே எல்லாம் சாதகம் செய்தனர். பரத நாட்டியம் முழுமையும் கற்றனர். அத்துடன் காம வித்தையையும் சிறக்கக் கற்றனர் என்கிருர். அப் பெண் பருவம் அடைந்ததும் ஏற்பட்ட துடிதுடிப்பை

"நண்ணிப் புடைக்குமுன்னே நாகக் குருளேயைப் போல்
கண்ணில் பரபரப்புக் காட்டினுள்".

என்று கூறுகிருர். ஆசிரியர் கொக்கோக சாத்திரத்தில் சிறந்திருந்தார் என்பதை அப்பகுதி சுட்டும்.

வாசுதேவ மறையோன் தலதரிசனங்கள் செய்துவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலே வந்து வடபத்ரசாயிப் பெருமாளேயும் தாயாரையும், கோதையையும் வணங்கித் திருவாய்மொழி கூறி நிற்பதாக வர்ணிக்குமிடத்து ஆசிரியரின் பக்திப் பரவசம் வெளிப்படுகிறது.

"உததி கடைந்த ஒரு பரனேக் கோட்டு
மதவிகடஞ் சொன்ன மாலே—நிதனே
வடபத்ரசாயியை என் மாதாவைக் கோதை
விடபத்ர சாயல் விழிமின்னே—திடபக்தி
கொண்டு பணிந்து குழைந்து குழைந்துருகி
கண்டு திருவாய்மொழி கழறி—பண்டை
விதிப்பந்த நூறி விதிர் விதிர்த்து ஆனந்த
நினைப்பந்தம் போய் தனியே நின்றேன்."

என்று ஆசிரியரின் தெய்வீக பக்தி அனுபவம் வெளிப்படுகிறது.

நாட்டியம் :

விறலி விடு தூது இலக்கியங்களில் இசை பற்றியும் நாட்டியம் பற்றியும் பல குறிப்புகள் வருகின்றன. இதை

இரண்டு விதமாகக் காணலாம். (1) விறலியை வர்ணிக்கும் போது அவளுக்கு இசையிலும், யாழ்வாசிப்பதிலும் வல்லமையும் நாட்டியத்தில் சிறப்பையும் கூறுவர். (2) இரண்டாவதாக வேசைப் பெண்ணாக வருபவள் கோயிலில் நாட்டியமாடும் தேவ ரடியாளாகக் காணப்படுவதால் அங்கு விரிவாக இசை நாட்டியத்தைப் பற்றிய செய்தி காண்கிறோம்.

(1) இந்நூலில் விறலியை வர்ணிக்கும் இடத்தில் பிரமன், திருமால், சிவன் ஆகிய அனைத்துக் கடவுளரும் கூட விரும்பி கான நெறியைப் போற்றுகின்றனர் எனறு கவிராயர் பாடுவது அவருக்கு இசையின்பால் உள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்து கிறது. சிற்றம்பலக் கவிராயரே பல வண்ணங்கள் இயற்றியுள் ளார். மூவரையன் மீது கவிராயர் பாடிய வண்ணங்கள் கிடைத் துள்ளன. இவை நாட்டியத்துக்குப் பாடப் பெறும் பாடல்கள். ஆதலின் கவிராயர் இசையில் தேர்ச்சி பெற்றவர் என்பதும் பெறப்படுகிறது. ஆதலால்தான் இந்நூலில் "எல்லோரும் நேசிக்கும் கான நெறி" என்கிறார். விறலியை "பொங்கு இசையின் தேறல் செவிவாய் மடுப்ப ஊட்டும் மதங்கி" என்று கூறுகிறார். பத்துக் கண்ணிகளில் (3-13) இசையின் சிறப்பையும் விறலியின் வல்லமையையும் புகழ்கிறார். "கீதம் தரும் பாட்டியல் உரைக்கத் தக்கவள் நீ" என்று கூறுகிறார். விறலி பண் பாடுவதில் வல்லவள் என

"பெண்பாடினி நீ பிரிகைக் கிளைகூட்டிப்
பண் பாடல் உந்தன் பரிசன்றோ"

என்று கூறுவதும் அவள் நாட்டியத்தில் வல்லவள் என

"......................... பூச்செங்
கரதத்தையே நடனங்கற்ற நீ மற்றப்
பரதத்தையும் கேட்கப்படாதோ"

என்று கூறுவதும்இதையே காட்டுகிறது.

(2) தேவரடியாள்ப் பெண்ணாகிய இந்திராணி இளம் வயதில் சங்கீதம் சாதனை செய்தாள் என்றும் பரதவிதமத்தனையும் கற்றாள் என்றும் கூறுகிறார்.

"...................................... செஞ்சொல்
கலை எல்லாம் கற்றுக் கிடந்தாள் சங்கீத
நிலைஎல்லாம் சாதித்து நின்றாள்—துலையாப்
பரதவிதம் அத்தனையும் பார்த்தாள்"

என்று பாடுகிறார். இவளுக்குத் துணையாகக் குனிதாளத்தட்டன், சங்கீதப்பட்டன், நட்டுவனார், அண்ணாவி முதலியோர் இருந்தனர் என்று (149–151) கூறுகிறார். அப்பெண் கோதை முன்னே வந்து நின்று இசைக்கு ஏற்ப புஷ்பாஞ்சலி தொடங்கி, நாட்டியம் ஆடி முடித்ததைக் கூறுகிறார். தாளம் தவறாது ஒலிக்க, தனம் கனிப்ப, தித்தி ஒத்து என்னும் வாத்தியம் 'பொம்' என்று ஊத, கானம் இழைக்க சங்கிதஸ்தான நெறியில், புஷ்பாஞ்சலி செய்தாள். வயிணவத்தானத்தில் நின்று பதாகை பிடித்து, கடவுளடி பேணி, ஆடினாள் என்றும், கமலக்கை இதயகமலத்திடை வர "பதத்துக்கு ஏற்ப" ஆடினாள் என்றும் பாடுகிறார்.

"......................நந்தாது
பாரிக்கும் தாளம் பணிப்ப ததனங் கணிப்ப
பூரிக்கும் தித்திஒத்துப் பொம்மென்ன-தேரும்இசை
கானம் இளத்த கணித்தமுறைச் சங்கீத
தானநெறிப்புஷ்ப் பாஞ்சாலி முதலாய்-வானம்
நெடிப்பாம் வைணவத்தே நின்று பதாகை
பிடிப்பால் கடவுள்அடி பேணி-நடிக்கும்
பதயுகம் சற்றொல்க இதழ்பத்தும் கமலக்கை
இதய கமலம் அடைந்தென-பதமுறைபோய்
மிக்க மிடத்து ஒல்க உத்தி வெட்டி துள்ளே கடைக்கண்
நோக்க மலைக்கும் தொழிலுக்குள் யலைந்தேன்"

என்று பாடுகிறார். அதன் பின்னர்—

"கண்ணுக்கும் இன்பங்கனியும் கனி வாய்த்தேன்
பண்ணுக்கும் உள்ளம் பறிகொடுத்தேன்"

என்று பாடுகிறார்.

இதிலிருந்து நாட்டியத்தின் இடையில் அப்பெண் பாடினளோ என்று ஊகிக்க இடமிருக்கிறது. இதற்கு முன் எழுந்த "தெய்வச்சிலையார் விறலி விடு தூதில்" இசையைப் பற்றிய குறிப்பு குறைவாகவே உள்ளது.

"......................மணியாழ் எடுத்து
மூட்டு நரம்பை முறைதிருத்தி-பாட்டின்
இசையும் நரம்பின் இசையும் பழத்தை
பிசையும் நறும் பால் மதுரம் பில்க-வசையிலா
பெண் பெருமாள் செங்கை பிடித்த மணவாளன்
பண்டைய பேரெடுத்துப் பாடினள்"

என்று காணப்படுகிறது.

1720ல் தோன்றிய கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூதில் சுப்ர தீபக் கவிராயர் மிகவும் போற்றத்தக்க வகையில் இசை பற்றியும் நாட்டியம் பற்றியும் செய்திகளைக் கொடுத்துள்ளார். இது இசை வரலாற்றுக்கும் பரதநாட்டிய வரலாற்றுக்கும் கிடைத்தற்கரிய பெரும் செய்தி. இசை வல்லுநர் பாடும் ஒவ்வொரு ராகத்தையும் பாடலில் வைத்துப் பாடியுள்ளது, இந்நூலில் உள்ள ஒரு சிறப்பு. **தோடி, கண்டா, சுருட்டி, காந்தாரம், காம்போதி, மேகரஞ்சி** முதலிய ராகங்கள் ஒவ்வொன்றும் ஒரு கண்ணியில் சிறப்பிக்கப் பட்டுள்ளன. இது ஆசிரியரின் இசையறிவுக்கு எடுத்துக்காட்டு எனலாம். இதோ இவர் பாடலைக் காணுங்கள்.

"வேலைக் குமுறக் கடைந்த வேலைவரும் தெள்ளமுதும்
ஆலை தரு வெண் சாறு ஆடுபாகும்-பாலும்

கனியும் சர்க்கரையும் கற்கண்டும் நாவுக்கு
இனிய பசுந்தேனும் இணக்கித்-தனியாக

மத்தித்து எடுத்து மதுரத்துக்கு எண்மடங்கு
தித்திப்புக் கேட்போர் செவிக்கேறத் தத்தைகள் போய்க்

குன்று ஏறத் தோற்றுக் குயில்மா மரந்தோறும்
சென்று எற வாணி சிறுகுமரி-நின்று ஒதுங்கி

விண் ஏற அந்தரத்தில் விஞ்சையர்கள் ஏறக் கனிந்த
பண் ஏறப் பாடும் இசைப் பாடினியே-இன்மையருள்

போதிக்கும் மெய்த்தவத்தோர் புத்திக்கு இடையூருய்
நாதிக்கும் ஏழிசைக்கு நாயகமே-கீதக்

கொழுந்தோடி மன்னவராம் குன்றிற் படரக்
கொழுந்தோடி பாடிவரும் கொம்பே!-எழுந்தசிமிழ்

கண்டார்ஆ கத்திலொரு காமப்பேய் ஏற்றுவிக்கும்
கண்டாரா கத்தில்வல்ல காரிகையே!-கெண்டைநெடும்

கண்சுருட்டி யோகர் கருத்தெல்லாம் சுருட்டிப்
பண்சுருட்டி பாடும் உயிர்ப் பாவையே-ஒண்கிரணக்

காந்தாரக் கொங்கையின்மேல் கைத்தம்புருவ ணைத்துக்
காந்தாரம் ஏற்றும் கனிமொழியே!-சேந்தவரி

அம்பாகாம் போதில் அணங்கும் இணங்கும் இசைக்
கும்ப காம் போதிரச கும்பமே!-தும்புருதன்

பாகரஞ்சி தத்தனியாழ் பட்டுறையில் இட்டயர
மேகரஞ்சி பாடும் விறலியே!—லோகத்தில்

காகஅறி வின்றிக் கலந்தனில் வைத்துண்பாரை,
தேகி என்பார்க்கீயாத தீயாரை-ராகமெனுங்

கள்ளக் கயிறு கொண்டு கட்டி உருட்டி விழித்
துள்ளுமுனைச் சாட்டைகொண்டு சுண்டியே-தெள்ளமிர்தத்

தீங்குதலைச் சொல்லால் திகிலேற்றித் தேட்டையெல்லாம்
வாங்கி விடவல்ல மதங்கியே!

என்றுள்ளது கண்டு சுவைக்கத்தக்கது.

அதே போன்று சுப்ரதீபக் கவிராயர் நாட்டியப் பெண், புஷ்பாஞ்சலி தொடங்கி என்னவெல்லாம் ஆடினுள் என

1. புஷ்பாஞ்சலி	3. இளைய நயனர் கௌத்துவம்
2. பிள்ளையார் கௌத்துவம்	4. எடுப்பு

5. சொல்கட்டில் ஆரி தொடுத்தல்.
6. கைச்சலாம்
7. தரு
8. சதி
9. கீதம்
10. பிரபந்தம்
11. பதம்
12. அபிநயம்
13. கோப்பு
14. பேரணி
15. ஜக்கனி
16. சைலாகு வித்தை
17. கூத்து
18 தேசிகம்
19. ஜயமங்களம்

என வரிசைப் படுத்திக் கூறுகிறுர். இந்நூல் 1720ல் எழுதப்பெற்றது எனக் கண்டோம். 1800ல் ஆண்ட தஞ்சாவூர் மராட்டிய அரசர் சரபோஜி பல நாட்டியக் கோவைகளை இயற்றியிருக்கிறுர். இவை சோழ நாட்டில் மகளிர்களால் ஆடப் பெற்றன. தமிழ்ப் பரத நாட்டிய மரபை இவர் அப்படியே மராட்டிய மொழியில் மேற்கொண்டு அமைத்துள்ளார். பாடல்கள் மராத்திய மொழியில் உள்ளன. அவற்றில் கீழ்வரும் வரிசையில் நாட்டிய அங்கங்கள் அமைந்துள்ளன.

1. ஜயஸ்துதி
2. சரனு சரனு
3. அலாரு
4. சொல்ல
5. சப்தம்
6. வர்ணம்
7. பதம்
8. ஸ்வரஜதி
9. அபிநயபதம்
10. தில்லானு
11. அபிநயபதம்
12. ஜக்கினி
13. கீதம்
14. பிரபந்தம்
15. தாரிபுட
16. ச்லோகவர்ணம்
17. கவுத்தம்
18. மங்களே.

இப்பொழுதுள்ள பரதநாட்டிய முறையைத் தஞ்சாவூர் சகோதரர்களாகிய சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவாநந்தம் என்ற நால்வர் வரிசைப்படுத்தி சீர் செய்து அமைத்தனர் என்று பரதநாட்டிய வரலாற்ருசிரியர்கள் கூறுவர். ஆனுல் 1700லேயே இது போன்ற வரிசைக்கிரமம் இருந்தது என்பது

"கூளப்பநாயக்கன் விறலி விடு தூதால்" தெரிகிறது. அம் மரபையே பின்பற்றி சரபோஜியும் நாட்டியக் கோவை அமைத் துள்ளது காணலாம். 1700க்கு 50 ஆண்டுகளுக்கும் முன்னரே அதாவது 1650ல் எழுதப்பட்ட இம் "மூவரையன் விறலி விடு தூதில்" புஷ்பாஞ்சலி தொடங்கி ஆடியது குறிப்பிடப்பட் டுள்ளது. இது வரலாற்றுக்கு மிகவும் பயனுள்ளதாம்.

விறலி விடு தூது நூல்களில் நாட்டியத்தைப் பற்றியும் இசையைப் பற்றியும் சிறப்பாக அறிய இயலும் என்று கண்டோம். இசையின் சிறப்பை சேதுபதி விறலி விடு தூது கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

திருமாலும் பொன்னுலகத் தேவர்களும் தேவர்
பெருமானும் இன்பம் பெருக—வரிசேர்

வடஅரவம் பூட்டி நெடுமந்தரத்தை நாட்டிப்
புடவி அதிரத்திருகும் போது—கடலில்

புடைபட்டு எழுந்துவந்த புத்தமிழ்தம் அந்நாள்
கடைபட்ட தென்று கடத்தி—வடிஇட்ட

தேங்குழம்மைக் கள்ளுவெறி சேர்ந்ததென அகற்றி
மாங்கனிக்கும் கொஞ்சம் வடுக்காட்டிப்—பூங்குயிலை

ஆங்கோதுசின்னம் என்றும் ஆலைக்கருப்பமொழி
தாங்கோது பட்டதென்றும் தள்ளி வைத்துப்—பாங்கிலிசை

பொங்குதமிழ் பால்வாங்கிப் பூங்கருணைத்தேன் கலந்து
மங்கள ராகப்பாகின் மத்தித்துச்—சங்கீதம்

கானரசம் எழுப்பிக் கற்றோர் செவிக்கமுத
பானரசம் என்ன இசைப்பண்காட்டித்-தானொருபால்

கிள்ளைமொழி வந்து கற்கக் கேட்கும் குழல்வகைகள்
உள்ளதெல்லாம் பேசாது ஒழிந்துவிட-வெள்ளைநிறப்

பாரதியும் நாரணியும் பார்மகளும் தும்புருவும்
நாரதரும் வந்து நயம் கேட்பச் சாரமுள்ள

பித்தர்மனம் தா னுருகப்பட்டமர மும்தழையச்
சித்திரமும் கூடச்சிரம் அசைக்க-எத்திசையும்

விண்டுருகக் கற்றறிந்தோர் மெய்யுருக இன்பரசம்
கண்டுருகக் கல்லும் கரைந்துருகத்-தொண்டைசற்றும்

விக்காமல் வீணையிசை மிஞ்சாமல் பாடியசொல்
திக்காமல் ராகம் சிதையாமல்-பக்கத்தில்

சித்தம்கலையாமல் சிற்றிடை தள்ளாடாமல்
குத்து முலையும் குலுங்காமல்-கத்திமுனை

வெல்லம்போ என்னும் விழியிமையும் கொட்டாமல்
வெல்லம்போல் பாடும் விறலியே.

வரலாற்றுச் செய்திகள் :

'விறலி விடு தூது' இலக்கியங்கள் வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் பயன் உள்ள செய்திகளைத் தெரிவிக்கின்றன. பிற சான்றுகளால் அறிய இயலாத வரலாறுகள் இந்நூல்களால் வெளிப்படுகின்றன, சிற்றம்பலக் கவிராயர் இயற்றியுள்ள இந் நூலில் இருந்துதான் மூவரையனுகிய திருவேங்கடநாதனைப் பற்றி அறிய இயல்கிறது. அவன் காஞ்சி என்று ஒரு நகரம் அமைத்திருக்கிறன். அங்கு மணி மண்டபம், மதிள், வீதி, பெருந் தெரு, கோபுரம் முதலிய செய்துள்ளான். அவன் திருமலை நாயக்கரின் கீழ் பணியாற்றியவன். திருமலை நாயக்கரால் சிறப்பிக்கப் பெற்றவன். அவரால் முன்கைக் கடகம், குழைக்குக் கட்டாணிமுத்து, புடகமவுலி, தங்கக் காளாஞ்சி, கவரி, பல்லக்கு, ஆலவட்டம், குடை முதலிய அளிக்கப்பெற்றவன் என்பதை இந்நூலில் இருந்து அறிகிறோம். அதிவீரராம பாண்டியனைப் பற்றியும் மதுரையை ஆண்ட மாவலிவாணனைப் பற்றியும் குறிப்புகள் வருகின்றன. (285-286) ஏலேலசிங்கனைப் பற்றியும் சுந்தரமூர்த்தி நாயனர் ஆற்றில் இட்ட பொருள் பற்றியும் கதைக் குறிப்புகள் வருகின்றன (380-381).

தெய்வச்சிலையார் விறலிவிடு தூதில், திருநெல்வேலி வாசல் நிர்வாகமாகத் தெய்வச்சிலை பெருமாள் இருந்தார் என அறிகிறோம்.

அவரும் அவர் குல முன்னோரும் கிருஷ்ணபுரம் கோயிலுக்குச்செய்த பணிகள் அறியப்படுகின்றன. காலம் கி.பி.1600. செண்டலங்காரன் விறலி விடு தூதில் தஞ்சை மராட்டிய மன்னர் சகாஜிக்கு வாசல் அட்டவணையாக இருந்த செண்டலங்காரனைப் பற்றி (கி. பி. 1700) அறிய முடிகிறது.

சேலைகள் பற்றிய குறிப்பு :

சில விறலி விடு தூதுக்களில் பெண்கள் அன்று அணிந்த சேலைகள், கச்சுகள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான குறிப்புகள் கிடைக்கின்றன. மூவரையன் விறலிவிடு தூதில் இவை பற்றிய குறிப்புக்கள் அதிகம் இல்லை.

தெய்வச்சிலையார் விறலிவிடு தூதில் **'வீர வாழிப்பட்டு'** என்று ஒரு பட்டு கூறப்படுகின்றது. புடவைக் கடையை **சவுளிக்கடை** என்று (434) அக்காலத்திலேயே அழைத்துள்ளனர், 'நாரண வண்ணம் ஏகாங்கி **பொன்னெழுத்துச் சேலை**' (436) என்று ஒரு புடவை கூறப்படுகிறது. இதே நூலில் **'ரவிக்கை'** என்ற சொல்லும் வழக்கில் இருந்திருக்கிறது. "பொற் சரிகை வேலைவன்ன ரவிக்கை" என்று அது அழைக்கப்படுகிற்து, (436) பொன்முலைமேல் வாடை ரவிக்கை வாங்கவில்லை என்பதும் காண்க (242). பெண்கள் முலைக்கச்சணியும் வழக்கமும் இருந்தது. ஒருவகைக் கச்சுக் **'கிண்ண முலைக் கச்சு'** (386) என்று அழைக்கப் படுகிறது. இவை 1600லேயே வழக்கில் இருந்தமை தெரிய வருகிறது.

நாகம கூளப்பநாயக்கன் விறலிவிடு தூதில் அன்று பெண்கள் அணிந்த பல சேலைகளின் பெயர்கள் காணப்படுகின்றன. **வீதிவாணச் சேலை, வண்ணத்தார்ச் சேலை, முத்துவண்ணச் சேலை, நாரண வர்ணச் சேலை, உடைமுறிச்சுக் குத்தி, அருகுமணிச் சேலை, சல்லாச் சேலை, ஆள் எழுத்துச் சேலை, சந்திரகாவிச் சேலை, கஸ்தூரி கொடிச் சேலை, சரிகைச் சேலை, கம்பாவரித்துகில், கம்பிச்சேலை, சந்திரகாந்த கச்சு** முதலியன.

சேதுபதி விறலிவிடு தூதில் வரும் புடவைகள்:—ஆரஞ்சு சேலை, (733), பட்டைக்காரச் சேலை (734), அரக்குச் சாயச் சேலை (735), பஞ்சவர்ணச் சாய வடக்குத்திச் சேலை (736), அணக்குடி சல்லாச் சேலை (737), அன்னக்கருக்குச் சேலை (738), கெண்டைச் சேலை (739), பாம்புவர்ணக் கட்டாங்கி (740), சுற்றுக் கம்பிச் சேலை (741), கஞ்சத்துச் சல்லா (742), மயில் கண்ணுச் சேலை (743).

1804–ல் எழுதப்பட்ட நண்ணூர் சங்கமேசுவரசாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலி விடு தூதில் ஆள் எழுத்துச் சேலை கூறப்படுகிறது.

வாணகிரிக் கத்தூரிக் கட்டிச் சமுக்காளம், வர்ணச்சேலைப் பட்டு, துத்தாரிச் சேலை, சல்லாத்துப்பட்டி முத்துவர்ணச்சேலை, கண்டையிட்ட சேலை, நிறை எழுத்துச்சேலை, மறுவர்ணச்சேலை, சரிகை போட்ட ரவிக்கை (783-785) முதலிய இடம்பெறுகின்றன.

வட்டார அல்லது பேச்சு வழக்குகள் :

விறலி விடு தூதில் பல இடங்கள் வட்டார வழக்கு அல்லது கொச்சை வழக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இது மொழி ஆராய்ச்சி வல்லுநர்களுக்கு மிகவும் பயனுடையதாய் அமையும். சிற்றம்பலக் கவிராயர் கொச்சை வழக்குகளை மிக மிக அரிதாகத் தான் பயன்படுத்துகிறார். நீதி மன்றத்தாரை அழைக்கும்போது ''தலத்துச் சுவாமியளே'' என்றழைப்பதை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். தன்மைச் சொற்றொடர்களைக் கூட இலக்கிய மரபிலேயே கவிராயர் அமைக்கிறார். எடுத்துக் காட்டாகத் தாய்க் கிழவி முதலில் வாசுதேவனை வரவேற்கிறாள். அப்பொழுது அவள் பேசுவது இலக்கிய மொழியாக உள்ளதே ஒழிய பேச்சு மொழியாக இல்லை.

"தாங்கள் மனை இங்கு இவளும் தாங்கள் என்ன சொன்னாலும்
ஆங்கு அது வேறு ஒன்று அறியாதாள்'' (235)

என்பது காணலாம். ஆனால் இதற்கு முன் பாடப்பட்ட தெய்வச் சிலையார் விறலி விடு தூதில், குமாரசுவாமி அவதானி, பேச்சு மொழியை அப்படியே எடுத்தாண்டுள்ளதைக் காணலாம்.

அந்தணனை வரவேற்கும் தாய்க்கிழவி அங்கே பிராம்மணர் வீட்டுப் பேச்சு மொழியே பேசுவதாக அமைத்துள்ளார்.

"எண்ணியவாறு இங்கே எழுந்தருளினீர் நாங்கள்
பண்ணிய பூசாபலத்தின் பாக்யமன்றோ"

"ஆரங்கே மெத்தை தட்டிப் போடுங்கோ-ஆடரங்கை
வேரும் கொழுந்தும் விதானியுங்கோ-பாருங்கோ"

என்பது அவ்வாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

"லவலேசந் தேவடியாள் மாற்கம் அறியாள்
நன்றி பெற வாழ்ந்திடுங்கோ"

என்பதும் அதுவே.

அதுபோல் தெய்வச் சிலையார் விறலிவிடு தூதில் கடைக்குச் சென்று பொருள் வாங்கும் பேச்சு வழக்கும் காணலாம். "உள்ள படி சொல்லு கிரையம் என்றேன்; தொண்ணூறு பொன் என்றான் ரொக்கமாய்க் கொடுத்தேன்" (429). "செட்டிதனைப் பார்த்தேன் தெரிய விலை கேட்டேன். பொன் முப்பது என்றான். கீழ்ப்படச் சொன்னேன், குறைக்கமாட்டோம் என்றான்" (433). இதுபோன்ற சமுதாயப் பேச்சு வழக்கை அறியவும் விறலி விடு தூது இலக்கியங்கள் பயன்படுகின்றன.

வழக்குச் சொற்கள் :

சிற்றம்பலக் கவிராயர் பல அன்றாட வழக்குகளைத் தமது பாடலில் பயன்படுத்தியுள்ளமையால், வழக்கு மரபுக்கு எடுத்துக் காட்டாக அவை அமைகின்றன.

1. ஏழையேற்கு ஏயும் பத்தாமிடத்துச் சனி (மகத்திற் புக்கதோர் சனி எனக்கானாய் என்பார் சுந்தரர்).
2. நாலாம் பிறை நோக்கல்.
3. எரியும் நெருப்பிடை நெய்யிட்டது.
4. கோடி தெய்வம் ஆசரித்தல்.
5. வட்டிக்கு இடும் கடன் போல.
6. சீமை எல்லாம் சீட்டு நடக்கும்
7. வெள்ளத்தில் மீனுக்கு ஊட்டி தூண்டில் இடல்.

8. கட்டழகும் வாலிபமும் நிற்குமோ!
9. வேப்பெண்ணெ வித்த காசும் பணமும் கசக்குமோ!
10. கற்பசுவிலே பால் கறத்தல்.
11. மணலிலே தயிலம் பதம் செய்தல்.
12. கல்லிலே நார் உரித்தல்.
13. வாய் புகுந்த ஈ தெரியாமல் ஏங்கியிருத்தல்.
14. கைக்கு வகையற்றார் கோபுரத்து மேலேறி வீழ்தல்.
15. கட்டிக் கிடந்து இழவு காத்தல்.
16. சிதம்பரம் என்று ஏய்த்தல்.
17. ரகுராமா கோ என்று நடத்தல்.
18. வாசல் கெவுளி சொல்லுதல்.
19. பொன்னும் பணமும் புலையன் படைத்ததானால் என் உண்டு.
20. பழம் நழுவி பாலில் வீழ்தல்.
21. போது வடிந்த நறைக்கோட்டு மயில் போல.
22. ஏருட்டம் பேசி லிங்கமும் கோபுரமும் மாருட்டம் பண்ண வல்லார்.
23. பூமரத்துக்குள் அடுத்த புல்லூரி.
24. நிலுவை குடுத்து நில்லாது போ,
25. கூவென்று அம்பலத்தில் கூட்டமிடல்.
26. கோமாளமான குரங்கு.
27. மகத்தான திக்கு திகைத்த கப்பல் சேர்ந்தது போல்.

முதலிய வழக்குச் சொற்களைக் கவிராயர் பயன்படுத்தியுள்ளார்.

சமுதாயச் செய்திகள் :

விறலி] விடுதூதுளிலிருந்து அன்றிருந்த பல சமுதாயச் செய்திகளையும் அறிய இயலும். சீலமும் ஒழுக்கமும் பூண்டு அறிவுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொள்ளவேண்டிய அந்தணன் வேசை வசப்பட்டால் எவ்வாறு தன் குலாசாரத்தை இழந்து எவ்வளவு கீழ்நிலைக்கு வீழ்கிறான் என்பதை இந்நூல்கள் சித்தரிக்கின்றன. தெய்வச்சிலையார் விறலி விடு தூதில் இதற்கு எடுத்துக்காட்டு-அவ்வேசை தினந்தோறும் ஆடு ஒன்று வெட்டிச்

சமைத்துண்பாளாம். அவள் வீட்டில் அச்சமையல் நெடி அடிக்கு மாம். அதைப் பொறுத்துக்கொண்டு அவ்வீட்டில் இருப்பான் அவ்வந்தணன். அவள் வாயும் அங்நாற்றம் வீசும். அதைப் பொறுத்துக் கொண்டு முத்தம் ஈவானும். அவள் வீட்டு முற்றத் தில் மாமிசத் துண்டுகள் கோவையாகக் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்குமாம். அவ்வந்தணன் குனிந்து அவ் வழியாகச் செல் லும் போது அவை அவன் குடுமியில் முட்டுமாம்.

ஆடுதினம் ஒவ்வொன்று அடிப்பாள் பழிகாரி
வீடுதினம் பொல்லா வெடி நாறும்-சூடுமலர்ப் (418)
பூங்குழலாள் வாயதரப்புத்தமுத பானத்தைத்
தீங்கெனவும் ஓரொரு நாள் சிந்திக்கும்—மாங்கிஷத்தின் (419)
கோவை முன்றில் ஊடு என் குடுமியைத் தீண்டக் குனிந்து
போவேன் இது போதாதோ பூசுரர்க்கு (420)

என்று சித்தரிக்கிறது. நாகம கூளப்ப நாயக்க விறலி விடு தூது மேலும் சில செய்திகளைக் கூறுகிறது. அவ்வேசையிடம் சுகித் திருந்த மறு நாள் காலையில் நதிக்குச் சென்ற அந்தணன் பல் துலக்க நாயுருவிக் குச்சிக்குப் பதில் குப்பைமேனி பிடுங்கிப் பல் துலக்கினானும். மந்திரதர்ப்பணங்களை மறந்து மூழ்கினானும். காயத்திரி சபத்தை மறந்தானும் என்பார். மூவரையன் விறலி விடு தூதில் இங்நிலைகள் இடம்பெறவில்லை.

தெய்வச்சிலையார் விறலி விடு தூது வேறு சில செய்திகளையும் கூறுகிறது. வேசை அந்தணனிடம் பலவாறு பொருள் பிடுங்கு கிருள் என்று கூறுமிடத்து வேசை “திரண்ட நாள்” எனப் பூப் பெய்திய நாளைக்கொண்டாடுவாளாம், பிறந்த நாள் விழாப்போல. அப்போது மாடன் என்ற தேவதைக்கு விசேஷ வழிபாடு உண்டாம். அதற்கு ஆடு, பன்றி, கோழி பலியிடப்படும். அப் போது அங்கு வில்லுப்பாட்டு, கொட்டு, கணியான் கூத்து முதலிய நடைபெறும் என்று சொல்கிருர்.

“செந்தளிர்க் கை நல்லாள் திரண்ட நாள்—வந்து தொட்ட
மாடன் என்ற தேவதைக்கு வைச்சு வணங்குவளாம்

ஆடு பன்றி கோழி இவை அல்லாமல்—பாடுகின்ற
வில்லாம் முரசாம் கைவெட்டும் கணியானும்
எல்லா வகைக்கும் எழுபது பொன்''—

இதிலிருந்து கி. பி. 1600 லேயே மாடன் வழிபாடு சிறப்புற்றிருந்தது என்பதும், வில்லுப்பாட்டு, கணியான்கூத்து முதலிய மாடன் கோயிலில் நடைபெற்றன என்பதும் பெறப்படுகின்றன. இது வரை கிடைத்துள்ள சான்றுகளில் வில்லுப்பாட்டும் கணியான் கூத்தும் திருநெல்வேலிப் பகுதியில் சிறப்புற்றிருந்தன என்பதற்கு இதுவே தொன்மையான சான்ருகும். கி.பி. 1600 லேயே இவை நடைபெற்றுள்ளன என்பது இசை, கூத்து ரலாற்றுக்குச் சிறப்பான செய்திகளாகும்.

1710ல் எழுதப்பட்ட செண்டலங்காரன் விறலி விடு தூதில் தஞ்சைப் பகுதியில் ''வீரன்'' வழிபாடு இருந்தது என்று அறிகிருேம். (377) அத்துடன் ' லட்சுமியந்திரம் ' ' அனுமசக்கரம்' 'புவனேசிசக்ரம்', நவகோணச் சக்ரம், உச்சாட கணபதி மந்திரம், சாத்தா மந்திரம், 'அட்டவயிரவர்தம் அங்கிதம்' 'துட்டபத்ர காளி செபம்' ''கன துற்கையந்திரம்'' கூளிநவசக்தி கொள்கை, மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம் முதலிய வழிபாடுகளும் நம்பிக்கைகளும் இருந்தன. இது போன்ற பல செய்திகளை இந்நூல்களிலிருந்து அறியலாம்,

பாட்டுடைத்தலைவன் :

மூவரையன் என்றும் திருவேங்கடநாதன் என்றும் பெயர் பெற்ற வள்ளல் மீது பாடப் பெற்றது இந்நூல். இவனது முன்னோர்களைப் பற்றியோ, குலத்தைப் பற்றியோ, இந்நூலில் இருந்து ஏதும் அறிய இயலவில்லை. இவ்வள்ளலைப் பற்றிய சில செய்திகளை மட்டும் அறிகிருேம். களவேள்வி நாட்டைச் சேர்ந்த 'தென்வீரை' என்ற பதியினன் இவன். பொதியமலையை உடையவன் என்றும் வைகை நதியினன் என்றும் அழைக்கப்படுகிருன். கருடக் கொடியை உடையவன் என்றும், யானை, குதிரை, பல்லக்கு முதலிய கொண்டிருந்தான் என்றும் அறிகிருேம். சதுர

கிரி மணவாளர் தாளில் அன்பு வைத்தவன். திருக்காஞ்சிமேவும் திருவேங்கடவர்க்கு நகரமும் (கோயிலும்) மணி மண்டபமும் மதிளும், நெடுவீதியும், கோபுரமும் எடுத்தவன். திருமலை நாயக்கர் இவனுக்குப் பொன்காளாஞ்சி. தங்கப்பல்லக்கு, பொன் அணைசு, ஆலவட்டம், கொற்றக்குடை முதலிய சிறப்புகள் அளித்திருக்கிறார். இவன் படிப்பில், குறிப்பாக இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என இந்நூல் வர்ணிக்கிறது.

"சொற்குலவு செல்விக்கு இணங்கும் சேய்"
"இயற் கல்வித் திருவேங்கடநாதன்"
"கற்றறிந்தோரை தாய் போல் காக்கும் தயாவினன்"
"கற்றார் குறிக்கும் குறிப்பறியும் கோ',

என்றெல்லாம் இந்நூலில் இவன் கல்விச் சிறப்பு பாடப் பட்டுள்ளது.

சுவடி ஆராய்ச்சி :

மூவரையன் விறலி விடு தூது என்னும் தலைப்பில் இரண்டு ஓலைச்சுவடிகளும், ஒரு காகிதப் பிரதியும் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ளன. பிற நூலகங்களில் சுவடிகள் இருப்ப தாக தெரியவில்லை. இவற்றில் பழைமையானது எது என்றும், மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயரே எழுதிய சுவடி யாதாக இருக்கும் என்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

844 எண் இடப்பட்ட சுவடியே மிகவும் பழைமையானதாகக் காணப்படுகிறது. நூலின் இறுதியில் இரண்டு ஓலைகள் ஒடிந் துள்ளன. ஒவ்வொரு ஓலையிலும் பக்க எண் இடப்பட்டுள்ளது. பக்க எண்கள் அடிக்கப்பட்டுப் பின் திருத்தப்பட்டுள்ளன, 11 என்று எண் இடப்பட்டுள்ள ஓலை பின் எழுதிச் சேர்க்கப் பட்டுள்ளது. இரட்டைக் கொம்பு இந்த ஓலையில் மட்டும் இடப் பட்டிருக்கிறது. 26 ஆவது ஓலை வேறு ஒருவரால் எழுதி சேர்க்கப் பட்டுள்ளது. 11 வது ஓலையை எழுதியவரைக்காட்டிலும் இவர் வேறானவர். ஆதலின் இச்சுவடியில் மூவர் கையெழுத்துக்கள் உள்ளன. பின் சேர்க்கப்பட்ட இரண்டு ஓலைகளைத் தவிர பிற

ஓலைகளில் இரட்டைக் கொம்பு இல்லை. சிறப்பு 'ழ' கரம் வர வேண்டிய இடங்களில் 'ள' கரமே காணப்படுகிறது. செய்யுள் அடியிறுதியைக் குறிக்கவும், தனிச் சொல்லைக் குறிக்கவும், ஆசிரியர் தனிக்கோடிட்டுப் பிரித்துள்ளார். பல இடங்களில் பின்னர் படித்தவர்கள் ஓரிரு சொற்களைத் திருத்தியுள்ளனர் திருத்தம் மேலும் கீழுமாகக் காணப்படுகிறது. மெய் எழுத்துக்குப் புள்ளி இடப்படவில்லை.

427 என்று எண் இடப்பட்ட சுவடி முன் கூறிய சுவடியைக் காட்டிலும், காலத்தால் பிற்பட்டது. பூச்சி அரிக்கப்பட்டிருக் கிறது. இரட்டைக் கொம்பு போடப்பட்டுள்ளது. செய்யுட்கள் அடிகளுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு வரியிலும் இறுதியில் சொல்லைப் பிரித்துச் சீருக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது. மூலச் சுவடியிலிருந்து எடுத்தபடியாகக் காணப்படுகிறது. 19 ம் நூற்றூண்டின் இறுதியில் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம்.

காகிதப் பிரதி (எண் 664)-சுவாமிநாதையர் அவர்கள் மேற் பார்வையில் அ. கிருஷ்ணசாமி நாயுடு என்பவரால் படி எடுக்கப் பட்டதாகத் தெரிகிறது.

இவை தவிர இந்நூலகத்தில் உள்ள மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் எழுதிய பிற நூல்கள் உள்ளன. **"திருப்பெருந்துறைக் கலித்துறை அந்தாதி" "ஆண்டவராயன் கோவை' "சிவந்தெழுந்த பல்லவராயன் உலா"** என்ற மூன்று நூல்கள் எழுதப்பட்டுள்ள சுவடிகளும் ஆராயப்பட்டன. "திருப்பெருந் துறைக் கலித்துறை அந்தாதி" (சு.எ.744) மிதிலைப்பட்டிச் சிற்றம் பலக் கவிராயர் இயற்றியது என ஐயர் அவர்கள் குறிப்பிலிருந்து அறிகிறோம். அந்த மூலச்சுவடியிலேயே இரண்டு மூன்று கையெழுத்துக்கள் காணப்படுகின்றன. இவை மூவரையன் விறலி விடு தூதுடன் ஒத்துவரவில்லை. ஆண்டவராயன் கோவை (சுவடி எண் 378) இந்த எழுத்தைக் காட்டிலும் வேறாக உள்ளது. சிவந்தெழுந்த பல்லவராயன் உலா கையெழுத்துக்கும் இந்த மூவரையன் விறலி விடு தூதுக்கும் கையெழுத்தில் வேறுபாடு உண்டு.

ஆதலின் இவற்றில் எது மிதிலைப்பட்டிக் கவிராயரே எழுதிய கையெழுத்துப் பிரதி என்று கூற இயலாது. 844 எண் இடப்பட்ட சுவடி பழைமையானது என்பதோடு சுமார் 250 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று மட்டும் கூறலாம்.

———

அடிக்குறிப்புகள் :

1. பிள்ளைத் தமிழுக்குப் பட்டயம் 'ஒலை நாயகன்' (இரா. நாகசாமி) கல்வெட்டு-காலாண்டிதழ்-இதழ்–2. 1974-75.

2. 'சுசீலவள்ளல் அம்மானை' குமாரசாமிக் கவிராயர்-(பதிப்பாசிரியர்) எஸ். சௌந்தரபாண்டியன் சென்னை–பக்கம்-101-103.

3. பெருந்தொகை (பதிப்பாசிரியர்) மு. இராகவய்யங்கார், பாடல்கள்-1274, 1275, 1276. 1935-1936.

4. அழகர்கிள்ளை விடுதூது (பதிப்பாசிரியர்) உ. வே. சாமிநாதையர், 1938-முன்னுரை.

5. கூளப்ப நாயக்கன் காதல் (பதிப்பாசிரியர்) மு. அருணசலம், 1943-முன்னுரை.

6, தெய்வச்சிலையார் விறலி விடுதூது (பதிப்பாசிரியர்) எஸ். வையாபுரிப் பிள்ளை, முன்னுரை.

ஹரி: ஓம்

மூவரையன் பேரில் விறலி விடு தூது

[கணபதி காப்பு]

தென்றலுலா வீரைத் திருவேங் கடநாதன்
துன்றும் விறலிவிடு தூதுக்கு—நன்றி
நடக்கும்பத் தியைத்தந்து நயக்கும்பத் தியிற்பொங்குத்
தடக்கும்பக் களித்தந்தித் தாள்.

குறிப்புரை

முத்துச் சிற்றம்பலக் கவிராயராகிய நூற்புலவர் ஹரி ஓம் என்று நூல் தொடங்கும் மரபு காண்க. கணபதியைக் காப்பாக்கிப் பாடுகிறார் ஆசிரியர். துன்றும்—நிறைந்து நிற்கும். இந்த விறலி விடுதூதில் வீரைத் திருவேங்கடநாதனே நிறைந்து நிற்கிறான் என்கிறார் ஆசிரியர். அவனே பாட்டுடைத்தலைவன் என்பது பொருள். நன்றி-உபகாரம், நன்மை, அறம். பத்தி-வழி, பக்தி, அன்பு. நயக்கும்-விரும்பும். பத்தி-யானை செல்லும் வழி. தடக் கும்பம்–பெரிய மத்தகம். களி–மகழ்ச்சி, யானை மதம். தந்தித் தாள்–யானையின் கால்-கணபதியின் திருவடி. இதுவே வீடுபேற ளிக்கும் இறுதியான திருவடி என அந்தித்தாள் எனவும் கொள்ள லாம். 'நன்றி நடக்கும் பத்தியைத்தந்து-இத்தூதுக்கு உபகார மாக, அறமாக செல்லும் வழியைக் காட்டி என்பது ஒரு பொருள். ஆசிரியர் மூவரையனிடம் தமக்குள்ள நன்றி அறிவை-செய் நன்றி நினைக்கும் பக்தியை, அன்பைத் தந்து என்றும் கணபதியை வேண்டுவது போல் குறிப்பிடுகிறார். இத்தூதின் (நூலின்) குறிக் கோள் அறவழிப்படுத்தல் என்பதும் சூசிக்கப்படுகிறது. நயக்கும் பத்தியில் யானையாகிய கணபதி செல்லும் அடியில் பொங்கும் மதம் பெருகுகிறது. கணபதியின் திருவடி மகிழ்ச்சியை கொடுத் துச் செல்கிறது என்பது பொருள். தமது பாடல் தாம் விரும்பும் வகையில், பொங்கி வர வேண்டும்என அருள்பாலிக்க கணபதியை வேண்டுகிறார் என்பதும் பொருள்.

இப்பாடலுக்கு மூவரையன் பேரில் விறலி விடு தூது என்றும் முத்துச்சிற்றம்பலக் கவிராயர் விறலி விடு தூது என்றும் இரண்டு தலைப்புகள் உள்ளன. வீரைத் திருவேங்கடநாதன் விறலி விடு தூது என்றும் பெயர் உண்டு என்பது கணபதி காப்பால் தெரிகிறது.

முத்துச் சிற்றம்பலக் கவிராயர்
விறலி விடு தூது

1 நீர்கொண்ட மேனி நிலாமாலைச் செய்யோனுங்
கார்கொண்ட மேனிக் கரியோனும் மொ...சீர்கொண்ட

2 நந்தாத கண்ட நவகண்டங் கண்டவர
விந்தா சனத்திருக்கும் வேதாவும்-பிந்தாத

3 ''செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாம் தலை'' சிறப்பென்-றெல்லாரு

4 நேசிக்குங் கான நெறிகண்டு நல்யாழின்
வாசிக்குங் கான மடக்குயிலே-பேசுற்ற

---

1. நிலாமாலைச் செய்யோன் :—சிவபெருமான். கார்-மேகம். கொண்ட மேனிக்கரியோன்-கருத்த மேகம் போன்ற உடல்உடைய திருமால்.

2. நந்தாத-குறைவில்லாத. நவகண்டம்:—ஒன்பது கண்டங்கள்-கீழ்விதேகம், மேல்விதேகம், தென்விதேகம், வடவிதேகம், வடரேவதம், தென்ரேவதம், வடபாதம், தென்பாதம், மத்திய காண்டம் என்பவையாகும். (அபிதான சிந்தாமணி-பக்கம் 328). அரவிந்தாசனத்திருக்கும் வேதா-தாமரை மலரில் இருக்கும் பிரமன்.

3. வள்ளுவப் பெருமானின் திருக்குறள் மீது ஆசிரியருக்கு உள்ள ஈடுபாட்டை இது புலப்படுத்துகிறது. கல்வியில் தமது குறிக்கோளையும் திருக்குறள் பாவையே தமது பாடலில் சேர்த்து ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். செவிச் செல்வத்தை நான்முகன், திருமால், சிவபெருமான் ஆகிய பெருந்தெய்வங்கள் எல்லாம் விரும்புகின்றனர் என்கிறார் ஆசிரியர்.

4. கான நெறி:—இசை நெறியே செவிச்செல்வம் எனக் கூறுகிறார். இசையில் ஆசிரியருக்குள்ள ஈடுபாடு வெளிப்படுகிறது.

5 சொல்விளங்கும் புள்ளுந் தொகுநற் நச்சரவும்
வல்விலங்குஞ் சித்திரத்து வைத்தன போல்

6 போய்மடுப்பட் டாங்கயலே;பொங்கிசையின் றேறல்
வாய்மடுப்ப வூட்டு மதங்கியே-தூய செவி

7 வினக்கம்பி தங்கவுயி ரேத்துந் தொழிலால்
மனக்கம்பி தங்கொடுக்கு மாதே-கனக்க

8 வடித்து முறழ்ந்து மிசை வாரியமுற்தம்
படித்து மிதங்குலவும் பாவாய்-தொடித் தடக்கை

9 ஆடவரா கம்படிக்கு ளோடவே யேழிசையு
நாடவரா கம்படிக்கும் நாரியே-தாடனஞ் சேர்

---

5. சொல் விளங்கும் புள் :—கிளி (மென்மை). நச்சரவு-பாம்பு (நெளிவு). வல்விலங்கு–சிம்மம் (வன்மை). கிளி, பாம்பு, சிம்மம் ஆகியவை தனித்தனித் தன்மை வாய்ந்தவை. மாறுபட்ட நிலை யுடையவை. ஆயினும் ஒருங்கே ஒரு சித்திரத்தில் தீட்டப்படும் போது தனிப்பொலிவு பெறுகின்றன. அச்சித்திரம் இன்பத்தை அளிக்கிறது. அதுபோல இசையும் மென்மை, வலிவு, நெளிவு உடையதாய் இருந்தால்தான் இன்பம் அளிக்கிறது.

6. மடுப்பட்டு அங்கு அயலே பொங்கு இசை:—பள்ளத்தில் பாய்ந்து மறு பக்கம் பொங்குவதுபோல் ஆரோஹன அவரோஹ னங்களுடன் பாடப்பெறும் இசை. அயல்-பக்கம். தேறல்-தேன். செவி வாய்மடுப்ப–செவியாகிய வாய் இசையாகிய தேனைப் பருகு கிறது என்கிறர். இதையே பின்னர் வந்த பாரதி "தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடுகிறுன். மதங்கி-பாடுவாள்.

7. தூய இனக் கம்பி தங்க உயிர் ஏத்தும் தொழில்–வீணை யாழ் ஆகியவற்றின் கம்பியை மீட்டு உயிர்கொடுத்து நாதம் எழுப்பி மனத்தை ஈர்க்கும் வல்லமை. மனக் கம்பிதம்-மன அசைவு.

8. கனக்க அடித்து-வீணை அல்லது யாழில் சுரம் மீட்டல். உறழ்ந்து-ஒரு நரம்பை விட்டு ஒருநரம்பைத் தெறித்தல். இதம்- இன்பம். குலவும்-மகிழ்ச்சியூட்டும்.

9. படி-ஆரோகணம். நாடல்-ஒத்தல். ஏழிசையும் நாட அராகம் படிக்கும்–ஏழிசையும் ஒத்த ராகம் பாடும் நாரி.

10 தாள் மதிக்குஞ் சதிக்குந் தனிச்சக்கர
வாள் மதிக்கு மதங்கியே-நாளும்

11 தனக்கொம்பு வள்ளைநின்று சாதிக்குங் கீத
வனக்கொப்பு வள்ளை மயிலே-சினக்குமட

12 மாதர்க் கயலாய் வருந்தா திளைஞோர்க்கும்
மேதக்க தூதாம் விறலியே-கீதம்

13 தரும்பாட் டியலுரைக்க தக்க நீயெ
னரும்பாட் டியல்கேட்க லாமே-விரும்பாட்டிற்

14 கற்றதொரு பெண்கொடி நீ யென்
பெற்றசதி செய்தசதியுங் கேட்க்கச் செல்லுமே-யெய்து மவர்

15 தொந்தத்தை யுந்தான் தொகுத்த தையுமால்
தந்தத்தை யுங்கேட்கத் தக்கதே-பந்தித்த

16 ஏலமுகிற் குழலா யெந்தனுக்கு வந்தலைய
கால முனக்குரைத்தல் கட்டளையே-நீலவிழிப்

---

10. பாதங்கள் நாட்டிய சதிக்கு ஏற்ப ஆடவும் வட்டணைகள் புரியவும் செய்பவள். இதையே 'தனிச்சக்கரவாள மதிக்கும் மதங்கி' என்கிறார்.

11. வள்ளை-கொடி. கொடியில் நிற்பதை ஒத்த மார்பகத்தை உடையவளே. இசையாகிய வனத்தில் உயர விளங்கும் பெண் மயில். அள்ளை-அணங்கு.

13. அரும்பாடு-துயர் பாடு.

14. சதி செய்த சதி-மனைவி செய்த சதி என்பதை நயம்பட உரைக்கிறார்.

15. தொந்தத்தை-புணர்ச்சியை. தொடுத்தது-சேர்ந்தது. மால் தந்தது-மயக்கம் அல்லது வேட்கை தந்தது. பந்தித்த-முடிந்த.

16. ஏலமுகில் குழலாய்-வாசனை நிறைந்த முகில் போன்ற குழலை உடையவளே. கட்டளை-முறை.

17 பெண்பா டினிநீ பிரிகைக் கிளைகூட்டிப்
பண்பாட லுந்தன் பரிசன்றோ-நண்பாக

18 ஆச்சரிய மோடதா ரேனுமிச் சைகொள்ளப்
பேச்சுரை யோடுங்கைப் பிடிப்பையே-பூச்செங்

19 கரதத்தை யேநடனங் கற்ற நீ மற்றப்
பரதத்தை யுங்கேட்கப் படாதோ-சுரதத்தா

20 லுன்பாலென் துன்பமு ரைக்ககே டிற்றையொரு
மின்பால் நீ தூது சொல்ல வேண்டியதா-லன்பாலென்

21 முன்னைவர லாற்று முறையு மவளுடனோர்
மின்னை முதல்மரபில் வேட்டதுவும்-பின்னை

22 நடந்ததுவும் நான் சென்ற றுடுமந்த நாட்டிற்
றுடர்ந்த சனியே சுரனும்-கிடந்துளைத்த

23 பந்தத்தா லன்றுபட்ட பாடுமொரு மாமியிட்ட
தொந்தத்தால் யான்வழக்குத் தோற்றதும்-நிந்தித்து

24 வந்ததுவும் வந்த வழிக்கே பெருஞ்செல்வந்
தந்ததுவும் கொற்றொடி யான்சாற்றக்கேள்-பைந்தேனுட்

---

17. பிரிகை கிளை கூட்டி பண்பாடல் உந்தன் பரிசன்றோ-யாழ் நரம்பின் கிளை கூட்டி பண் பாடுதல் உன் பெருமையன்றோ. (பிரி அல்லது புரி என்பது). பிரிந்துள்ள எம்மைக் கூட்டி வைத்து இனிமையாக்குதல் உனக்கு பெருமை விளைக்குமன்றோ என ஆசிரியர் இரண்டு பொருள்படும்படி பாடுகிறார்.

19. பூச் செங்கர தத்தையே-பூப்போன்ற சிவந்த கையை உடைய கிளியே. பரதத்தையும்-மாபாரதம் போன்ற பூசலை. சுரதம்-அன்பு.

20. மின்-பெண்.

22. சனீசுரன் என்பதை சனியேசுரன் என்றார். உளைத்தல் வருத்தல்.

23. பட்டபாடு என்ற சொல் 17-ம் நூற்றாண்டில் வழக்கில் இருந்துள்ளது. தொந்தம்-பூசல்.

25 பீடூர் மதியப் பிறைப்பிள்ளை முக்குளிக்குங்
கோடூர் பொதியக் குவட்டினான்-யூடே

26 எத்திசைக்கும் பத்திப்பளீ ரென்றெறிப்ப முத்தை
முத்தத்த நத்திறைக்கும் வைகைநதியினான்-ஒத்துப்

27 படிக்குங் களிச்சூதம் பாட்டெழுப்பத் தோகை
நடிக்குங் களவேள்வி நாடன்-அடுத்த

28 சுகப்பளிக்கு மாடந்துணைத் தணைத்த கிள்ளைக்
குகப்பளிக்குந் தென்வீரை யூரன்-றகப்பளிக்கும்

29 மேகவளம் பற்றுகற்றை வெண்ணிலா வீசுமுத்தின்
மாகவளம் பற்றுகொற்ற வாரணத்தான்-மாக

30 ருடனெழிற் கத்திக் கயங்களுக் கிறிக்கப் பக்கப்படை
நெளிக்கத் தத்தும் பரியான்-அடலடர்த்துச்

31 சுற்று மாயத்துக் கைப்பலகை யெல்லாம் புகப்போய்ப்
பற்றுங் கருடப் பதாகையினான்-சொற்றிறத்தைக்

32 கண்டிரங்கு மொண்டொடியார் சுண்ணம்போ
டுண்ணம்பும்
வண்டிரங்குந் தண்டுளப மாலையான்–தண்டில்ப்

---

25. பீடு-பெருமை. முகுளித்த என்பது முக்குளித்த என்று வந்தது-மலர்ந்த என்ற பொருள். கோடு-சிகரம்.

26. முத்தை நத்து இறைக்கும் வைகை நதியின் தலைவன்.

27. களிச்சூதம் பாட்டெழுப்ப-களி வண்டு பாட. தோகை-மயில். களவேள்வி நாடு-நாட்டுப் பிரிவு.

28. கிளிகள் உகப்ப பளிக்குமாடம் அளிக்கும் தென்வீரை யூரன். கிள்ளைக்கு உகப்பளிக்கும் எனப் பிரிக்க. அகப்பு-தாழ.

29. மா கவளம்-பெரிய உருண்டை. முத்தின் பெரிய திரட்சியை பிடிக்கும் பட்டத்து யானையை உடையவன்.

30. கத்திகள் யானைகளைத் தள்ள படை நெருக்க தாவும் குதிரைகளை உடையவன். இறிக்க-நெருங்க.

31. ஆயத்துக் கைப்பலகை-வீரர்களின் கேடயம். கருடப் பதாகையினான்-மூவரையனின் கொடி கருடக்கொடி.

33 புரத்தானை வெள்ளம் புரட்டி முரட்டுக்
கரத்தானை வெள்ளத்தை கண்டித்துரத்-தெரித்த

34 மாதுரங்க ராசி மறுக்குறுகு படை
சாதுரங்க ராசிவெள்ளங் தள்ளிப்போய்-ஞேதுமடி

35 வாட்டுணியக் கோட்டுவளை துணியக் கைத்துணியத்
தாட்டுணிய மோட்டுத்தலை துணியத்-தோட்டுணிபோய்

36 குப்பென்றுதிர வெள்ளங்கொப்பளிக்கத் துண்ணென்று
கொப்பளித்து வக்களப்பே யள்ளவே-யெப்படையும்

37 கூவென்று கூளிநின்று கூத்தாடக் கூத்தாடத்
தாவென்று மோட்டலகை தாளமொத்த-ஆவென்று

38 முக்கிக் கொழுப்பை முரட்டுக் கரட்டெலும்பை
விக்கிக் கிழப்பேய் விறைத்திருப்ப-வக்களிப்புத்

39 தேக்கிப்பட படெனச்சிட் சிலபேய் பச்சைரத்தங்
தாக்கிக் கிறுகிறுத்துத் தள்ளாட-நாக்குக்

40 குளற குடிஞை குரவை மறலி
களறக் கிளரக் கவந்தம்-அழுறவே

---

33. தண்டில் புரத்தானை என்பது முதல் 41-ம் கண்ணி வடிவேலினன் என்பது வரை அவன் புரிந்த போரின் சிறப்பும் போர்ப்புறத்தே பேய்களின் கூத்தும் ஆரவாரமும் அழகுற கூறப் படுகின்றன.

34. மாதுரங்க ராசி-பெரிய குதிரைப்படை. சாதுரங்கராசி–சதுரங்கப்படை என்னும் ரத, கஜ, துரக, பதாதிகளை உடைய நாற்படை. நோது-துன்பமுறும்.

35. கோட்டுவளை-சித்திரம் வரைந்த வளையல் (வீரவளை) மோட்டு-உயர்ந்த.

36. துண்ணென்று–திடீரென்று.

37. மோட்டலகை-மூடப் பேய்.

40. குடிஞை-கூகை, பேராந்தை, கோட்டான். குரவை-பெருஞ் சத்தம். மறலி-நமன், மயக்கம். களற–(கழற) உறுதியாகச் சொல்லல். பேராந்தையின் சத்தம் யமன் வருகையை உறுதிப்படுத்துகிறது என்கிறூர்,

41 புக்கத் தடக்கையென யிப்புல்லாரை வென்றுக்ர
மிக்கத் தடக்கையென வடிவேலினன்-கைக்கடங்தோய்

42 சூழிவட்டத்துட் சிகரம் சோணைக் கடாசலஞ்சூ
ழாழிவட்டத்துட் செலுத்தும் ஆணையான்-வாழி

43 தணவாத சாங்தைச் சதுரகிரிச் செங்கண்
மணவாளர் தாழிலன்பு வைத்தோ-னணலார்

44 திருக்காஞ்சி மேவுங் திருவேங் கடவர்
பெருக்காஞ்சி நகரமும் பேறு-யிருக்குமணி

45 மண்டபமும் தண்டா மதிளும் நெடுவீதி
கொண்டபெருங் தெருவும் கோபுரமும்-கண்டுபுகழ்

46 கண்டோ னல்லாத பழிகாணு நல்லோருறவு
கொண்டோ ன்கல்லாருறவு கொள்ளாதோன்-தண்கடலூர்

கிளரக்கவந்தம் - மெலெழும் கவந்தம் (தலையற்ற உடல்).

41. புக்க-உதித்த. புல்லார்-பகைவர்.

42. சூழி வட்டத்துள்-கடல் வட்டத்துள், யானையின் முக படாம், நெற்றி. சிகரச்சோணை-இரத்தின மலை அல்லது மேரு மலை. கடாசலம்-யானை.

ஆபரணம் தரித்த கையில் உள்ள சக்கராயுதத்தை மேரு மலைக்கு ஒத்த யானையின் முகபடாத்தில் செலுத்தும் வெற்றியான் என்று ஒரு பொருள். கடல்சூழ் மேருமலைநிறைந்த உலக முழுதும், தன் ஆஞா சக்கரம் செலுத்தும் ஆணையான் என்பது மற்றொரு பொருள். ஆழிவட்டம்-தேர் உருளை, சக்கராயுதம், ஆஞாசக்கரம். ஆணை-கட்டளை, வெற்றி.

43. தணவாத-நீங்காத. சாங்தை-சந்தனம். சதுரகிரி-சதுர மலை. செங்கண்மணவாளர்-திருமால். சதுரமலை திருமால் மீது அன்பு பூண்டோன்.

44. பெருங்காஞ்சியில் நகரமும் திருவேங்கடநாதப் பெருமா னுக்கு கோயிலும், மணிமண்டபமும், மதிளும், பெருங்தெருவும், கோபுரமும் எடுத்ததைக் குறிக்கிறது.

46. பழிகாணு நல்லோர் உறவு கொண்டோன், கல்லார் உறவு காணுதோன்-என்னும் சொற்றொடர் கண்டு இன்புறத்தக்கது.

47 தென்கச்சி மேவுந் திருமலை நராதிபதி
தன்கைச் சிறப்புத் தரத்தந்த-முன்கைக்

48 கடகங்குழைக் கமைந்த கட்டாணி முத்தும்
புடகமவுலி பிறவும் மடலொடு-பொன்

49 காளாஞ்சி வீசுங்கவரி கனக பல்லக்
காளாஞ்சிறு பொன்னணைசுடனே-தாளாத

50 ஆலவட்டந் திக்கே முகிலவட் டும்புரக்கும்
கோலவட்டக் கொற்றக்குடை யுமுள்ளோன்-ஞாலம்

51 விளைக்கின்ற கீர்த்தி வினைதீர்த்தா னன்பு
வளர்க்கின்ற செல்வ மதலை-அளக்கின்ற

52 நெற்படியே கொண்டு நெறிப்படியே யிப்படியே
தற்படியே வெம்பஞ்சந் தாங்கினேன்-பொற்பமைந்த

---

47. தென்கச்சி திருமலை நராதிபதி-மதுரை நாயக்கஅரசர்கள் கச்சி பூபதி என்று அழைத்துக்கொண்டனர். திருமலை நாயக்கர் சமகாலத்திருந்த குமரகுருபரர் 'மதுரை மீனுட்சியம்மை குறம்' என்ற நூலில் "சீர் வாழி கச்சி நகர் திருமலைபூபதி வாழி" என்று பாடுகிறார். திருமலை நராதிபதி என்பவர் மதுரையில் ஆசிரியரின் காலத்தில் ஆண்ட திருமலை நாயக்கர் ஆவார். வீரைத் திருவேங் கடநாதன் திருமலை நாயக்கரின் கீழ் பணிபுரிந்த தலைவன். அவனுக்கு திருமலை கொடுத்த சிறப்புகள் இங்கு பேசப்படு கின்றன. முன்கைக்கு கடகம். புடகமவுலி-தாமரை முடி.

49. காளாஞ்சி-தாம்பூலக்கலம். பொன்னணைசு-பொன்னால் ஆன மோதிரம் போன்ற கட்டு. தங்கப் பல்லக்குக்கு தூக்கு முகத்தில் மகரம் அல்லது மீன் போன்ற பொருத்தம்.

50. ஆலவட்டம்-விசிறி. கோலவட்டம்-அலங்கரித்துள்ள கொற்றக் குடை.

51. வினைதீர்த்தான்-நாயக்கர் காலம் தொடங்கி (16ம் நூற் ருண்டிலிருந்து)பல சிற்றரசர்கள் இச்சொற்றொடரை பட்டமாகக் கொண்டிருந்தனர். செல்வமதலை-செல்வம் கொடுக்கும் மரம் அல்லது தூண்.

52. பஞ்சந்தாங்கி-ஒரு பட்டம். ஏதற்படியே-பிறர் கண்டு பொருமைப்படும்படி.

53 தென்வீரை மேவுந் திருவேங் கடனாதன்
முன்வீரை போற்றவரு மூவரையன்-பொன்வீரை

54 தேக்கும் திருவேங் கடனாதன் தென்வீரைக்
காக்குந் திருவேங் கடனாதன்-ஆக்கமளித்

55 தீட்டும் பலனு ளினியவளங் கொண்டகண்ட
நாட்டிலொரு சாந்தை நன்னகரில்-வேட்டுறைவோன்

56 காலமொரு மூன் றுணருங் காசிப கோத்திரத்திற்
சீல மறைவாசு தேவன்யான்-ஞாலம்

57 மரபிலபி ராமியெனு மாதை வரைந்து
கரவிலின்ப மோகவல்லிக் கைக்கே-மருவிப்

58 பழகப் பழகப் பலரறிந்து பின்வேட்
டழகுக் ககமு மிரண்டாக்கி-விளைவொக்க

59 வாழுமந்த நாளிலின்ப வல்லி முறையினரை
சூழுஞ் சயனத் துணரனைக்கே-யேழையேற்

60 கேயுமொரு பத்தாமிடத்துச் சனியனென
தோயுநக ரேகையொன் று தோன் றுதலும்-சேயிழையும்

---

53. மூவரையனுக்கு வேங்கடநாதன் என்றும் பெயர். பொன்வீரை-பொற்கடல்.

55. கண்ட நாடு-நாட்டுப்பெயர். சாந்தை நகரில்-ஊர்ப் பெயர். இக்கண்ணி முதல் அந்தணனின் வரலாறு கூறப்படுகிறது. வேட்டுறைவோன்-வேள்வி வேட்டு வாழ்பவர்-அந்தணன்.

56. வாசுதேவன் என்பது அவன் பெயர். அவன் 'காசியப' கோத்திரத்தில் பிறந்தவன். ஞாலம்-உயர்ந்த.

57. அபிராமி என்ற பெண்ணை மணந்தான். கரவு+இல்+ இன்பம்-பொய்யில்லாத வஞ்சகமில்லாத இன்பம். மோகவல்லி என்பவளையும் புணர்ந்து. மருவி-அணைந்து.

58. அகமும் இரண்டாக்கி-இரண்டு வீடுகள் அமைத்து.

59. நரை சூழும் சயனம்-வெண்மையான சயனம். உணர் ஊடல், பிணக்கு. அனைக்கே-விரோதத்தில்.

60. ஏயும்-சேரும். பத்தாம் இடத்துச் சனி பாடுபடுத்தும் என்பது சோதிடர் துணிபு.

61 பின்னதனை நாலாம்பிறைப் போலவே நோக்கி
யின்னதென நிச்சயிக்கு மெல்லைக்கண்-முன்னே

62 யெரியு நெருப்பிடைனெய் யிட்டதெனக் கெட்டேன்
அரிவை மறுபேரிட் டழைத்தேன்-வெருவி

63 அதிரமணிக் கோவை யற்றெறிந்தாள் மேனி
விதிர முதிருடல் விளைத்தாள்-எதிரெறியும்

64 வேலொத்த கண்ணுள் வினைமுந் தியகனவு
போலொத் தினிப்பூரைப் போவென்ருள்-சாலவே

65 யிஞ்சொல்லிட்டுக் கெஞ்சி யிதம்பேச மென்மேலும்
பஞ்சிலிட்ட தீப்போலும் பற்றிஞள்-வெஞ்சினத்தி

66 சோரிக்கண் ணீருகிராற் றெட்டெறிந்து முத்தமிட்டு
வாரிக் குடங்கை மடியிருத்தி-பூரிக்க

67 நிற்கு மமுதநிலை தடவிச் சற்றுருகாள்
கற்கு முருகவிதங் காட்டினேன்-விற்கும்

68 பயல்கா ணியல்போலப் பாராட்டு மோபெண்
ணியல்காண் பிழைபொறுப்ப தென்றேன்-மயலால்

69 தனித்தனியே நான்சொல்லத் தக்கதெல்லாஞ் சொன்
னேன்
னினித்தனியா தங்கென் றெழுந்தேன்-துணித்த

70 விதியோ மனைதான் வெறுத்ததோ யென்ன
மதியோ தெருத்தலையில் வந்தேன்-பதியோடும்

---

61. நாலாம்பிறை நோக்கிஞல் துன்பம் உண்டாகும் என்பது நம்பிக்கை.

62. அரிவை-பெண்ணை மற்றவள் பெயரிட்டு அழைத்தேன்

64. பூரை-அலுத்து இல்லை எனல்.

66. குடங்கை-அங்கை.

67. பூரிக்க–உவக்க.

68. பயல்-பாகம்.

71 யேனையவ ரவற்றிடு வுத்ராக் கமணிப்
பூனையென மெய்ஞானப் புத்திவரத்-தானே

72 பிடர்பிடித்துத் தள்ளிவிதி பின்னே நடப்ப
யிடர்பிடித்து முன்னே யிழுப்ப-படரவச

73 மானேன் பலதீர்த்த மாடி வருதுமென
னேது துணிந்து நடந்துவிட்டேன்-போனேன்

74 குடகங் கருனடு கோகர்ணங் காசி
வடகங்கை கேதார மட்டுங்-கடவுள்

75 திருப்பதி கா ளத்திமுத்தி சித்தம் பலவ
ரருள்பொலியுஞ் செய்யதிரு வாரூர்-விருப்பின்

76 யிருந்துறையு மைய்யாறு மெம்பிரான் மேவும்
பெருந்துறையுந் தென்காணப் பேருந்-திருந்துமால்

77 புல்லாணி பாண்டி புனவை யிராமேசுரமற்
றெல்லாதலங் குமரி யித்தனையுஞ்-செல்லாத

78 ஆலயமொன் றில்லை னடாத் தீர்த்திமினி
மேலையுமொன் றில்லையென்று மீளுங்கால்-பாலனையாய்

---

71. உருத்திராக்கமணிப்பூனை-அடியார் வேடம் பூண்ட வஞ்சகன்.

72. படர-துயர், துக்க.

73. ஏது—எத்தனம். துணிந்து-தொடங்கி.

74. ஆசிரியர் குடகம், கருநாடம், கோகர்ணம், காசி, வடகங்கை, கேதாரம் என பாரதத்தின் வடபகுதியை குறித்துள்ள முறை மிகவும் பொதுவாகவுள்ளது. அல்லது ஆசிரியருக்கு அங்கு அதிக பரிச்சயமில்லை எனக் கொள்க.

75-76. திருப்பதி, காளத்தி, சிற்றம்பலம் (தில்லை), திருவாரூர், திருவையாறு, திருப்பெருந்துறை, தென்கானைப்பேரூர் (கானையார் கோயில்).

77. புல்லாணி-திருமால்பதி, பாண்டி நாட்டு திருப்புணலூர் இராமேசுரம், குமரி ஆய தலங்களுக்கு சென்றான்.

78. பாலனையாய்-விறலியை விளித்துக் கூறுகிறார்.

79 சண்பகச் சோலைத் தருமகிரிக் கொருபால்
நண்பழிக்கும் அல்லிவள னன்னாட்டில்-தண்பழனப்

80 போதிலங்குஞ் சிவிலிபுத்தூ ரிலக் கொத்தூருந்
தாதிலங்குங் கோதையன்னை சன்னதியில்-கீதம்

81 படிக்க நடிக்கும் பரிகலத் தாரின்பம்
வடிக்குமொரு காமகலா வாணி-குடிக்கொரு பென்

82 ணில்லாமை யாலய்யோ வென்றிரங்கிச் சென்றுதவம்
நில்லாமல் நின்று நெடுங்காலம்-எல்லாம்

83 அழுக்குடுத்துக் கோடிதெய்வ மாசரித்துக் கோது
முழுக்குவிட்டு நோன்பு முடித்து-விழுக்கற்ற

84 பேதைபெறும் பாதிப் பிராய மலடிருப்ப
கோதை அருளாற் குழைந்துருகி மாதுனக்குத்

85 தந்தோ மெனக்கனவு சாதிப்ப வேவிழித்து
முந்தோகை முந்திமுடிந்து கொண்டாள்—பைந்தொடிக்கு

---

79. தருமகிரி-ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில் உள்ள மலை. அல்லி வள நாடு—நாட்டுப் பிரிவு.

80. கோதைப் பிராட்டியின் சன்னதியில் . (ஆண்டாள் சன்னதி).

81. இசைக்கு ஏற்ப நாட்டியம் ஆடும் பரிவாரத்தார் குடியில் இன்பம் வடிக்கும் காமகலாவாணி—காமக் கலையில் தேர்ச்சி பெற்றவள்.

82 முதல் 85 வரை நாட்டியப்பெண் தனக்கு குழந்தை வேண்டுமென்று மேற்கொண்ட நோன்பையும், கோதை கனவு சாதித்ததையும் கூறுகிறது.

82. தவம் நில்லாமல் நின்று-இடையில் விட்டுவிடாமல் கடைப்பிடித்து.

83. அழுக்கு ஆடை அணிந்து, கோது-மயிர் வகிர்ந்து. கோதி முழுகுதல் விட்டு நோன்பு செய்தல் மரபு போலும். தெய்வம் ஆசரித்தல் என்னும் வழக்கு.

84. மலடு இருப்ப-கருவற்று இருப்ப.

85. கனவு சாதிப்ப என்னும் வழக்கு காண்க. முந்தி முடிந்து கொள்-முன்றானை முடிந்து கொள்ளல் மரபு போலும்.

86 மெய்பசந்து செவ்வாய்வெளிறி முலைக்கண் கறுத்து
மைபரந்த கட்டுணையும் வட்டணிப்ப-பையவய

87 றுந்தவே உந்தி மெதப்ப வொருதெய்வந்
தந்த கருப்பந் தரித்திடலும்-முந்தி

88 சிறந்துநிறை திங்கட் செல்லுனுள் சென்று
பிறந்தளவிற் கன்னிகுலப் பேர்கள்-அறந்தழைக்கும்

89 பெண்ணென்று ரப்போது பேறுங்கிடைத் துதெனத்
துண்ணென்று மேனிதுளிர் துளிர்த்தாள்-நண்ணியன்று

90 மாதிடமாய் பெண்பெறுவை மாதேயெனத் தெளிந்து
சோதிடா யுற்றகுறி சொன்னவர்க்கும்-வேதம்

91 நெடுங்கடவு ளோர்தனக்கு நெல்முதலாய் வட்டிக்
கிடுங்கடனே போல்தான மீய்ந்தாள்-துடங்குதவப்

92 பேறே யெனக்குப்பெரு ந்துணையே காமுகற்கு
வீறே யெனத்தான் விரும்பினுள்-மாறுது

93 மோந்து மடிச்சிலை முதல்கொட்டி கைநிரம்ப
வேந்து மகிழ்ச்சிபோ லேந்தினுள்-ஏந்தி

86–87-ம் கண்ணிகள் கருவுற்ற பெண்ணின் உடலில் ஏற்படும் மாற்றங்களை அழகாக வருணிக்கின்றன.

86—87. மெய் பசத்தல், செவ்வாய் வெளிறல், முலைக்கண் கறுத்தல், கண் வட்டணித்தல், வயிறு உந்த, உந்தி மெதப்ப கருப்பம் தரித்தாள்.

88. கன்னிகுலம் என்பது இங்கு தேவரடியார் குலத்தைப் போலும்!

90. இடம்பெருத்திருந்தால் பெண் பிறக்கும் எனச் சோதிடம் கூறியவர்க்கும்.

91. வேதம் ஓதும் அந்தணர்க்கும், நெல் முதலியன கொடுத்தாள். அது வட்டிக்கு இடும் கடன்போல் இருந்தது என்கிறுர் ஆசிரியர்.

93. தாய்க்கிழவி பொருள் சேர்ப்பதையே தன் குறிக்கோளாக கொண்டவள். அதற்கு யாது செய்தாலும் தவறில்லை என்பது அவள் வாழ்க்கை. அதை மனதிற்கொண்டு ஆசிரியர் மடிச்சிலையில்

94 எடுத்து விரகுமிடுஞ் சிலுகுஞ் சூதுங்
கொடுத்து முலையுங் கொடுத்தாள்-கொடுத்தவர்க்கு

95 வங்கண மாய்க்கைக்கு வகையற்றுரைத் தள்ளிவிட
கங்கணமா யேழாநாள் காப்புமிட்டாள்-அங்கையிலொன்

96 றற்றுரை மார்பிலுதைந்தப் புறமே தள்ளிவிட
பொற்றுள் விருதுதண்டை பூட்டினாள்-நற்றாய்

97 முகம் பாற்றித ழதிக் குமுரல் விளக்குஞ்
சுகம் பார்த்துவகை வெள்ளந் தோய்ந்தாள்-அகம்பிரிந்து

98 வீட்டிலே வந்தாரை வீண்வழக்கிட்டிப் படிக்கூத்
தாட்டுவோ மென்று தொட்டி லாட்டினாள்-நாட்டிலே

99 தாராட்டித் தெட்டிப்பணம் பறிக்கும் கீர்த்திசொல்லித்
தாராட்டிச் சீராட்டித் தான் வளர்த்தாள்-சீராக

பணத்தைக் கொட்டி அதைக் கையில் ஏந்தும்போது எவ்வாறு மகிழ்வாளோ அதுபோல அப்பெண் குழந்தையை ஏந்தினாள். அப்பெண்ணைக் கொண்டு ஏராளமான பொருள் சேர்க்க இயலும் என்ற மகிழ்ச்சி.

94. விரகு-சாமர்த்தியம். சிலுகு-அலட்டிக்கொண்டு கலகம் செய்தல். சூது-வஞ்சகம் இருந்தால்தான் பொருள் ஈட்ட முடியும் என்று முலைப் பால் கொடுக்கும்போது இவற்றையும் ஊட்டினாள்.

“.........வாய்த்த சங்கில்
சேனையுடன் வஞ்சித் திருட்டு மருட்டுமவ
தானப் புரட்டுத்தனம் பறிக்க—மானிடர்க்கு
செய்யுங்கபடு மகாதித் திரிப்பு மாகாசப்
பொய்யுங் கலந்து புகட்டினாள்”

என்று கூளப்பநாயக்கன் விறலி விடு தூதில் கூறுவதும் காண்க.

96. வங்கணம்-காதல், அன்பு. மகவு பிறந்த 7-ம் நாள் காப்பு இடல் மரபு.

97. முகம் பாற்றி இதழ-முகத்தைத் தள்ளி கண்மூட. திக்கு முரல-திக்கி ஒலி எழுப்ப. அகம் பிரிந்து-தங்கள் வீட்டை விட்டுப் பிரிந்து.

98. படிக்கூத்து-கீழ்ப்படியும்படி கூத்தாட்டுவோம்.

99. தெட்டில்-வஞ்சித்து. தாராட்டு-தாலாட்டு. அகம் பிரிந்து நம்மிடம் வந்தாரை வீண் வழக்கிட்டு தொட்டிலில் ஆட்டுவது போல கூத்தாட்டுவோம் என ஆட்டினாளாம். வாசுதேவமறை யோன் இவள் கைப்பட்டு இப்படித்தான் ஆட்டப்பட்டான்.

100 வாராதாரார் வந்துன் மையலுக்கு ளாகாதா
ராராராரரென்று தாராட்டினுள்-கூரும்

101 மதலைச்சொல் கேட்டெல்லாம் வந்ததெனப் பண்டை
முதலைச் சிக்கென முடிந்தாள்-விதலையிட்டுத்

102 தன்னைக் குறித்துத் தவழ்ந்தவுடன் தான்தேடும்
பொன்னைக் கிடைமுதலாய் போட்டுவிட்டாள்-அன்னை
க்குரல்

103 கேட்டு நடப்பளினிக் கேட்பானேன் சீர்மையெல்லாஞ்
சீட்டு நடக்குமெனச் சிந்தித்தாள்-தேட்டுணில்

104 வெல்ல வட்டச்சுட்டி விருதுகொடி யாமெனவே
சொல்ல வட்டச்சுட்டிகட் டித்தூக்கினுள்-மெல்லவே

105 வந்தாரைச் சூறைகொள்ளு மாற்றுனுக் கேற்றபச்சைச்
சிந்தூரமுஞ் சிறுகத் தீட்டினுள்-தந்தார் சொல்

106 உள்ளாக்கிக் கைக்கற்று ரோரிபோற் கூப்பிடுஞ்சொல்
கொள்ளாச் செவிக்குமணிக் கொப்புமிட்டாள்-வெள்
ளத்தின்

107 மீனுக் குணவூட்டி வீசுகின்ற தூண்டிலென
மானுக் கிருகண்ணில் மையுமிட்டாள்-தானெக்க

108 பூட்டுச் சுருட்டும் புனைசுருட்டும் பொய்சுருட்டுங்
காட்டிச் சுருட்டோலை காதிலிட்டாள்-நாட்டிலே

109 கன்னக்காறத் திருட்டுக்கள் ளரைப்போல கொள்ளை
கொள்ள
வன்னக்காறைப் பணியும் வன்னித்தாள்-பின்னுக்கு

---

100. இத் தாலாட்டுக் கண்ணி மிகவும் சுவையாயுள்ளது காண்க.

102. கிடைமுதல்-Fixed deposit?

103. சீட்டு நடக்கும்-சீமைஎல்லாம் இவளுக்கு உரிமையாகும்.

105. சூறை கொள்ளுதல்—கொள்ளை கொள்ளுதல். செந்தூரம்-செந்திலகம்.

108. தனக்கு ஒக்க பூட்டுகின்ற தந்திரமும், புனைசுருட்டு-சதி. சூது-மோசம். பொய்சுருட்டு-கள்ள உபாயம்.

109. காறைப்பணி-ஒரு வகை அணி. வன்னித்தல்-சிறப்பித்தல்.

110 துத்திட்டு லகமெல்லாஞ் சூறையிட்டுக் கொள்ளமுத்தின்
கொத்திட்டு ளுளிலடிக் கோளினுள்-சத்திக்கும்

111 பாதப் பரிபுரமும் பாடகமுஞ் சூடகமும்
போதப் பலப்பணியும் பூட்டினுள்-மோதிவிளை

112 பூமிக்கு ரமிடுவார் போலவே யிட்டுட்டிக்
காமிக்குத் தன்பருவங் கண்டுவிட்டாள்-நேமிக்குங்

113 கய்யழகு சேலைபணங் காசரிதோ யென்றுமகள்
மெய்யழகு கண்டுதன்னில் மெச்சினுள்-பொய்யுரையுங்

114 கற்றுந் தும் பாசாங்குங் கள்ளமுங்கண் டேயுவகை
பெற்றிந் திராணியெனப் பேருமிட்டாள்-பொற்ருெடிகேள்

115 எஞ்சாத பேதைமயி லிந்திராணிப் பெண்சாயல்
அஞ்சா றேழெட்டு வயதாகினுள்-செஞ்சொற்

116 கலையெல்லாங் கற்றுக் கிடந்தாள் சங்கீத
நிலையெல்லாஞ் சாதித்து நின்ருள்-துலையாப்

117 பரதவித மத்தனையும் பார்த்தாள்-மதனுல்
சுரதவித மத்தனையும் தோய்ந்தாள்-யிருதனமும்

---

110. துத்து-வஞ்சனை. அடிக்கோலினுள்-ஆரம்பித்தாள்.

111. பணி-ஆபரணம். 104ம் கண்ணி முதல் 111 வரை பெண் குழந்தைக்கு செய்தமை கூறப்படுகிறது. வட்டச் சுட்டிக் கட்டித் தூக்கல், பச்சை சிந்தூரம் தீட்டல், கண்ணில் மை தீட்டுதல், சுருட்டோலை காதிலிடல், வண்ணக் காறை அணிவித்தல், பரிபுரம், பாடகம், சூடகம் முதலிய அணிகளைப் பூட்டல் முதலியன.

114. பெண்ணின் அழகும், குணமும் கண்டு இந்திராணி எனப் பெயர் இட்டாள்.

115 முதல் அப்பெண்ணின் அறிவும் பருவமும் கூறப்படுகிறது.

116. செஞ்சொற் கலைகள் எல்லாம் கற்ருள்-கல்வியில் சிறந்தாள். சங்கீத நிலை சாதித்து நிற்றல்-இசையில் சாதகம் புரிதல் என்பது மரபு.

117. துலையா-ஒப்பு இல்லா. பரதவித்தை-நாட்டியம். பாத்தாள்-பார்த்தாள் என்பது பாத்தாள் என்று திரிந்து வந்தது.

118 நண்ணிப்பு டைக்குமுன்னே ஞகக்குருளை யைப்போல்
கண்ணிற் பரபரப்புங் காட்டினுள்-பெண்ணமுது

119 அங்கண்முன் கூடுமணங் காருடன் சிலனுள்
வங்கணமாய் போய்ப்போய் மருவினுள்-அங்கவருங்

120 கைவசமே செய்யுங்க லவிக்கிதத் தொழில்கள்
செய்வதெல் லாம்னுளிலே சீலித்தாள்-பைய்யவே

121 வட்டமிட்டுக் கொங்கைவந்த மங்கைப் பருவத்தே
கொட்டமிட்டுச் சூறையிட்டுக் கொள்ளையிட்டாள்-
தொட்டவரை

122 மண்டிப் பறிக்கவரும் வல்லடிபோல் சில்லறையில்
தண்டிப் பறிக்கத் தலைப்பட்டாள்-ஒண்டொடிகேள்

123 மாடத்தெருவு மருகுங் கடந்துபோ
ராடத்தலை தூசியா கினுள்-நீடியசொல்க்

124 காமக் கலாவாணி யந்தக் கன்னிக்குபதேச
மாமக் கலாபப் புத்திக் கடியிட்டாள்-வாமகளே

125 ஏத்துங் கவடுமயக் கிங்கிதமுஞ் சொற்பிரட்டுங்
துத்தும மக்குத் தொழிலாமே-மைத்தடங்கண்

அறிந்தாள் என்று பொருள். மதனூல்-கொக்கோக சாத்திரம் என்றும், காமநூல் என்றும், ரதிநூல் என்றும் அழைக்கப் பெறும். சுரதம்-புணர்ச்சி. தோய்ந்தாள்-கலந்தாள் அல்லது அணைந்தாள்.

118. நாகக் குருளை-யானைக் குட்டி

119. அங்கண்-அங்கு, அணங்கார்-பெண்கள். வன்கணமாய்-பொறுமையுடன். மருவினுள்-கலந்தாள் அல்லது அணைந்தாள்.

120. சீலித்தாள்-பழகினுள்.

122. வல்லடி-பலவந்த அல்லது பொய் வழக்கு.

123. தலைத்தூரி-தலைமுரசு.

124. கலாபபுத்திக் கடியிட்டாள்-கலக புத்திக்கு அடியிட்டாள்.

125. வா மகளே என்பது முதல் 157ம் கண்ணி ‘ இத்தனையும் பாவி இயம்பினுள் ’ என்பது வரை தாய்க்கிழவியின் உபதேசம்.

126 மானேதனந் தேடும் வாலிபம் போனல்தவுடு
தானேயுஞ் சினிச்சருக் கன்றே-வானம்

127 உறுக்க உழுங்கா ஊர்க்குப் போனல்வந்
தறுக்க மறுத்தாள் தேடலாமோ-நிறுத்தகலே

128 கற்குமோ கற்றிருவே கட்டழகும் வாலிபமும்
நிற்குமோ உள்ளளவும் நில்லாதே-தற்காலம்

129 செய்ததுபின் கோலஞ் செய்யாதே ஆருறவுங்
கையதனிலுண் டாகிலுண்டு கண்டாயே-கைதனிலே

130 தந்தா லொழியத் தனக்கினிய ராஞலும்
வந்தா லவரை மறுத்துவிடு-முந்தி

131 அடுக்கு மவரை நமக்கா ராய்வதென்ன
கொடுக்கும் பணமே குலங்காண்-வடுக்குறித்துப்

சிற்றம்பலக் கவிராயர் முப்பது கண்ணிகளில் தாய்க்கிழவி போதனையைக் கூறுகிருர். கூளப்பநாயக்கன் காதலில் சுப்ரதீபக் கவிராயர், 100 கண்ணிகளில் தாயின் போதனையை மிகவும் விரிவாகக் கூறுவது காண்க.

"உத்தரியம் சற்றே ஒருபால் தெரியவிட்டு
.... செம்பொற் குடங் காட்டி-முத்து நகை
காட்டி வகைகாட்டி நடைகாட்டி இடைகாட்டி நயம்
காட்டி இளையோர்க்கு ஆசை காட்டுவாய் ...... மானமின்றி
அப்பன் வருவான் அதன்பின் மகன் வருவான்
தப்புமுறை என்று நீ தள்ளாதே"

எனக் கூளப்பநாயக்கன் காதலில் வரும் பகுதி ஒப்பிடத்தக்கது.

125. தாய்க்கிழவி முதலிலேயே "நமது தொழில் கவடு, வஞ்சகம், சொல்பிரட்டு முதலியவற்ருல் பொருள் பறித்தலே" என்று தொடங்குகிருள்.

127. வானம் உறுக்க-மழை பெய்ய. உழுங்கா ஊர்-உழாத ஊர்க்குப் போனல். தாள்-நெல் முதலான புல். மழை பெய்யும் போதே உழுது பண்படுத்தாத ஊரில் அறுக்கப் பயிர் தேடலாமா.

131. கொடுக்கும் பணமே குலம் காண்-நமக்குப் பணமே சொந்த இனம் என்கிருள்.

132 பேசும் பழுதுண்டோ பெண்ணே வேப்பெண்ணைவித்த
காசும் பணமும் கசக்குமோ-பூசணிக்குள்

133 வேர்க்கவே கோட்டெறிந்து வெட்டிவந்த கூலியுங்கை
யேர்க்கவே சைக்கியற் கைகாண்-பார்க்குள்ளே

134 பெட்டிச் சுமையெடுக்கும் பேயனுங்கைக் காசுதந்தால்
கட்டிச் சுகங்கொடுக்கக் கட்டளைகாண்-தெட்டிப்

135 பறித்து மடிச்சீலை வெறும்பை யாகமட்டும்
வெறுத்து விடாதே விரும்பு-குறித்தபொருள்

136 தந்திரமாய்ப் பண்டுசிலர் தந்தார்வந் தாலப்பழைய
தொந்தரைநீ முன்னேரந் தோய்ந்தனுப்பு-வெந்தடவும்

137 வல்லபமாய் வீணிலே வாய்ச்சுகங் கொண்டாடும்
புல்லிக்குல வருடனிணக்கங் கொள்ளாதே-சொல்லியே

138 முக்கோடி செம்பொன் முடிப்புக்கொ டுத்தாலுங்
கொக்கோக மார்க்கருடன் கூடாதே-மிக்கதேன்

---

131. வடு-குற்றம். குற்றமாகப் பேசுவது தவறில்லை என்கிருள்.

132. வேப்பெண்ணை விற்ற காசும் பணமும் கசக்குமோ! சொல் வழக்கு.

133. கோடு-கொம்பு. வேர்க்கத் தொழில் செய்து கூலி பெற்றுவந்த பணமானாலும் அதை வாங்கிக் கொள்ளுதல் வேசைக்கு இயற்கையே.

134. கட்டளை-முறை. தெட்டி-வஞ்சித்து.

135. மடிச் சீலை-வயிற்றுச் சீலை.

136. தொந்தர்-அன்யோன்யமாய் பழகியவர்.

137. புல்லிக்குலவர்-தழுவிக்குலாவுவார்.

138. கொக்கோகமார்க்கருடன் கூடாதே என்பது-காமாந்தகருடன் கூடாதே என்கிருள். நோய் தொற்றும் என்பதாலே போலும்.

139 னூரிக்குஞ் சொற்கிள்ளாய் உள்ளூரில் வீண்சலுகைக்
காறருக்கு முற்றசுகங் காட்டாதே-வேறுதொழில்

140 போக்காமல் வீணிருக்கும்போ தொருவன்தந்த
கொட்டைப்
பாக்காயிரம் பொன்னய் பாவியாய்-ஆக்கமுடன்

141 பொன்போலத் துதிக்கும் புலவரைநீ யுந்துதித்துப்
பின்போய்கும் பிட்ட னுப்பி பின்னேவா--யின்பநமக்

142 காக்கமென் றேகூடுமவ னற்பமென்ரு லுஞ்சரியே
போக்கின னென்றுமெச்சிப் பூரையிடு-சேர்க்கை நலங்

143 தோற்ரு வயதிலேஞேர் தோயுமிடத்துக் கலவிக்
காற்ரு தவள்போல முதரத்து-மாற்றுமுறை

144 சொல்வா னிருந்தாலுஞ் சுற்றில்வரு மாதாயஞ்
சில்வானங் கைநெகிழச் செய்யாதே மெல்லியலே

145 யேத்தியெ வர்க்குங் கோவிலேறச் சலியாதே
சத்தியமுன் னுள்விதியை தள்ளுமோ-மெத்த

146 கரவிசிவ ராய்த்திரிவர் தான்வந்தா லன்றைக்
கிரவுசிவ ராத்திரியென் றெண்ணு-பரிவுடனே

147 பொய்யே னுன்தந்த பொருளாகப் போற்றுமற்ற
மெய்யே னுகவிடத்தும் விட்டுவிடு-தையலே

---

139. தேன்ஊறிக்கும் சொல் கிள்ளாய்-தேன் ஒழுகப் பேசும் கிளியே வீண் சலுகைக்காரருக்கு சுகம் கொடுக்காதே.

140. புலவர்கள் பொன்போல் துதிப்பார்கள் அவர்களை நீயும் துதித்து அனுப்பிவிடு சுகம் கொடுக்காதே என்கிருள். அவர் பணம் கொடுக்கமாட்டார் ஆதலின்.

148. இளைஞருடன் புணரும்போது ஆற்ருதவள்போல் அழுது அரற்று என்கிருள் மேலும் பணம் பறிக்க.

145. கோவில் ஏறச் சலியாதே. அரச மனே-அல்லது வழக்காடு மன்றம்.

146. கரவு-பொய்யாக, மறைவாக.

147. பொய்யே நான் உனக்குத் தந்த பொருள் எனக்கொள் என்கிருள்.

148 கோயில்மு றைகாலங் கூடியிரு கோபுரத்து
வாயிலடிக் கடிநீ வந்துபோ-கோயில்

149 மணியப் படிக்கு மாருதேகங் காணிப்
பணிஒப் பனுக்கொப் புப்பாராய்-குணிதாளத்

150 தட்டனுக்கு முன்னேர்ந் தானமையுஞ் சங்கீதப்
பெட்டனுக்கு நேரமொரு பேச்சளவு-நட்டுவனூர்

151 அண்ணுவி வந்தாலரை ஞழிகைப் பொழுது
பெண்ணு ரமுதே பிடித்துநட-கண்ணுன

152 ஓதிப் பிறத்தோ டொதுக்கு குழைபதுக்கு
வீதிப் புடைப்பரப்பி வீசிப்போ-போதுங்கால்

153 அங்கைவளை சற்றே அலுக்கிக் கலுக்கென்ன
கொங்கையினை மெல்ல குலுக்கிநட-யிங்கிதத்தால்க்

154 கற்பசுவிலே பால்கற மணலிலே தயில
நற்பதஞ்செய் கல்லிலே ஞருமுரி-சொற்படியே

155 நாடும் பணதிபணம் நற்பண்டம் நற்சேலை
தேடும் பருவத்தே தேடிக்கோ—வாடைமஞ்சள்

156 பூசுகுளி முழுகுபொன் பூண்டு முடியுன்
காசலையா யென்சொல் கடவாதே-நேசமுடன்

---

148. மணியப்படி-வேலைக்கு. வேலைக்குத்தவருதே என்கிருள். கண்காணி ஒப்பன்-கங்காணி அதிகாரி. ஒப்புப்பாராய்-சம்மதி.

149. குணி-கணக்காக. தாளத்தட்டன்-தாளம் போடுபவன் (நாட்டியத்துக்கு). சங்கீதப்பெட்டன்-சங்கீதப்பட்டன் என்பது பெட்டனெனத் திரிந்து வந்துள்ளது.

150. நட்டுவனூர் அண்ணுவி-நட்டுவனூர்கள் அண்ணுவிஎன்ற குடியினராகத் தெரிகிறது.

155. பணதி-ஆபரணம்.

156. காசு அலையாய்-அசைகின்ற மேகலையை உடையவளே.

157 இத்தனையும் பாவிபி யம்பின ளத்தனையும்
புத்தியென மகளும் பூரித்தாள்-எத்தும்

158 விரிவெடுத்துக் காட்டிய வள்வீட்டிலே தீப்பட்
டெரியுமிடத் தெண்ணெ யிறைத்தாள்-பெருகச்

159 சழக்கிட்டு முன்சும்மா தானாடும் பேய்க்கு
முழக்கிட்டு லகை முடித்தாள்-குளைக்குலவுஞ்

160 சேல்வட்டக் கண்ணாளுந் தேவடிமை தேட்டூணில்
மேல்வட்டப் பெண்களுக்கு மீறினாள்-கோல்வளைக்காய்ப்

161 போய்த்தெரியா தீந்தபொருள் நினைந்து வாய்புகுந்த
யீத்தெரியா தேங்கியி ருப்போரும்-வாய்த்தவிரு

162 தொட்டிக் கொண் டெண்ணில்லா வொண்டொடிக்காய் தட்டி
வெட்டிக்கொண் டாவிவி டுவோரும்-கிட்டியே

---

157. பூரித்தாள்–உவந்தாள்.

158. விரிவு எடுத்துக்காட்டி–அகல எடுத்துரைத்து. அவளே சாமர்த்தியம் மிகுந்தவள். அவளுக்குத் தாய்க் கிழவி எடுத்துரைத்தாள் எனில் கேட்கவும் வேண்டுமோ! எரியும் நெருப்பில் எண்ணெ இட்டது போல் ஆயிற்று என்கிறார். வீட்டில் தீப்பட்டு எரியுமிடத்து எண்ணெ இறைத்தால்" என்ன ஆகும் என்பது வழக்கு போலும்.

159. பெருகச் சழக்கிட்டு-பெரும் சத்தமிட்டு. சும்மா தானே ஆடும் பேய்க்கு. முழக்கிட்டு-முழக்கமிட்டு. உலகை முடித்தாள்-சாவு முற்றுவித்தாள்–தானே ஆடும பேய்க்கு முழக்கம் போட்டு ஒரு சாவு கொடுத்தால் கேட்கவும் வேண்டுமோ, அது போல.

160. தேவடிமை தேட்டூணில்-தேவடியார் சம்பாத்தியத்தில், மிகச் சிறந்த பெண்களையும் மிஞ்சினாள்.

161. கோல்வளை-அழகிய வளையை உடைய பெண். 'வாய் புகுந்த ஈத்தெரியாது' வழக்கு காண்க. 160-ம் கண்ணிமுதல் 185–ம் கண்ணி வரை அவளின் அழகிலும் மையலிலும் சிக்கி பிறர் பட்ட பாடு உரைக்கப்படும்.

162. விருது ஒட்டிக்கொண்டு-விருதை இணைத்துக்கொண்டு.

163 தோற்று தொதுங்கி சுவரிலெட்டிப் பாத்துள்ளே
வேற்று ளெனப்பதைத்து வீழ்வோரும்-ஆற்றுமல்

164 வெள்ளருக்குச் சத்திவினயக னுண்டாக் கியதுக்
குள்ளெருக்கிட் டேசேவித்தங் கேய்ப்போரும்-
உள்ளிருக்கும்

165 காமுகரைக் கூடுமங்கை கைத்தாடனத் தொனிகேட்
டேமுறவே மேல்மூச்செ றிவோரும்-நாமுறவே

166 உண்கலமற் றேடெடுத்தீர் ஊர்க்குப்போ மென்று
தள்ளக்
கண்கலங்கி நின்றுக லூழ்வோரும்-பெண்கொடியால்

167 மாலேறிக் கைக்கு வகையற்றூர்–கோபுரத்து
மேலேறிக் கூவென்று வீழ்வோரும்-ஆலம்பால்

168 ஒட்டுந்திரிட் டியும்போலொட் டுவிடாதிட்ட சென்ம
மட்டுந் திரிந்து மடிவோரும்-பட்டதினிப்

169 போதுமிவ ளாசையப்பா பூரையென்று கூரைதட்டிச்
சேதுமகா தீர்த்தஞ் செல்வோரும்-தோதகத்தார்

தட்டி-தப்பி. முட்டி-நெருங்கி. வெட்டி-துட்டித்து.

164. சக்தி வினயகர் உருவை வெள்ளெருக்கிலே செய்து மனத்தில் மந்திரம் ஒலித்து சேவித்தால் நினைத்த காரியம் கூடும் என்று நம்பினர். உள் எடுக்கிடு-மனதிலே மந்திரம் சபித்தல்.

165. ஏமுறவே-மயங்கியே. தாமுற-தாகம்உற.

166. கலுழ்வோர்-கலங்குவோர், அழுவோர்.

167. மால்-வேட்கை.

168. ஆலம்பால் ஒட்டும் திரிட்டியும் போல்-ஆலம்பால் கண்ணில் வீழ்ந்து விட்டால் இறுதிவரை குருடாகி வீழ்தல் வேண்டும் அது போல். ஒட்டிவிடாது-உடன்படாது.

169. பூரையென்று-அலுத்து. கூரைதட்டல்-தப்பித்தோம் என்று மகிழ்ச்சியால் தட்டி. தோதகத்தார்-வஞ்சம் நிறைந்த.

170 வன்புதரு மாமிசுக மிருக்க வென்றுபதி
ஒன்பதும் போய்ச்சேவித் துலேவோரும்-பொன்கையை

171 ஓட்டுக்கையாக்கி விட்டாளோ கெடுவா யென்றுதிட்டிப்
போட்டுப் பரதேசம் போவோரும்-வீட்டுக்குள்

172 வைச்செடுக் கத்தேடிமறந் திட்டார் போலிருந்து
பச்சொடுக்குக் கண்ணிலோட்டிப் பாப்போரும்-
கச்சடமும்

173 வட்டிக்கடன் கொடுத்து வந்தோமென்று ஊர்க்குப்
போய்
கட்டிக்கிடந் திழவு காண்போரும்-செட்டியாரைத்

174 தோட்டத்தலேப்பாகைத் துடந்தி மூக்கச் சாட்டை
சுற்றி
விட்டபம் பரம்போல வீழ்வோரும்-போட்டிக்குச்

175 சேலேகட்டிப் பொன்கொடுத்த தெண்டமோ தெய்வமே
சூலேகட்டித் தென்றுது டிப்போரும்-போலியாய்

176 ஈகைக் கிடமற் றிடித்துப் பொடியாக்கிக்
கூகைக் கண்பார்க்கில் கொடுப்போரும்-போகையிலே

177 தீந்துவழக் குரைக்குஞ் சிமாட்டி யாலாண்டி
பூந்துகரை யேறிப்போவோரும்-வாந்தகமாயக்

---

170. வன்புதருமாமி-வன்மை தரும் தாய்க் கிழவி. பதிஒன்பதும்-ஒன்பது திருத்தலங்கள்.

171. “ திட்டிப் போட்டு ” சொல் வழக்கு காண்க.

172. பச்சொடுக்கு-தோலே கண்ணில் இடுக்கிப் பார்ப்போர்.

173. கச்சடம்-கௌபீனம் அல்லது கோவணம்.

174. தலேப்பாகை-தலேச்சிலே.

175. சூலேகட்டி-புணர்ச்சியால் உண்டாகும் புண்கட்டி.

176. ஆண்டு-அங்கு. பூந்து-புகுந்து. கரையேறிப்போவோரும்-வருத்தம் நீங்கி செல்வோரும்.

178 கண்ணிக் களித்த கணக்குப்பத் தாயிரம்பொன்
னெண்ணிச் சிதம்பரம் மென்றேய்ப்போரும்-பெண
ணையார்

179 தாமாகவே பிடித்துத் தள்ளிவிட்ட போதுரகு
ராமாகோ வென்றுந டப்போரும்-மாமானு

180 சேத்து ணுனுன்னவெல் லாஞ்சிக்கினுள் சக்கவல்லி
போத்து ணுமென்றுசொல் லிப்போவோரும்-வாய்த்த

181 கெதிகெட் டோமென்று கிடப்போருந் தங்கள்
பதிவிட் டோமென்று பதைப்போரும்-மதிகெட்டான்

182 வல்லிப்பாட் டுக்கேட்டுவஞ் சகமில்லா மலெல்லாஞ்
சொல்லிப்போட் டானென்று சொல்வோரும் - மெல்லி
யற்காய்

183 ஏங்குவோரும் பலகா லெண் ணுவோரும் புறம்போய்த்
தூங்குவோரும் பிரியஞ்சொல் வோரும்-பாங்கிற்

184 கரைப்போரும் பாலிற்கவிழ்ப் போரு முண்டை
யுரைப்போரும் பாக்கிலிடு வோரும்-வரப்போகச்

185 சொல்வோருங் கேள்ப்போருந் தோய்வோரும் மாய்
வோரும்
செல்வோரு மாயிருக்குஞ் செல்விக்கே-மெல்லியலே

186 இத்தகைமை சற்றும் யானறியேன் தற்செயலாய்
அத்தலத்தைச் சேவிக்கு மாசையால்-உற்ற

---

178. பெண்ணுக்கு கொடுத்த ஆயிரம் பொன் என்று சொன்னால் சிதம்பரம் (ரகசியம்) என்று சொல்வோரும். ரகசியம் என்பதற்கு சிதம்பரம் என்னும் வழக்கு காண்க.

180. இதில் தெலுங்கு மொழியிலும் தமிழிலும் கலந்து கூறுவது காண்க. மாமா, ணு-(தெ) என்னுடைய. சேத்தனுன்-(தெ) கையில். எல்லாம் சிக்கினுள்-(தெ) கைப்பற்றிக்கொண்டாள். சக்க வெல்லிபோத்துனுமு-நேராக வெளியே போகிறோம் என்று சொல்வோரும். தெலுங்கு மொழியை அப்படியே தம் பாடலில் புகுத்தியுள்ள புலமை போற்றத் தகுந்தது.

182. வல்லி-பெண். சொல்லிப் போட்டாள் என்னும் சொல் வழக்கு காண்க.

187 திருப்பாற் கடலுந் திருமுக் குளமும்
விருப்பாய்க் குடந்தாடி மெல்ல-பொருப்பா

188 லுததி கடைந்த வொருபரனைக் கோட்டு
மதவிகடஞ் சொன்ன மாலை-நிதனை

189 வடபத்திர சாயியை யென்மாதா வைக்கோதை
விடபத்திர சாயல்விழி மின்னை - திடபத்திக்

190 கொண்டு பணிந்து குழைந்துகு ழைந்துருகிக்
கண்டு திருவாய் மொழிகழறி-பண்டை

191 வினைப்பந்த னூறிவிதிர் விதிர்த் தானந்த
நினைப்பந்தம் போய்தனியே நின்றேன்-அனைத்தளவில்

192 கொந்திட்டுப் பின்னளக்க கோடீர முங்களபச்
சந்திட்ட கோட்டுத் தனத்தொரு-முந்திட்டு

193 இலகுமணிக் கச்சுமெறிக்கும் புரூரத்
திலகவட்டச் சிந்தூரத் தீட்டுங்-கலகஞ்

---

188. உததி-கடல். மதல்-பெருமை. விகடம்-அழகு.

189. வில்லிபுத்தூர் உரை வடபத்ரசாயி-திருமால். விட பத்திர சாயல் விழி-தாமரை போன்ற அழகுடை கண்ணுள், மின்-பெண், இங்கு கோதை.

190. திருவாய்மொழி-வைணவ வாக்கு, கழறி-சொல்லி.

191. வினைபந்தம்-வினைத்தளை. நூறி-அழித்து. கண்ணி 186 முதல் 191 வரை திருமால் மீது பக்தியை மிக நயமாகப் பாடியுள்ளார் ஆசிரியர். 192 முதல் 195 வரை அந்த நாட்டிய மகள் சேவிக்க வந்த அழகு கூறுகிருர்.

192. கொந்திட்டு-ஒற்றைக் காலால் ஆடும் விளையாட்டுப் போல் அசைந்து வரும். கோடீரமும்-சடைப் பின்னலும். களபச் சந்திட்ட-கலவை சாந்திட்ட. கோட்டுத்தனம்-பெரிய தனம். முந்து இட்டு-முந்தானை இட்டு.

193. இலகுமணிக்கச்சும்-ஒளிவிடும் மணிக்கச்சும். எறிக்கும் புரூரம்-வெட்டும் அல்லது வீசும் புரூரம்-நெற்றியைக் குறித்து நிற்கிறது. வட்டச் சிந்தூரத்திட்டு-திலகப் பொட்டும்.

194 சருவுகயல்க் கண்ணு முகசந் திரோதயமும்
கருவுங் குழைமகர வீச்சும்-பரத

195 வகைச் சந்தத் தாளுமடு வுந்திபூத்த
தோகைச்சந்திர காவிச் சொருக்கு-மிகுத்த

196 கலன்புரத் திக்கெல்லைக் கதிரெறிய மெல்லச்
சிலம்பரத்த வொல்லைச் சிறந்து-நிலம்பிறவே

197 வந்தாதர வின்மணி விளக்கை கூப்பினுள்
செந்தாமக் கோதைத் திருமுன்னே-நந்தாது

198 பாரிக்குந் தாளம்பணிப் பத்தனங் கணிப்பப்
பூரிக்குந் தித்திஒத்துப் பொம்மென்ன-தேருமிசை

199 கானமிளத் தக்கணித்த முறைச் சங்கீத
தானநெறிய புட்பாஞ்சலி முதலாய்-வானம்

---

194. சருவு-கொஞ்சும்.

195. பரதவகை சந்தத் தாளும்-சந்தத்துக்கு ஏற்ப நாட்டியம் ஆடுவது போன்ற அடியும். உந்திபூத்த தோகை–உந்தியில் தோன்றும் பெண்மயிர். சந்திரகாவி-ஒருவகைச் சீலை. சொருக்கு-சொருகியுள்ள அழகும்.

196. கலன்புரம்-ஆபரணம் நிறைந்த புரத்துக்கு எல்லை போல் அலங்கார அணி மிகுந்தவள். அரத்த-ஒலியிடல். ஒல்லை-வேகம். நிலம்பிறவு-நிலம் விளங்க.

197. தாமம்-மாலை. நாட்டியம் ஆடும் பெண், நடப்பதே நாட்டியம் போலத்தான் இருக்கும். அதுவும் அழகுடைய பெண்ணாய் இருப்பின் அவளது நடை அனைவர் மனதையும் கவரும். அதுவும் அவள் மீது காதல் கொண்டவர் கண்ணுக்கு அவள் நடையின் அழகைக் கூறவும் வேண்டுமோ!

198. நந்தாது-கெடாமல். பாரிக்கும்-விரும்பும். பணிய-ஒலிக்க. பத்தன் அம் கணிப்ப-பதம் அழகாக சுரம் மீட்ட, பூரி-காற்று நிறைந்த. தித்தி-ஒரு ஊதுகுழல் அல்லது வாத்தியம், ஒத்து-துருத்தி. பொம் என்ன–பொம் என்று ஊத. தேரும் இசை கானம்-தேன் போன்ற இசை இராகம்.

199. இலத்த-இழைக்க, சங்கீத தான நெறி-சங்கீதஸ்தான நடையும். 196லிருந்து அப்பெண் ஆடிய வகை கூறப்படும்.

200 நெடிப்பாம் வயிணவத் தேநின்று பதாகை
பிடிப்பாற் கடவுளடிபேணி-நடிக்கும்

---

197. ஆண்டாளின் சந்நிதியில் வந்து வணங்கி ஆடத் தொடங்குகிருள். தாளம் ஒலிக்க, பதம் சுரம் மீட்ட, தித்தி என்னும் வாத்தியம் பொம் என்ன தேன் போன்ற இசை சிறக்க சங்கீத ஸ்தான நெறியில் நின்று புட்பாஞ்சலியில் தொடங்கி, வைணவஸ்தானத்திலே நின்று, பதாகை பிடித்து, கடவுளடி பேணி ஆடினுள் என வருவது காண்க. நாட்டியம் ஆடும் நிலைகளை ஆறு வகையாக (1) வைணவம், (2) சமம், (3) வைசாகம், (4) மண்டலம், (5) ஆலீடம், (6) பிரதியாலீடம் எனப் பிரிப்பர். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையில் அடியார்க்கு நல்லார் இதற்கு அகத்தியத்திலிருந்து மேற்கோள் காட்டுவார். "அறு வகை நிலையும் ஐ வகைப் பாதமும் ஈரெண்வகைய அங்கக் கிரியையும் வருத்தனை நான்கு நிருத்தக் கைமுப்பதும் அத்தகு தொழில வாகும் என்ப" என்பார். வானநெடிப்பு-தலை மேல் நோக்கி. வைணவத்தே நின்று-வைஷ்ணவ ஸ்தானத்தில் நின்று, பதாகை பிடிப்ப-கைபதாகை முத்திரை பிடித்து கடவுளடி பேணி தொடங்கினுள்: 'தலபுஷ்பபுடம்' என்னும் கரணம் புஷ்பாஞ்சலி செய்யும்போது நடிக்கப்படும். அந்தக் கரணம் 'வைஷ்ணவ' நிலையில் நின்று செய்வது. இதைக் குறிக்கும் சிற்பம் கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் இருக்கிறது. பதாகை:—நாட்டியத்தில் பிடிக்கும் கை முத்திரைகளை 'ஹஸ்தம்' என்றும் 'கை' என்றும் கூறுவர். இதை அடியார்க்கு நல்லார் "ஒற்றைக்கை" என்றும், "இரட்டைக் கை" என்றும் கூறுவர். அதை இணையா இணைக்கை என்றும் "இணைக்கை" என்றும் கூறுவர். ஒற்றைக்கை முப்பத்து மூன்று வகைப்படும், அவற்றுள் முதன்மையாகக் கூறப்படுவது "பதாகை"என்பதாகும். "பதாகக் கையாவது நான்கு விரலும் தம் முள்ஒட்டி நிமிர பெருவிரல் குஞ்சித்து நிற்பது. என்னை? "பதாகை என்பது பகருங்காலைப் பெருவிரல் குஞ்சித்தலா விரல் நான்கும் மருவி நிமிரும் மரபிற்றென்ப" (அடியார்க்கு நல்லார்). இதையே அபிநயதர்ப்பணம் என்னும் நூல்

"அங்குலி நாலும் நீட்டி அங்குட்டந்தனை வளைத்த
செங்கையைப் பதாகம் என்று செப்பினர்
வினியோகங்கேள்

மங்கையே நாட்டியாரம்பம் வாரிநீர் ஓடல் காடு
தங்கும் இந்துவை நிந்தித்த தனதடங் கட்கும் தானே"

என்று கூறுகிறது. இங்கு பதாகை நாட்டியாரம்பத்தில் காட்டல் வேண்டும் என்றுள்ளது. இந்நூலில் நாட்டியப் பெண் பதாகை.

பிடித்துக் கடவுளடி பேணினுள் என்பதும் காண்க. பரத நாட்டியம் ஆடும் பெண்கள் கோயிலில் எவ்வாறு தொடங்கி என்ன ஆடினுர்கள் என்று அறிய இது உதவுகிறது. இதே பகுதியை கூளப்ப நாயக்கன் விறலி விடு தூதில் சுப்ரதீபக் கவிராயர் விரிவாகக் கூறியுள்ளது நினைவு கூறத் தகும்.

—தெய்வசுதி

காணும் இசை ராகங் கைத்தாளம் மத்தளங்கை
வீணை பலகை தித்தி வேணுசுரம்-கோணுமல்

கூடும் சுருதியுடன் கொம்பனையாள் சங்கீதம்
பாடும் சுருதி இன்பம் பாலிக்க—ஆடவரை

எய்யும் மதவேள் கைக்கிசையும் மலரீவாள் போல்
தையலால் புஷ்பாஞ்சலி செய்தாள்-செய்துபிள்ளை

யார் கவுத்துவங் கொண்டாள் ஆட இளையநய
ஞர் கவுத்துவங் கொண்டு நண்ணினேன் சேரும்

நிலைக்கிடை கொண்டாள் மருட்டு நீலமலர்ச் செங்கண்
வலைக்கிடை கொண்டாள் என் மனத்தைக்-கலைப்பரத

முந்தோ ரெடுப்பெடுத்தாள் சூரிவில்லைப் பூட்டி என்மேல்
வந்தோ ரெடுப்பெடுத்தான் மதனவேள்-நந்தி சொன்ன

சொற்கட்டில் ஆரிதொடுத்தாள் முன்னின்ற வரை
மற்காட்டு வாள்போல மறையநின்றேன்-பொற்கடக

கைச்சலாங் கொண்டாள் கனம்பேசலாமிதற்கே
மெச்சலாம் என்றுரைத்தாள் விஞ்சையோர்-மெச்சுந்

தருக்கண்டாள் மற்ருேர் சதிகொண்டாள் கண்டே
மருட் கொண்டிருக்க எனைவைத்தாள்-விரித்த சுருள்

பாதி மடித்தாள் கீதம் பாடினுள் பூப்போட்டு
வாதினடித்தாகும் மயங்கி ஞர்-சூது முலை

மாதுபிரபந்தம் வகுத்தாள் இதற்குரைப்பது
ஏது பிரபந்தம் என எண்ணினேன்-நாதப்

பதசாரி சாரி கொள்ளப் பார்வேந்த ரீந்தார்
முதுசாளி கைப்பொன் முடிப்பை-எதிராக

நின்ற வினயங்கள் செய்தாள் நிஷ்டுரீ என்மனது
கன்ற வினயங்கள் செய்தாளே கண்ணலே-மன்றிலோரு

201 பதயுகஞ் சற்றொல்க விதம்பத்து கமலக்கை
கிசைய கமலமிடைந்தென-பதமுறைபோய்

202 மிக்கமிடத் தொல்கவுத்தி வெட்டித்துள் ளேகடைக்க
ணுைக்கமலைக்குந் தொழிலுக் குணமலைந்தேன்-திக்
கெறியும்

கோப்பெடுத்தாள் வேந்தர் பொன்னை கொள்ளை கொள்ள
கள்ளியிந்த
கோப்பெடுத்தாள் என்றூர் என்கூட வந்தோர்-காப்பான

தாரணி கொண்டு ஆள்வோர் தடமகுடங்கம்பிக்க
பேரணி கொண்டாள் ஆசைப்பேய் கொண்டேன்-ஆரணங்கு

சக்கணி நின்ருடச் சபையிலே ஓடியந்த
மைக்கணியை முத்தாட வாஞ்சித்தேன்—இக்கனையாள்

செயிலாகு வித்தையினுல் செம்பொன்உடல்ஓம் என என்
கைலாகில் ஏந்தக் கருத்தானேன்-மைவாளும்

கைவாளும் என்னை வெட்ட கள்ளிஒரு கூத்துவிதம்
செய்தாள் அமமான் வலையில் சிக்கினேன்—தொய்யாமல்

தேசிகத்தில் ஓர் நடனஞ்செய்தாள் கடையில் உள்ள
கோசிகப் பொன் ஆடைஎல்லாம் கொள்ளை கொண்டாள்-
பேசும்

நயமங்களப் பெண் நடம்பல செய்தாள்
செயமங்களம் பாடி தீர்ந்தாள்''—

என்று அரங்கத்தில் நுழைந்தது முதல், மங்களம் பாடி முடிப்பது வரை அடுத்தடுத்து என்ன என்ன நடித்தாள் என்று பட்டியல் போலக் கொடுத்திருப்பதும் நயமாகப் பாடியிருப்பதும் காண்க.

201. நடிக்கும் பதயுகம் சற்றொல்க - நாட்டியமாடும் இரு தாள்கள் சற்றுவளைய அல்லது சாய, விதம்பம்-கண்பரிபாஷை.

201. இசைய-பொருந்தப்பண்ணல், கமலக்கை, விதம்பத்துக்கு இசைய எனக்கொள்க, 'கைவழி நயனம் செல்ல' என்பான் கம்பநாடன்.

202. மிடத்து-வலித்து. ஒல்க-நெறிய. உத்தி - சேர்த்தல். வெட்டி - பிரித்து. துள்ளே - இமைத்து. மலைக்கும் - பூரிக்கும். உணமலைந்தேன்—வருந்தினேன்.

203 கண்ணுக்கு மின்பங்கனி யுங்கனி வாய்த்தேன்
பண்ணுக்கு முள்ளம்பறி கொடுத்தேன்-தண்ணிதம்பச்

204 சற்படந் தாளடர்ந்த தாளந்தீர்ந் தங்கொருபால்
நிற்பது கண்டங்கே நிலைகுலைந்தேன்-பொற்பமைந்த

205 ஓலக்கம் பூரையென்ன வொண்டொடியும் பூரை
யிட்டாள்
வாலக்க லாபமயில் போலுஞ்-சீலமிகுஞ்

206 சம்போக வல்லி சரசவல்லி மோகவல்லி
அம்போ ருகத்தா ளமிர்தவல்லி-கெம்பீர

207 வல்லிகுண மாலைசுர மஞ்சரிசஞ் சீவிசுகஞ்
சொல்லிய பரஞ்சிசுக பானு-எல்லாருஞ்

208 சூழுங் குழாத்தோடு தோகையிந்தி ராணியுந்தான்
வாழுந் தனதுமனை புகுந்தாள்-ஊழ்வினையால்

209 நானுந் துடந்து நடந்தேன் சஞ்சீவியென்பா
ளேனந்தணீ ரென்றெதிர் வந்தாள்-மானனையீர்

210 இந்த மாதா ரென்றேன் னென்றவுட னெநகைத்திட்
டந்தணீர் நாமிவ் வூரல்லவோ-வந்து

---

203. நிதம்பம்-அல்குல்.

204. சற்பபடம்-பாம்பு படம்.

205. ஓலக்கம்-அத்தானிக் காட்சி. பூரை-நிறைந்தது என்ன. பூரைஇட்டாள்-நிறைவு செய்தாள். வாலக்கலாபமயில்-வாலில் அழகிய தோகையை உடைய மயில்.

206. அப்பெண் இன்பமே உருவாணவள் என்பதைக் குறிக்க ‘சம்போகவல்லி, சரசவல்லி, மோகவல்லி, அமிர்தவல்லி, கெம்பீர வல்லி, குணமாலை, சுரமஞ்சரி, சஞ்சீவி, சுகஞ்சொல்லி, அபரஞ்சி, சுகபானு என்னும் சொற்கள் காணத்தக்கவை.

209. துடந்து-தொடர்ந்து என்பதன் திரிபு. ஏன் நந்து நீர்-ஏன் மறைந்து வந்தீர் எனக் கேட்டாள். ஏனம் எனில் பன்றி என்றும் பொருள். அப்பெண்ணின் வீடடைந்த அவ்வந்தணர் ஏனம்தான்-பன்றியை ஒத்து சேற்றில் உழல்வார் என்பது தொனிக்கப்பாடுகிறார் ஆசிரியர். அந்தணீர் என்றுவிளி யாகவும் கொள்க.

210. வந்து புதிதோ-புதிதாக வந்தீரோ.

211 புதிதோ கதிரெறிக்கும் பூசக்கிறவாளத்
தகிமோ கனப் பெண்ணரசு-முதிர்ஞான

212 சீலமறை வாணர் தெய்வ மதனகுரு
கூடஞ் சுரதகுரு பீடம்-மேலும்

213 கருமந்தி ருந்துவரும் காமகலா வாணி
தருமிந்தி ராணியிவள் தான்காண்-வரவந்த

214 நாமோ வெனிலு மொருநான் வாசுதேவ னென்றே
யாமோ உமைக்கேட் டறிந்திருப்போம்-ஆமென்றுள்

215 மாதேமறுத் துமுங்கள் வஞ்சிதனக்கே கொடுப்ப
தேதேதென வுமெடுத் தேத்தினுள்-போது

216 மிரவைக்குப் பொன்னூற் றிருபதுரொக் கம்பொன்
பரவைச் சுகந்தம் பொன்பத்துத்-தரகு

217 பொருத்துஞ் சஞ்சீவிக்கிப் பொன்னிருவ தல்லால்
முருத்து நிறச்சேலையிலே மூன்று-திருத்தமணி

218 மேவுஞ் சயன விதானத்திற் பொன்பத்துக்
காவும் பயிட்டாணிக் கட்டுவற்கம்-யாவுமுதல்

---

211. கதிர் எறிக்கும்-ஒளிவிட்டு பிரகாசிக்கும். முதிர்ந்த சீலமும் ஞானமும் உடைய மறைவாணரும் இவளை போற்று பவராம். வந்துள்ள அந்தணர்க்கு ஏற்ப மொழிகின்றாள்.

212. கூடம்-சேர்க்கை, சுரத குருபீடம்-அழகிய காமச் சுக மளிக்கும் பெரும்பீடம் என்கிறார்.

215. மறுத்தல்-வெட்கியும்.

216. அவ்வேசை காமசுகம் அளிக்க ஓர் இரவுக்கு வாங்கும் பொன்னுடன் பிறவும் இவ்வளவு என நான்கு (214-217) கண்ணி களில் விலை பேசுகிறாள். இரவுக்கு 120 பொன். பரவைச்சுகந்தம்-கடல்வழிவந்த சுகந்தம். வாசனைப் பொருள்களுக்குப் பொன் பத்து. தரகு பொருந்தும் இச்சேடிப் பெண்ணுக்கு பொன்-20 முருத்து-முத்து முத்துநிறச் சேலையில் மூன்று.

218. சயனவிதானம்-படுக்கை மேல் கட்டி பொன் 10. கா. பயிட்டாணி-முத்து.

219 இம்மட்டிலே பொன்னெழு நூறெண் ணூ றென்றுள்
அம்மட்டிலே யானுமா மென்றேன்-தொம்மிட்டுச்

220 சென்றுளங் கெப்படித்தான் செப்பினு ளோவருக
வென்றுளென யானுமில் புகுந்தேன்-குன்றுத

221 தண்ணமலர்ச் சேக்கைத் தனிலிருத்திச்-சஞ்சீவி
பெண்ணமுதுக் கென்வரவு பேசினுள்-பெண்ணமுதும்

222 பங்கேரு கத்தாள் பரிபுரங்'கல்' லென்றரத்த
வெங்கேயெங் கேயென்றெதிர் வந்தாள்-அங்கே

223 நகைத் தொல்கித் தன்னிலேனுணி விழியாற்
பகைத் தொருபால் நின்றுபகர்வாள்-மிகத்தெளிந்த

224 மார்க்கமோ யிவ்வூரில் மணவாசியோ பிறருக்
கேர்க்குமோ கண்டவர்க ளென்சொல்வார்-ஆர்க்குநீர்

225 தூது விடுவீர் வந்தால்சும் மாவாராரேவி
தேது தனதாகிலித் தனையேன்-பேதகமோ

226 யென்ன வசனித் தினியிங் திராணிபல
சொன்ன தற்பின்னங்கே சுவரொதுங்கி-கன்னமிடுங்

227 கோற்காறர் போலமகள் கூத்தாட்டுக் கேத்தவட்டத்
தோற்காது மாமிவந்து தோன்றியே-கார்க்கோதை

218-219. பயிட்டம்-முத்து-முத்து ஆணி கட்டுவர்க்கத்துக்கும். ஆக இம்மட்டிலே-இதற்கு மட்டும் என்கிருள் மேலும் கொடுத்தல் வேண்டும் என்பது பொருள். இதன்பொருட்டு 700-800 பொன் ஆகும் என விலை பேசுகிருள்.

220. தொம்மிட்டுச் சென்றுள்-குதித்துச்சென்றுள்.

222. பரிபுரம் - கால்சிலம்பு. எங்கே எங்கே என்று எதிர் வந்தாளாம். இப்படி அழைத்தவள் பின்னல் எப்படி நடந்தாள் எனக்காணலாம்,

223. விழியால் பகைத்தல்-விழியால் முரணி.

226. வசனித்து-பேராசைப்பட்டு.

228 மாதே பலபலென வாசற் கெவுளி சொல்வ
தேதே திடந்து டிப்பதென்றுயே-சோதிடம்போ

229 லுன்னேயக் கண்ணுக்குரியார் வருவரெனச்
சொன்னெனே அப்படியே தோன்றித்தோ-மின்னே
னூன்

230 வந்தே னென்றங்கோது வந்தால் வளவில்லாச்
சந்தேக மென்தடுப்பார் தானுண்டோ-முந்தவே

231 தந்தோ வரவேணுந் தங்கள் தராதரங்க
ளந்தோ முனங்கேட்டு மறியாமோ-யிந்தடவில்

232 தேடலா மென்றுல் திரவியமும் பாரமோ
வீடெல்லாம் பொன்னுய் விளேயாதோ-தேடினுல்

233 பொன்னும் பணமும் புலேயன்படைத் ததனுல்
என்னுண்டு நல்லுறவங் கெய்துமோ-கன்னிக்குப்

234 பாசம்பழ நழுவிப் பாலில் வீழுந்ததிந்த
வாசலிலே தாங்கள்வர வந்ததினிப்-பேசுவதென்

235 தங்கள்மனே யிங்கிவளுந் தாங்களெனச் சொன்னுலு
மங்கது வேறென்றறி யாதாள்-எங்களென்றுல்

236 வாசிக்கிவ் வூரெல்லாம் வாயெடுத்தார் கையெடுத்தார்
பேசிக் கலேப்பார் பெரிதுண்டு-கூசிமனத்

---

228. வாசல் கெவுளி சொல்வதும் பெண்களுக்கு இடம் துடிப்பதும் நல்லது நடக்கும் என்பதற்கு அறிகுறி.

229. கபடக் கிழவியின் சொற்களேக் காண்க. இவள் பொன்னே யும் பணத்தையும் பற்றிக் கவலேப்படவில்லேயாம். நல்லுறவை மட்டும் விரும்புகிருளாம். ‘‘பொன்னும் பணமும் புலேயன் படைத்ததனுல் என்ன பயன்'' என்கிருள்.

235. இவள் தங்கள் மனே-உம்பெண்டு என்கிருள் தாய்க் கிழவி.

236. வாசிக்கு-அதிகமாக, வாயெடுப்பர்-பேசத் தொடங்கு வர். கையெடுத்தார்-சத்தியம் பண்ணுவர்.

237 தெண்ணுமல் சொல்வார்க் கிடங்கொடா மற்பிறம்பு
பணுமல் வாழுமெனப் பஞ்சரித்து-பெண்ணுலே

238 நின்று தவஞ்செய்து நெடுங்காலஞ்சென்ற பலன்
இன்று கிடைத்த தெனப்போனுள்-சென்றதற்பின்

239 பத்திமணிக் கோடமைக் கும்பார பரியங்கப்
பத்தியமைக்கும் பளிக்கறைக்குள் சுத்தவொளித்

240 தங்கமணிக் கட்டில் தரும்பட்டு நெட்டணைக்குள்
பொங்கமணிக் கொட்டைப் புடைப்பரப்பி-யங்கதனிற்

241 சுற்றுமெ ழினி துடக் கிமுடக் குமியற்
பற்றியெழுதும் படா போக்கி-கற்றைத்

242 தொடைப்பூ நிரைத்து நறைதோயு மமளி
யிடப்போந் திறுமாந் திருந்தேன்-மடக்கொடியாள்

243 மெய்ச்சுகமும் சோபவிரகு படர் முலையுங்
கைச்சுகமும் தந்துசுருள் காட்டினுள்-அச்சுருளை

---

237. பிறப்பு பண்ணுதல்-அச்சப்படுதல். பஞ்சரித்து-கொஞ்சி பேசி.

239. பத்தி-ஒழுங்கு. மணி-அழகிய. கோடு-யானைத்தந்தம். அமை-செய்யப்பட்ட. கும்பார்-கும்பம் போன்ற குமிழ்உடைய. பரியங்கம்-கட்டில்.

240. புடைப்பரப்பி-இடம் பரப்பி.

241. எழினி-திரைச்சீலை, துடக்கி - கட்டி, முடிக்கி-மடக்கி மீ-மேல், பற்றி-பிடித்து. எழுதும் படாம்-துணியில் எழுதிய படம். "குடரோடு துடக்கி முடக்கியிட" என்ற அப்பர் அடிகள் நினைவு கூர்க.

242. கற்றைத் தொடைப்பூ - தொடைப்பூ - மாலை, நறை தோயும் அளி-மூப்பில் தோன்றும் ஆசை, சோபம்-அழகு, விரகு-உணர்வு.

243 முதல் 270 வரை சம்போக முறை கூறப்படுகிறது. இங்கு குறித்துள்ள வகையும் சொற்களும் மதன நூல் அல்லது கொக்கோகம் என்னும் சாத்திரத்தில் உள்ளன.

243. சுருள் காட்டினுள்-வெற்றிலைச் சுருள் கொடுத்தல்

244 மல்லற் பவளவாய் வைத்திருந்த வங்கனே
மெல்லப் பருகிமடி மேல்விழுந்தாள்-ஒல்லாது

245 கிட்டிச் சல்லாபங் கிளர்ச்சிக் கென்றிறுகக்
கட்டித் தழுவிக்கை கலந்து-வெட்டும்

சுருள் காட்டினுள்–அதிவீரராமபாண்டியன் எழுதியுள்ள கொக்கோகத்தில்—

ஆர்வமோடு அணைத்து இடக்கையினல்
வேரி மெல்லணை சாய்த்து மென் கொங்கையும்
ஆரமார்பும் அணிதுகில் நீவியும்
ஊருவும் தொடும் ஒண் வலக்கையினுல் கொக் (191)

நேசமாகக் கவுளை நெளித்துத் தம்
வாசத் தம்பலம் வாயின் வழங்கியே
பூச மேனி குழைந்து புளகு எழ
பாசிலைச் சுருள் பாதி அருந்தியே கொக் (192)

இது தொடக்கம். இது செய்ததும் பெண் நாணம் நீங்கி தன்னைத் தயார் செய்து கொள்வாள் என்கிறது காமநூல்.

நாணம் நீங்கி நகையும் எழ
வாள் நிலா நுதல் சரபம் வளைதர
ஆணி முத்தின் வியர்வும் அரும்பிட
பூண் அழுந்து புறத்தொழில்செய்தலே. கொக் (193)

244. மெல்லப் பரிவின் மடிமேல் விழுந்தாள் என்பது நாணம் நீங்கி பெண் தானே வருதலைக் குறிக்கிறது. மல்ல-மிகுதியாக. ஒல்லாது-மறுக்காமல்.

237 முதல் 257 வரை சம்போக சுகம் கூறல்.

245. சல்லாப-சரசப் பேச்சு. இறுகக் கட்டித் தழுவிக் கை கலந்து-இது ஆலிங்கனம். அடுத்துச் சொல்லப்படுவது.

ஒருவரை ஒருவர் இறுகுறத் தழுவி
மற்று ஒருவர் கைம்மீதினில் ஒருவர்
விரிமலர்க் கரத்தை இகல்வபோல் ஏற்றி
விரித்த மெல் அணைமிசைக் கிடந்தே
இருவர்தம் உடலும் ஒன்றியும் ஒன்று
இயற்கையில் இறுகுறத் தழுவல். கொக் (242)

வெட்டு-மெய்பரிசம் எட்டனுள் ஒன்று.

246 முகிரங்கு சந்தொட் டுருகப் பருகி
பகருஞ்சு ருட்டமு தம்பாய-துகிரருந்தும்

247 அங்குலி தொட்டுக் கவுண்முத்தாடிப் புரூரநடுச்
சங்கிலி தொட்டற் பஞ்சருவியே-அங்கை

248 அடிக்கந் தாயபக்கத் தாக்கிர மித்தின்பந்
துடிக்குந் துறையினுபி சுற்றித்-தொடித்தோளும்

249 ஆகமுந்தை வந்தண நடவிக் கடிதடமுஞ்
சோகமுந் தொட்டப்புறமுந் தொட்டலுக்கி-மோகச்

---

246. முகிரம்-காமம். முகிர்-பருத்த அம்-அழகிய குசம்-முலை. 'முகிழ்ந்து வீங்கு இள முலை' (சீவக-1004).

பணைமுலை முகங்கள் கொழுநன் மார்பகம்
பதிந்து அடிவட்டத்தில் பரக்க
அணைமிசை அழுந்தத் தோய்ந்திடல் முலை
ஆலிங்கனம் என்பரால் அறிந்தோர் கொக் (205)

பகிரும் பகிரும் சுருள் அமுதம் பாய
புறமும் புறமும் சுருள்வதால் அமுதம் பாய

பிரிந்த இங்கு எயிறு கூறப்படுகிறது. துகிர்-பவளவாய். அங்குலி-நுனி.

துகிர் அருந்தும் அங்குலி தொட்டு
பவளவாய் அருந்தலும் விரலால் தொடலும்
அன்னந்தகு நடையாள் மறித்து
அவன்வாய் இதழ் உண்ணல்
பன்னுஞ் சிறுவிரலால் பிணித்து
இதழ் நாவால் நனி பருகல் கொக் (208)

247. கவுண்-கவுள் என்பதின் திரிபு. முத்தாடி-கன்னத்தைக் கவ்வி. முத்தமிட்டு புரூரநடுச் சங்கிலி தொட்டு-நெற்றிச் சங்கிலி தொடல். நெற்றியில் முத்தமிடல் ஒரு செயலாகும். அல்பம்-சிறிது. சருவி-கொஞ்சிக் குலவி.

248. சங்கை-உள்ளங்கை. அடிக்கந்து-அடிக்கழுத்து. ஆய-குத்தி. பக்கத்து-பக்கத்தை. ஆக்ரமித்து-வலிந்து. கழுத்தின் அடிப்பக்கத்தை இறுக்கக் கட்டி முத்தமிடல். நாபிசுற்றி-நாபிப் பகுதியில் முத்தமிடல்.

249. நாபிக்கடிதடம்-அல்குல் சும்பனம் கூறிற்று. சோகம்-தொடையும் தொட்டு மோகம் அளிக்கும் பாதத்தின் புறம் நீவல் ஒரு செய்கை.

250 சரணுட் புறநீ விச்சாணு வொதுக்கி
முரணிற் புறத்தொழிலே முற்றிக்-கரணமொரு

251 மூன்றிட மென்றுள்ள முறையுமாலிங் கணமுங்
கான்றகு தெள்ளார முதக்கட்டளேயும்-ஆன்ற

---

250. சாணு ஒதுக்கி-சாணே-சேலே அரையில் பெண் அணிந் திருக்கும் புறச் சேலே ஒதுக்கி. (சாணே என்பது சாணு என்று வந்தது). காமச் செயல்களுக்கு மேற்கூறியவை புறத் தொழில்க ளாகும்.

கரணம்-கலவி. மூன்றிடம்-பெண் உறுப்பில் மூன்று இடங்கள் காமச்சுகம் கொடுப்பதில் தலேயாயவை என்று நூல்கள் கூறும். இவற்றை (1) பெண் லிங்கம், (2) காமன் கவிகை. (3) சந் திரநாடி என்பர்.

முன்னமே சொன்ன குய்யம்
உத்தமம் மற்றை மூன்றும்
அன்னதில் ஒன்றுக்கு ஒன்றங்கு
அடைவினில் குறைந் திருக்கும்
சொன்ன ஆண் குறிபோல் உள்ளே
தோன்றிடும் நாடி ஒன்றங்கு
இன்னதை விரலால் சுற்ற
இழிந்திடும் காம வெள்ளம் கொக் (238)

மானிடர் நாசிபோல வடிவதாய் புழைக்கை மேலாய்
ஊனுறக் குத்தாக் காதின் சோணேபோல் உறமெத்தென்று
கூனுறு கருவிளம்பூ அகவிதழ்க் கவிளே போன்று
தானுயர் மணியைக் காமன் கவிகையாச் சாற்றுவாரே.
கொக் (239)

குறைவறச் சுரதநீரைக் குதிப்பித்துச் சுகத்தை நல்கும்
நிறைமதிப் பெயரினுலே நிகழ்த்தும் ஓர்நாடி காமன்
உறையுளின் உள்ளே கிட்டி நுண்ணிதாய் உறையும் என்ன
அறைதரும் தானமூன்றும் காமன் அத்தாணி யாகும்.
கொக் (240)

251. ஆலிங்கனம்-தழுவுதல். இது எட்டு வகைப்படும் என்பர். (1) கொடி சுற்றித் தழுவல்: (2) பனேமரம் ஏறல். (3) எள் அரிசிக் கலவை, (4) பாலும் நீரும் கலவை, (5) முழுத் தொடைத் தழுவல், (6) குறி கூடித் தழுவல், (7) தனமுறத் தழுவல், (8) நெற்றியில் தழுவல் என்பனவாம். தெள்ளாறமுதக் கட்டளே-தேன் போன்ற அமுதம் பருகும் செயல். இதனே இதழ் அமுதம் பருகல் என்பர்.

252 நகக்குறியும் பற்குறியும் ஞாவிக் குறியுஞ்
சுகக்குரலுந் தாடனமுந் தோன்ற-மிகுத்த

253 வனக்களபத்து மதத்தெழு சித்திர
தனக்கு வடொத் தெதிர்தைத்து-மனத்தை

254 உரத்தை வருத்தியுரத்திட முத்து
வரத்துள் நிரைத்த குழைக்குள் நெரித்து-வரத்துள்

255 உறைக்கறை மைக்க ஞெதிக்கி-மயக்கி
நிறைக்குறி நித்தில நெத்தி சிறக்க

256 அகக் களிபற்ற தரத்தொடு சுற்ற
சுகக் குமிழ் நின்று துடிப்ப நகைத்த

---

252. இதனை அடுத்து மதன நூல்களில் நகக்குறிபதித்தலும், பற்குறி பதித்தலும், நாபிக்குறி பதித்தலும் கூறப்படுகின்றன. அதே முறைப்படி இக்கண்ணியில் குறிப்பிட்டுள்ளது காண்க.

சுகக்குரல்-கலவியின்போது எழுப்பும்ஒலிகள். தாடனமும்-சம்போக சுகம் எழத் தட்டுதல்.

தாடனம் நால்விதம் அதன்பேர் சங்கோசம் பக்கத்தம்
பீடு பிரசுரிதகம் பின்பொருமுட்டி இவை இயம்பில்
கூடு விரல் கைம்மடித்தல் குட்டுதல் அகங்கையால்
பாடுற மெய்தட்டுதல் பையக்குதித்தல் எனப் பகர்வர்

(231)

254 முதல் சம்போக முறை கூறுகிறார். சேர்வதில் உள்ள வேகமும் உணர்ச்சியும் சொல்லிலும் காண்க. விரிப்பில் பெருகும். தெய்வச் சிலையார் விறலி விடு தூதில் இப்பகுதி கீழ் வருமாறு உள்ளது.

மகளை யழைத்தாள் மணிமுதுகை நீவி
முகமுந் தடவியுச்சிமோந்தாள்—சுகமே

யிருமகளே யென்றனுப்பி யேகினாள் வந்தென்
னருகிலிருந் தாள்பெண் ணரசி—பொருமலைநான்

எங்கே யடக்குவே னென்றீ வரத்து முன்னே
அங்கேயு முண்டே வபிமானஞ்—சிங்கார

வாச லடைக்கவில்லை வாடை பரிமளங்கள்
பூசவில்லை பாக்குமுதற் போடவில்லை—பேசுவதென்

ஆடை முழுது மவிழ்க்கவில்லை பூண்முலைமேல
வாடை ரவிக்கைமுந்தி வாங்கவில்லை—கூடி

எடுத்தே னணைத்தேன் ரதிகேளி யாடத்
தொடுத்தேனி தென்ன துரியம்—படுத்த

சுகங்கள் மிகுந்து துவண்டு துவண்டு
முகங்கள் முகந்து முயங்கி—நெகிழ்ந்து

குலைந்தது கொண்டை குழைந்தது கொங்கை
உலைந்தது செம்பொ னுசிம்பு—கலைந்த

திலங்கு பசும்பொ னிணங்கு நிதம்ப
மலங்க முகங்க ளலம்பி—நலங்கொள்

நறுந்துகி லெங்கும் நனைந்து நனைந்து
மறந்திகு சிந்தை மருண்டு—சிறந்த

பெருந்துடை யுந்துடை யும்பிரி வின்றி
நெருங்க மருங்க நெளிந்து வருந்த

இதழ்க்குறி தைக்க வெனக்கு மவட்கு
மதத்த களிப்பு மயக்க—இதத்த

பிடர்க்குளி றுக்கு பிறைக்குறி வைக்க
மடற்கமு கெட்டு வகுப்பில்—நடத்து

சிறுக்குரல் மிக்க செவிக்கமிர் தொப்ப
வுறிக்கை யிணைக்கை யுடற்குள்—இறுக்க

வளைகள் சிதற மழலை பதற
முளைவெண் ணிலவின் முறுவல்—விளைய

இருவ ருடலு மிருவ ருயிரு
மிருவர் மனது மிளக—வருகுது

போக மெனக்குப் பொறுதடா வென்றுசண்ட
வேக முடனெழும்பி மேற்கொண்டாள்—நாகரிகக்

காதோபொன் னோலையோ காருண்ய வாண்முகத்தின்
மீதோ டியகோல வேர்வையோ—மாதுநல்லாள்

தத்தரமோ வண்டுறுக்கோ தப்பி முறைமயங்கு
முத்தரமோ கூடு மொருமிப்போ—எத்தையென்று

சொல்வே னுபரித் தொழிலுக் கவளுடனே
வில்வே ளனுபவிக்க வேண்டாவோ—கொல்வாள்

எளிதாய் விடுவாளோ யானுமொரு வாறு
தெளியா துளம்பெலத்து நின்றேன்—களிகூர

257 சிலம்பு கலின் கலினென்று புலம்ப
வலங்கு சதங்கை யலம்ப விலங்கு

258 பொலங் தொடிநின்று பொலிந்து புலம்ப
கலங்கிள ருந்திநலிந்து குலுங்க

மெச்சினு ளாடவனீ யாமய்யா வேறொருவர்க்
கிசயா துள்ள மினியென்ருள்—சச்சாய்

நடந்துதோ சம்போக நாகரிக மாகக்
கிடந்துதோ ராண்டுச்சல்லுங்கேட்கக்-கடந்ததொரு

காமசல ராசிப்ர வாகம் கரைபுரண்டு
பூமலர் மெத்தைப் புறநனையத்—தாமதஞ்சற்

றில்லாது போக மிருபேர்க்கு மொத்திருந்த
சல்லாப போக சமயத்தே—கொல்லாமற்

கொல்லவோ வந்தாய் கொலேகாரா வென்றுசற்றே
மெல்ல மழலே மிழற்றினுள்—வல்லியங்கே

தன்கலேயும் வேர்த்த சரீரமுமோர் சோபைதர
என்களப மார்பி னிடைவீழுந்தாள்—மின்கொடியை

அத்தறுவாய் பார்க்கவெனக் காயிரங்கண் வேண்டாவோ
முத்தியசெவ் வாயும் முகமுமாய்—நித்திரைபோய்

அங்கே விடாய்தீர்ந் தெழுந்திருந்தா ளய்யாமற்
றெங்கே துகிலென் றெனேக்கேட்டாள்-செங்கையினுல்

வாங்கியொரு தட்டுடுத்தாள் மற்றத் துகில்கொடுங்கை
தாங்கினுள் நா னுமவள் தானுமாய்—ஆங்கே

வெளியில்வந்து நின்று விடாயாறி மீளத்
தளிரணேமேற் சென்ற தறுவாய்—இளமுலேயைப்

பார்த்தாள் நகக்குறியைக் கண்டாள் பழிகாரா
தூர்த்தாவென் ருள்சரிந்தாள் தோளின்மேல்-வார்த்தையினும்

பெண்மையிலும் சம்போக லீலேயினும் பேயாக்கி
உண்மை மனத்தை யுருக்கினுள்—கண்மயங்கு

நித்திரையி லேகொடுங்கை நீக்கினு லுஞ்சகியாள்
அத்தனேயும்பொய்யென் றறிவேனே—சத்தியமாய்

உள்ளபடி கொண்டே னுதயகா லத்திலந்தக்
கள்ள நெடுநீலி கையிலே—கொள்ளேயாய்

எண்பதுபொன் வாரிக் கொடுத்தே னெழுந்திருந்தேன்

259 ஒருங்கு துவண்டு மொசிந்து மசைந்து
மருங்கு கிடந்து மயங்க நெருங்கு

260 மிதம்பொங்கப் பொங்க வெழுந்து கரைமோதி
நிதம்பங் குப்பென்று நெகிழ-விதம்பெறவே

261 மேவிய ணைத்தாள்வீ ரக்கரும்புங் கிண்கிணிவாய்க்
காவிய மைத்தவிரு கண்ணுலே-ஆவிநிலை

262 சோதித்தா ளேத்துயிர்க்குஞ் சோபமொழிக் கேஉயிரை
வாதித்தா ளுரைமறந்து விட்டேன்-போது

263 வடிந்தந றைக்கோட்டு மயில்போ லென்மார்பில்
படிந்துள் ளறிவு பறித்தாள்-மடந்தை நல்லா

264 ளங்கைக்கே மெய்க்கே யணைக்கே வெதுவெதுக்குங்
கொங்கைக் கேயுள்ளங் குடியிருந்தேன்-மங்கைநல்லாள்

265 கண்டா ளிவனமது கைவசமா னுனெனவு
கொண்டாள் மருந்துவகை கூட்டினுள்-ஒண்டொடிகேள்

---

265. 264 முதல் 270 வரை மருந்து செய்த வகை கூறப்படுகிறது. இந்த மருந்து கூறும் பட்டியல் கண்டால் அருவருப்புத் தான் ஏற்படும். இன்னம் அருவருக்கத்தக்கதாக கூளப்பநாயக்கன் விறலி தூதில் மருந்தில் சேர்க்கப்பட்டுள்ள வகைப் பொருள்களைக் காணலாம்.

அன்றில் இருந்த மரத்து ஆணி வேர்
செந்நாய்க்குட்டியின் பின்னங்கால்
தேவாங்கின் எலும்பு
கறந்த பால்
வெண்ணே
பூனை மீசை
செக்கு எண்ணெ
ஆந்தை எச்சம்
பறைச்சேரியில் எடுத்த எருதின் பல்
பழம்பாசி
நாய்ப்பாகல்
பிந்து-சுக்லம்
நன்னரி
பேய்க் கருப்பஞ்காறு
மரச்சாராயம் முதலியன சேர்ந்தவை என்கிருர்.

266 நின்று சிணுங்கி கிடந்து நிலம்புரண்டி
அன்றி லிருந்தமரத் தாணிவேர்-அன்று

267 பிறந்தசென்னுய்க் குட்டிப் பின்னங் கால்முன்னு
ளிறந்த தேவாங்கி னெலும்பு-கறந்தபால்

268 வெண்ணெ யழும்பூனை மீசை பழஞ்செக்கி
லெண்ணெ குழறியளு மாதையெச்சம்-நண்ணும்பா

269 ழூருக்கு ளூமத்தை ஓரிகத்தும் போதுபறைச்
சேரிக்குட் சென்றெடுத்த சேவின்பல்-ஏரிக்குள்ப்

270 பார்ப்பானைச் சுட்ட விடத்திற் பழம்பாசி
நாய்ப்பாகல் பிந்துடரி நன்னரி-வாய்ப்பஞ்

271 சரக்கு வகைபேய்க் கருப்பஞ்சாறு மதிலொன்று
யரக்கு தலைவடிச் சாராயம்-பரக்கவிட்டுக்

272 கூட்டிஅரைத் துண்டைபண்ணிக் கொண்டுணவி
பாக்கிலையி
லூட்டுமனு பானத்தி லூட்டினுள்-யீட்டிலே

273 கட்டுப்போ லேமருந்து கையேற விட்டொட்டுஞ்
சிட்டுப்போ லேபட்டுச் சிக்கினேன்-கெட்டியாய்

274 யெண்ணிக் கொண்டாள் தொக்கிவனெ ன்றேசங்கற்
பம்
பண்ணிக் கொண்டாள் பொன்பறிக்கவே-நண்ணி

275 வனைத்தகுழற் காமகலா வாணிதந்த வீணித்
தனித்திருக் கும்வேளை தனிலே-யெனைப் பார்த்து

---

266. அன்றில்-கிரௌவஞ்சப் பறவை.

269. ஓரி-ஆண்நரி. சேவின் பல்-எருதின் பல்.

269. நாய்ப்பாகல்-ஒருவகைக் காய்.

271. பரக்கவிட்டு-பரவலாக விட்டு,

272. அனுபானத்தில் ஊட்டினுள்-மருந்துக்கு உபகரனமான பானத்தில் ஊட்டினுள்.

274. தொக்கு-இளப்பமானவன்.

275. வனைத்த குழல்-அலங்கரித்த குழல்.

276 நீவேதியனே நெடுமூச் சேதென்று மெள்ள
ஆவேசம் போலே அரத்திஞள்-கோவை

277 மணியறுத்தாள் செங்கைவளை நெரித்தாள் கொங்கைப்
பணிகளையெல் லாம்பூட்டுப் பறித்தாள்-துணித்
துணியா

278 யித்தனையுந்தட் டியொன்றை ரெண்டாக்கிச் சன்னை
யிட்டு
மெத்தனவே சாளரத்தில் விட்டெறிந்தாள்-அத்திறவு

279 கேட்டநரைத் தாய்க்கிழவி சிறுவெள் ளரிக்காய்த்
தோட்டநரி போலச் சுத்திவந்து-போட்டதெல்லாம்

280 தாவின்றியே யெடுத்துதான் பதுக்கிப் போட்டிங்கே
வாவிந்திராணி யெனவாசல் வந்தாள்-பாவைமுகம்

281 பாத்தாள் மகளே பணியெங்கே யென்றுடலம்
வேர்த்தாள் கெடுவாள் வெடுவெடுத்தாள்-வார்த்தை
யினுல்

282 ஊடியெறிந் தாளென் றுரைத்தே னங்கே
ஓடித்தேடி யில்லையெனத் திரும்பிவந்தாள்-கேடியுன்

283 தேட்டாலே வந்ததி ரவியமோ யென்முதலைப்
போட்டாயே யென்று புலம்பிஞள்-கோட்டாலை

---

277. பணிகளை எல்லாம்-ஆபரணங்களை எல்லாம். பூட்டுப் பறித்தாள்-பூண்டிருப்பதைக் கழட்டிஞள்.

273. சன்னை-சரசம். திறவு-உளவு.

279. சிறுவெள்ளரிக்காய் தோட்டநரி-(சொல் வழக்கு காண்க) சுத்தி வரும் போலும்.

280. தாவு இன்றி - எதிர்ப்பு இன்றி. பதுக்கிப்போட்டு வழக்கு காண்க.

281. பணி-ஆபரணம்.

283. தேட்டிலே - சம்பாத்தியத்திலே. கோட்டாலை - மூட நடத்தை, சரசம், துன்பம்.

284 கண்டே னங்கேதேடிக் காணாத தெத்தனை
யுண்டென் றுநானு சாவினேன்-பண்டையெங்கள்

285 பாட்டிக்கதி வீரபாண் டியனார்தந் தமுத்துக்
கூட்டிக்கலந் தரெற்றினக் கோவையோ-வேட்டொரு
ளுள்

286 வந்தசுந் தரன்கூடல் மாவலிவா ணன்மகிழ்ந்து
தந்தசுந் தரஞ்சேர் சரப்பணியோ-நந்தாத

287 மாதுதிருக் காஞ்சி மாநகரில் வேங்கடவர்
தீதறு வைகாசித் திருநாளிற்-பேதை

288 தருமூர் திசைனுடன் தக்கதென வீரை
வருமூ வரையன் மகிழ்ந்தே-யருளுமுத்து

289 மாலையோ கொத்து வடமோ பசுங்கனக
ஓலையோ மூக்குத்தி ஒண்டிமுத்தோ-காலகெதிக்

---

284. உசாவினேன்-விசாரித்தேன்.

285. முன்னாள் இவள் பாட்டிக்கு அதிவீரபாண்டியனார் தந்த முத்துக் கலந்த ரத்தினக் கோவை. இந்நூல் 17-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. திருமலை நாயக்கர் காலத்தது. அக்காலத்திலேயே 'அதிவீர பாண்டியனார்' புகழ் பெற்றிருந்தது காண்க.

286. சுந்தரன் கூடல்-சோமசுந்தரக் கடவுள் உறை மதுரை. அல்லது சுந்தரபாண்டியனது மதுரை. கூடல் மாவலிவாணன்-மதுரையை ஆண்ட மாவலிவாணன். இந்த நூல் தோன்றுவதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையை சுந்தரத் தோளுடையான் மாவலிவாணாதிராயன் என்பவன் ஆண்டிருக்கிறான். அவனுக்கு மதுராபுரி மகாநாயக்கன் என்ற பட்டம் இருந்தது. அந்த வாண அரசனின் நினைவு இந்நூலில் பிரதிபலிக்கிறது. வாணாதிராயன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் பெரும் திருப்பணிகள் செய்துள்ளான். அவன் கொடுத்த சரப்பணி – சரஆபரணம் என்கிறாள்.

287. நந்தாது மா திருக்காஞ்சி-குறையாத செல்வம் நிறைந்த பெருங்காஞ்சி நகரில் திருவேங்கடவர் என்னும் பெருமாளுக்கு வைகாசித் திருநாளில் வீரை திருவேங்கடநாதனாகிய மூவரையன் (இப்பாட்டின் தலைவன்) மகிழ்ந்து அளித்த முத்துமாலை.

289. 17-ம் நூற்றாண்டில் மூக்குத்தி வழக்கில் வந்துள்ளமை காண்க.

290 கென்னென்று சொல்வே னிவள்கெடுத்தாள யிரம்செம்
பொன்னென்று நின்று புலம்பினுள்-சொன்னதெல்லாம்

291 ஈய்ந்தேன் பழையகட னென்றங் கொருவனைத்தான்
வாய்ந்த முறிகொண்டு வரச்சொன்னுள்-ஆய்ந்துகணக்

292 கேற்றிப் பொன்னூ றெறிந்தேன் துறைகாறர்
சோற்றை மறித்தாரென்று சொல்லிவிட்டாள்-மாற்
றுரையா

293 தன்பதுபொன் னங்கேய னுப்பினேன்தன் தம்பிதனக்
கொன்டதுபொன் யான்கொடுப்ப துண்டென்றுள்-
பின்புசிலர்

294 பாடினுரென்று பறித்து விட்டாள் சந்தானங்
கூடினுரென்று சிலகொள் ளையிட்டாள்-வேடிக்கை

295 சிக்கண னல்லூரிலே சில்லறையிட் டாரென்ரு
ளக்கணமே பொன்னூற னுப்பினேன்-பொக்கணங்
கை

296 தூக்கிவிட்ட மாமிதலை தூக்கிடவே சாராயங்
தாக்கிவிட்ட தெண்பதுபொன்தான் கொடுத்தேன்-
வாக்கிலைகெட்

297 டோடெடுக்கச் சொன்ன கிழட்டோரிதனக் குப்புறம்
பாய்
வீடெடுக்கச் சொன்னவி லைகொடுத்தேன்-வாடை

298 அணைஞ்சிக்கிப் பொன்னூற் றறுபதிலே பத்துப்
பணஞ்சிக்கித் தென்று பறித்தாள்-மணங்கமழும்

---

291. வாய்ந்த முறி-எழுத்து முறி. இங்கு கடன் பத்திரம்.

292. துறைகாரர்-கோயில் கணக்கர் முதலிய உத்யோகஸ்தர், மறித்தல்-தடுத்தார்.

294. சந்தானம் கூடினுர்-குருபரம்பரை வந்தார் அல்லது வமிசத்தார் வந்தார் என.

296. சாராயம்-மது (17-ம் நூற்ருண்டில் வழக்கிலிருந்துள்ள சொல்.)

298. அணைஞ்சி-படுக்கை. இக்கித்து-மாட்டிக் கொண்டது என்று.

299 ஆண்டியப்பன் கெந்தபொடிக் கைஞ்ஞூறு பொன்ன
திலுந்
தாண்டியப்பா லென்பதுபொன் தான்கொடுத்தேன்-
நீண்டமணித்

300 தேரடியில் நெய்க்காரத் திம்மிக்கெ மூபதுபொன்
ஓர்நொடியில் நின்றங்கே யொப்படைத்தேன்-மோர
ளந்த

301 பேச்சியென்றுள் பாலளந்த பேத்தியென்றுள் நெய்
யளந்த
ஞச்சியென்றுள் முப்பதுபொன் கொடுத்தேன்-காய்ச்
சிலவு

302 வெற்றிலைப் பாக்கு மிளகுபுளி உப்புமுதல்
பற்றிலிரண் டாயிரம் பொன்பத்தினுள்-முற்றுமிங்கே

303 சஞ்சரிப்பீ ரென்றுதலை தடவிக் கண்பறித்துப்
பஞ்சரிப்பாய்த் தெட்டிப் பசப்பினுள்-வஞ்சி

304 குவியக் கொடுக்க கொடு தோளிருந்து
செவியைக் கடித்தாள் சிவனே-அவகேடி

305 முட்டப் பசப்பிமுத லெல்லா மூரறியப்
பட்டப் பகலேபறித்து விட்டாள்-நெட்டூரி

---

299. ஆண்டியப்பன் கந்தம்-ஆண்டியப்பன் பெயரால் வாசனைத் திரவியம் இக்காலத்தே புகழ் பெற்றிருந்தது போலும். 'தாண்டி அப்பால் என்பது பொன்' எனக் கொள்க. 280 முதல் 305 வரை தாய்க்கிழவி எப்படி எல்லாம் சொல்லி பொன் பறித்தாள் என்று சொல்லப்படுகிறது, ஒவ்வொன்றையும் தனித்தனிப் பாடலில் சொல்லி வந்த ஆசிரியர் வேகம் வேகமாக பொன் பறித்தாள் என்று குறிக்கும் வகையில் "மோரளந்த பேச்சி என்றுள், பாலளந்த பேத்தியென்றுல், நெய்யளந்த நாச்சியென்றுள்" என்று சொல்லி முடிப்பது கண்டு இன்புறத்தக்கது. தலையைத் தடவி கண் பறித்து.

303. பஞ்சரிப்பாம்-உபசாரமாய். தெட்டி-வஞ்சித்து.

304. கொடு-வளைதோள். அவகேடி-பெருந்தீங்கு விளைப்பவள்.

305. முட்டப் பசப்பி-ஒட்டப் பாசாங்கு செய்து, நிட்டூரி என்பது நெட்டூரி என்று வந்தது.-கொடியவள் என்பது பொருள்.

306 மையமருங் கண்ணிமருள் மாயத்தா லென்னைபிற
அய்யமுறக் கோவணனுக்கி விட்டாள்-மெய்யுரைபோல்

307 சன்னையுரைக் குமவள் தாயுப தேசத்தா
லென்னைநிறு வாணியெனச் செய்தாள்-பொன்னின்

308 மலையுருவக் கொங்கை வசமாய் முருங்கை
யிலையுருவக் கோல்போ லிளைத்தேன்-நிலைகெடவே

309 கண்டாளி வனறவேகைக் கற்றுனென் றுறவு
விண்டா ளெனைத்தான் விரட்டவே-பண்டை

310 யிருந்த பதமு மிதமு முதிரவேம்
பருந்து வன்போல் வயர்த்தாள்-பிரிந்துறவு

311 போற்றிப் பிறரைப் பொருந்தினுன் செய்ததெல்லா
மாற்றிற் கரைத்தபுளி யாக்கிவிட்டாள்-கூற்றுப்

312 பறவாதி வேற்றுறவு பாராட்டி யென்னைத்
துறவாது போலத் துறந்தாள்-மறவாமல்

313 ஆருக்கு மேச்சா யதிகாரம் பண்ணின
பேருக்குள் கூலியாளொத் துவிட்டேன்-காரிகையார்

---

306. மைஅமருங்கண்ணி எனப்பிரிக்க. மருள் - மயக்கம். கோவணன் ஆக்கிவிடல் சொல் வழக்கு 17-ம் நூற்றுண்டில் இருந்துள்ளது.

307. சன்னை-பரிகாசவார்த்தை, சரகம்.

308. முருங்கை இலை உருவக் கோல் இளைத்தல்-வழக்கு.

309. கண்டாள் இவன் அறவே கைக்கற்றுன் என்று உறவு விண்டாள் எனப்பிரிக்க.

310. பதம்-நிலை. இதம்-நன்மை. உதிர-அற்றுப்போக. வேம்பருந்துவன் போல் வயர்த்தல்.

311. ஆற்றிற் கரைத்த புளியாக்கல்-வழக்கு. கூற்று-நமன் போன்ற. பறவாதி-பேராசைக் காரி

313. அதிகாரம் பண்ணின பேருக்குள் கூலியாள் ஒத்துவிடல்-வழக்கு.

314 ஆமெனவே கையிலுள்ள தத்தனையுந்-தோத்துவிட்டாற்
காமனையுங் கண்ணிற் கணியாரோ-தாமிணங்கி

315 யுண்டாட்டுங் காலம்பொய் யென்றுமற்ற பின்மோசக்
கொண்டாட்டம் பண்ணமனங் கூசாரோ-பண்டெல்
லாம்

316 அள்ளிமுடிப் பளிப்பா ரானாலுங் கைக்கற்றுற்
றள்ளிவிடச் சற்றுஞ் சலியாரோ-கொள்ளைகொள்ளும்

317 பாவிகுடிக்குப் படியளக்கும் னுளிலொரு
தாழ்வுவரி லார்க்குமிந்த சற்பினையோ-மேவுவார்

318 யேன்வருவா ரானாலுமேழை யெனப் பொலிவர்
பான்மையெல் லாம்பாத்துப் பதைக்கவே-உன்முன்

319 தலவாசஞ் செய்த தவமோ கூவென்றுப்
பலவாதை யிட்டுப் பதைத்ததென்-சிலபேர் முன்

320 தான்திரிவு பேசித்தலைக் கடைக்கே யானாலு
மேன்திரிவா னென்றுமனத் தெண்ணியே-ஊண் திரட்
டும்

321 நெய்யிருக்க நானிருக்க நீயிருக்க நம்முடைய
பொய்யிருக்க வுண்டைப் புலியிருக்க-கையில்

322 மணமிருக்கப் பெண்ணேமரப் பாவைக்குப்
பணமிருக்கு மோவென்னும் பாவி-கண்முன்

323 படைத்தாலும் புத்துறவு பாராட்டி யெது
கெடைத்தாலும் கொள்ளும வகேடி-விடைக்கடவு

---

314. கணியாரோ - அறுதியிடாரோ, காய்க்காரா என்று பொருள்.

314 முதல் 342 வரை தன்னை தானே சலித்துக்கொள்ளுதலும் வேசையைத் திட்டுவதும் கூறுவார்.

317. சற்பினையோ - சற்பனை என்பது திரிந்து வந்தது. சதியோ என்று பொருள்.

320. திரிவு-கேடு. தலைக்கடைக்கு-முன்வாயிலிலே, உண்டைப் புலி-சூது கருவி. மணம்-கலியாணம்.

324 ஏாலயத்து உள்ளபொ ருளானாலுந் தான்குடிக்கும்
பாலையொத்து வாங்கும் பழிக்காறி-ஏலவே

325 போற்றாது போற்றிபொ ருள்பறிக்குங் காலமெல்லாந்
தோற்றா தொழிக்குஞ் சுவர்ப்பூச்சி-போற்றியே

326 பொன்பிடிக்குங் காலமெல்லாம் போய்விட்டால் முந்
தித்தொட்டுப்
பின்பிடிக்கு முன்புநிற்கும் பெண்ணீலி-தன்படித்தி

327 குத்திரு மல்காட்டிக் கொடுப்பா ரிடத்துமகள்
நித்திரையைப் போக்கும் நிலப்பூச்சி-தித்துவளி

328 பார்க்கக் கலவிமகள் பாராட்டும் போதுசும்மா
மார்க்கத் துயில்கூடு மாமியார்-யேற்கவே

329 யேறுட்டம் பேசியி லிங்கமுங் கோபுரமும்
மாறுட்டம் பண்ணவல்ல மாமியார்-வீறுட்டும்

---

324. பாலை-ஒரு கொடி. ஏலவே-முன்னே. சிவன் சொத்து குலநாசம்' என்பர். சிவாலயச் சொத்தைக் கவர்தல் மிகவும் கெடுதல் என்ற நம்பிக்கை உண்டு. ஆனால் இவள் தான் குடிக்கும் பால்போல சிவாலயச் சொத்தையும் வாங்கத் தயங்காத பழி காரி. ஏலவே-முன்னே.

325. தோற்றாது-வெளிப்படாமல். ஒழிக்கும்-கொல்லும். வெளியே தெரியாமல் கொல்லும் சுவர்ப்பூச்சியைப் போன்ற வள்.

326. முந்தி தொட்டு-முன்தொட்டு. பின்பிடிக்கும்-பின்னே பிடிக்க. முன்பு நிற்கும்-முயன்று நிற்கும். பெண் நீலி-பேய் (முந்தாள் பற்றி பின் பிடித்துக் கொன்ற நீலி போன்றவள்-) கதை.

327. தன்படித்தி-தன் வயப்படுத்தி. குத்து இருமல் காட்டி மகள் நித்திரையைப் போக்கும் வேசைத் தொழிலில் ஈடுபடுத்து பவள் 'நித்திரையைப் போக்கும் நிலப்பூச்சி என்கிறார்.

328. மகள் வேசைத் தொழிலில் ஈடுபட்டிருக்க வழியில் படுத் துறங்கும் மாமியார்.

329. ஏற்கும்படியாகப் பேசி லிங்கத்தையும் கோபுரத்தையும் மாறுட்டம் மயக்கம் பண்ண வல்லவள். வீறுக-வேகமாக.

330 பூமரத்துக் குள்ளடுத்து புல்லூரி போற்கெடுக்கு
மாமருத்துக் கள்ளியார் மாமியார்-காமுகற்குத்

331 தெண்டமுறி போற்பழைய சீட்டிக்காட்டிப் பறிக்கும்
வண்டமுறிக் கோல மாமியார்-கண்டங்

332 குரைத்துப் பரபரெனக் கூனிநடந்தே
இரைத்துப் புலிபோலெ திர்த்தாள்-வரச்சனியை

333 வாவென் றழைக்க வாரா வந்தவிதி வந்ததென்றால்
போவென்றால் சும்மாதான் போகாதோ-மேவுவார்

334 இந்த ஆருள்ளவர் களெல்லார்க்கு மற்றபடி
தந்து போமென்று தடுத்தோமோ-முந்தவே

335 ஆருக்களித் தானது கொண்டு காரியமே
ஊருக்குள் கேட்டாக்கா லொத்திருக்கும்-மோருக்குங்

---

330. பூமரத்துக்குள், அடுத்து-சேர்ந்து. புல்லூரி-புல்லுச் சத்தகம் அல்லது புல் அறுக்கும் அரிவாள். கெடுக்கும் ஆம் அருத் தக் கள்ளியார். ஆம்-இழிச்சொல். அருத்து-உண்ணும். கள்ளி-திருடியார்.

331. தெண்ட முறி-அபராத ஓலை. பழைய சீட்டி-பழைய எழுத்துச் சேலை. வண்டமுறிக்கோலம்-குறும்பாய்த் திரியும் கோலம் காட்டும்.

332. இரைத்து-கத்தி. இரைத்து புலிபோல் எதிர்த்தாள் எனப் பிரிக்கவும்.

333. சனி-மிகவும் கெடுக்கும். வரச்சனி-கடுமையான சனி வாரவந்தவிதி-துன்பம் வந்த ஊழ்.

332 முதல் தாய்க்கிழவியின் பேச்சு.

கடுமையான சனியை வாவென்று யாரழைத்தார். வந்தாய் விட்டது. சும்மா போம் என்றால் போகமாட்டீரா என்று கத்து கிறாள் தாய்க்கிழவி.

334. இங்குள்ள மற்றவர்கட்கு கொடுத்து விட்டுத்தான் செல்லவேண்டுமென்று உம்மைத் தடுத்தோமோ என்கிறாள். அப்படிக் கேட்டாலும் கேட்போம் நீர் போகாவிடில் என்று அச்சுறுத்துகிறாள்.

335. யாருக்குக் கொடுத்தான் அது கொண்டு என்ன காரி

336 காய்க்கும் புளிக்குங் கறிக்கும் கடைச்சிலவு
போய்க்கொண் டதெங்கள்மே ல்ப்பூண்டதோ-நீக்கி

337 நிலுவைக் கொடுத்தாருக்கு நில்லாது போவென்று
லலுவலிது வென்னக் கோட்டாலை-சலுகையோ

338 சொல்லியில்லை யென்றிங்கே சுற்றவொட் டோமென்
றுவண்ட
மல்லிக் கணக்கு வழக்கென்றாள்-நல்ல

339 திவளுக்கு நித்தமித மிதத் தல்லாற்
பவளத்துக் கீய்ந்த பணமோ-துவ ளிடையாள்

340 அண்ணனுக்கு நல்கும் விரலாழியோ தம்பி
கண்ணனுக்குத் தீத்த கடனீடோ-யெண்ணியெண்ணி

341 சொல்லுவதெ னெல்லாந் தொடுத்தாற் பொழுதளவுஞ்
செல்லும் வழக்கில்த் தெரியுமன்றே-ஒல்லைதனில்

யம் நடந்துள்ளது. ஊருக்குள் கேட்டாக்கால் ஒத்திருக்கும்-ஊருக்குள் கேட்டாள் தெரியும் என்கிறாள்.

336. உம்மால் எங்களுக்கு மோருக்கும், காய்க்கும், புளிக்கும், கறிக்கும்.

337. கடைச்சிலவு ஆயிற்று. நிலுகை கொடுத்து-நிறுத்தி மிஞ்சின தொகை. அதைக் கொடுத்து நில்லாது போம் என்றால் ஏன் நிற்கிறீர். கோட்டாலை-மூட நடத்தை அல்லது சரசம் என்ன ?

338. சலுகையோ சொல்லியில்லை-உமக்கு சலுகையோ கொஞ்சமல்ல. சும்மா சுற்ற வொட்டோம்-இனி வெறும்என இங்கு சுற்ற வொட்டோம் என்று வண்ட மல்லு இக்கணக்கு வழக்கு எனப்பிரிக்க குறும்பான சண்டைக் கணக்கு வழக்கு இது என்றாள்.

339 முதல் வாசுதேவ மறையோன் கூற்று இதத்தல்-நன்மை செய்தல். இவளுக்கு நான் நன்மை செய்ததோடு இவள் தம்பியென்றும் அண்ணன் என்றும் பலருக்கு கொடுத்ததும் வழக்கில் தெரியுமன்றோ, என்று வழக்காடத் தயாராகிறான் மறையோன்.

341. ஒல்லை-சீக்கிரம் வா என்கிறாள்.

342 வாவென்று முந்திமகளைப் பின்விட்ட பையங்
கூவென்றே அம்பலத்தில் கூட்டமிட்டாள்-நாவின்றி

343 சென்றே தலத்தாரைச் சேவித்தாள் நாணொருபால்
நின்றே னவளே நிகழ்த்தினள்-மன்றிருந்த

---

342. தான் முன்சென்று மகளைப் பின்னிட்டு 'அபயம்' 'கூ' என்று அம்பலத்தில் கூட்டமிட்டாள். நாவின்றிச் சென்றாள். உண்மைக்குப் புறம்பாக தெரிந்தே பேசச் சென்றாள். வழக்காடும் மன்றம் 'அம்பலம்' என்றும் அழைக்கப்படும்.

343. அவளே நிகழ்த்தினள்-அவளே வழக்கைத் தொடுத்தாள். தலத்துச் சுவாமிகளும் (கோயில் தலத்தார்) தானிகரும், கொத்துக் கணக்குக் குமாஸ்தாரும் வழக்கு விசாரித்த மன்றத்தார் என்று அறிகிறோம். வழக்கு கேட்டோரையும் வழக்குத்தொடுத்த முறையும் கூளப்ப நாயக்கர் விறலி விடு தூதில் மிகவும் சுவையாக சுப்ரதீபக் கவிராயர் பாடுகிறார்.

"பழியஞ்சிப்
பட்டரே தோவந்திர பட்டரே மீனாக்ஷி
பட்டரே காமாக்ஷி பட்டரே· இஷ்டாநர

சிங்கையரே நாரணைய திக்ஷிதரே செவ்வந்தி
லிங்கையரே எங்கள் சொக்கலிங்கையரே சங்கரா

சாரியாரே அனந்த சாஸ்திரியாரே கைவிஸ்
தாரியாரே கோவில் ஸ்தானிகரே–ஊருக்குள்

நியாயமில்லையோ நடுவிலையோ பார்ப்பாரப்
பேய் பிடித்ததே என் பெண்பிள்ளையைக் கோயிலுக்குள்

அஞ்சாறு மாதமாய் ஆடிப்பாடித் திரியச்
சஞ்சாரங் கண்டீரோ சர்ப்பணையாப்-பஞ்சமாப்

பாவி இந்தப் பார்ப்பான் பனயங் கொடுத்தொருநாள்
மேவி இருந்தான் விடிந்தவுடன்-போவான் என்று

எண்ணினேன் என்ன மருந்திட்டானோ என்னவகை
பண்ணினானோ மத நூல் பாடமோ-பெண்ணங்கை

வைப்பென்று பேரிட்டான் வட்டிலில் கஞ்சிக்கு மகள்
உப்பென்று கேளாது உபாயமிட்டான்-கைப்பிடித்துக்

கொண்டானைப் போலக் குடிலமிட்டான் ஆண்பூண்டு
கண்டாலும் பேசாமல் கட்டிட்டான். ஒண்தொடிக்கு

வாடைப் பொடிஇட்டான் வாய்ப்பூட்டு எனக்குமிட்டான்"
என்னும் பகுதி படித்துச் சுவைக்கப் பாலது.

344 சுத்தத் தலத்துச் சுவாமியளே தானிகரே
கொத்துக் கணக்குக் குழாத்தோரே-எத்தனிவன்

345 ஆரோ யெவனோ அனியாயக் காரனிந்த
ஊரோ முன்பின்பழக்க முள்ளவனோ-பார்த்ததுக்

346 கித்தனை யுமூட்டி முடித்தா ளிவளொருத்தி
சுத்ததிரிவு பேசுமிந்தச் சஞ்சீவி-புத்துறவு

347 பாராட்டிப் பண்டை பழம்பகையெல் லாம்முடித்து
போராட வெங்கள் மனை புக்கினான்-வாரா

348 மனிதனிவன் தந்து வருவது கொண்டென்ன
வினிதுறவே நற்பொருளென் றெண்ணி-துணிவுசெய்
யுங்

349 கோமாள மான குரங்கென்று மெண்ணாமல்
பூமாலை கைக்கொடுப்பார் போலவே-மாமோகப்

350 பெண்ணா ரமுதை பிரச மலரணைமே
லெண்ணா திவனுடனே யேற்றினேன்-விண்ணாணம்

351 பேசி அருமந்த பிள்ளையைப் பேயேற்றியரை
வாசிக் கடனும்வர வேற்றித்-தேசமெல்லாங்

---

346. மூட்டி முடித்தாள்-சந்தித்தாள். திரிவு-வேறுபாடு பேசும்.

347. பழம்பகை-சொந்தப் பகை. போராட-பெயர் கெடுக்க.

348. துணிவு செய்யும்-அறுக்கும். கோமாளமான குரங்கு. பன்றிக் குரங்கு.

349—350. குரங்கு கையில் கொடுத்த பூமாலை என்று எண்ணாமல், மாமோக-பெரும் இன்பமோகம் கொடுக்கும் என் பெண்ணை. பிரசம்-தேன். மலரணை-மலர்ப்படுக்கை இவனோடு ஏற்றினேன் என்கிறாள் தாய்க்கிழவி.

350. விண்ணானம்-மாஜாலம் பேசி.

351. அருமந்த பிள்ளையை-அருமையான பிள்ளையை. பேயேற்றி வைத்தேன். அரைவாசி-பாதி. அவா ஏற்றி-ஆசை பெருக்கி.

352 தூறேற்றித் தந்தமென் று சும்மா சுலவேற்றி
மாறேற்றி வம்பு வழக்கேற்றி-வேறுபல

353 கோடேத்தி யெங்கள் குடிகெடுத்திட் டித்தனைக்கு
மீடேத்தி யம்பலமு மேத்தினன்-நாடேற்றம்பெற்ற
தல்லாற்

354 பாதிப் பிளவோ அரைக்காசோ மற்றொருவர்
வாசல் வரப் போமோ—சற்றிரங்காத்

355 துட்டனிவ னுக்குநிதந் தூத்தரித்துக் கையெறிப்
பட்டதல்லாற் சற்றும் பலனுண்டோ-கெட்டென

356 வாதினை வித்தைகற்று வந்ததவற்கு யெங்கள்குடி
சாதன முண்டோ தலத்தோரே-சோதனைபோல்

357 வந்திவ னலாறு வருடமாய்க் காசொன்று
தந்ததுவு மில்லைமகள் தன்னாணை-பைந்தொடியைப்

358 பாரு மிருந்த பதமுமிதமுங் குலைந்திவ்
ஊரும் நகைக்க உடம்பெடுத்தாள்—தீரனிவன்

---

352. தூறு ஏற்றி-பழிச் சொல் ஏற்றி. சுலவு ஏற்றி-சுளகு என்பதின் திரிபு போலும். அற்ப வார்த்தை அல்லது தந்திர வார்த்தை. மாறுஏற்றல்-பகை ஏற்றல்.

353. கோடுஏத்தி-வஞ்சனை ஏற்றி. ஈடுஏத்தி-ஒப்பேத்தி. அம்பலமும் ஏத்தினன்-வழக்காடும்படி செய்தான். நாடேற்றம் பெற்றதல்லால்-விசாரணை பெற்றதல்லால்.

354. பாதிப் பிளவு-பாதித்துண்டோ வரவில்லை என்கிறாள்.

355. தூத்தரித்து-தூய்மையானது தரித்து. கையெறிபட்டதல்லாமல்-கைக்கொட்டு பட்டதல்லாமல்.

356. கெட்டென வாதினை கற்று வந்தவன்—கெட்ட வழக்காடும் திறம் பெற்றவன். சாதனம்-உறுதி பத்திரம்.

357. வந்தநாலாறு வருடமாய் ஒரு காசுகூட இவன் கொடுத்ததில்லை. என் மகள் மீது ஆணை என்று தாய்க்கிழவி சத்தியம் செய்கிறாள். இது நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டு.

359 யென்ன மருந்திட்டானே யென்னவகை செய்தானே
முன்னமொரு நாள் முழுக்கிலே-பன்னியொரு

360 பாவை பிடித்தானிந்த பாதகன்தான் செய்ததெல்லாந்
தேவரீ ரமரர்முன் னேசெப்புமோ-ஆவலுடன்

361 ஈடுபடவேசை பதினெட்டு வலாவுங் குலுங்கத்
தேடும் பொருளுக்குத் தெண்டமோ-வீடு

362 முகடுபாத் தண்ணுந்து மூச்செறிந்து வேர்த்துத்
திகடுபடு கூலிக் குஞ்சிக்கோ-விகடஞ்

363 செழித்து வரநித்தஞ் சிவராத்திரி போல்
விழித்திருந்த தெல்லாம் விழலோ-பழித்த

364 தறிவீரே தேட்டுணி யல்லவோ சொல்லும்
நெறிநீதி யென்றொரு பால்நின்ருள்—மறைகளெல்லாம்

365 வல்லீர் மறைவாசு தேவரே நும் வழக்குச்
சொல்லீ ரெனயானுஞ் சொல்லினேன்-நல்லவரே

366 நிந்தை வழக்குரைக்கு நீலிக் கெதிராக
வந்து வழக்குரைக்க வாயுண்டோ-முந்தவே

---

359. முழுக்கிலே-மாதவிடாயின் போது பன்னியொரு பாவை பிடித்தான்-தனல் அல்லது பனிநீரில் ஒரு பாவை பிடித்தான். அது மாந்திரிகமாக இருக்கலாம் என்று குறிக்கிருர்.

361. வேசையாகிய யாம் 18 விலாவும் குலுங்க தண்டத்துக் காகவா பொருள் தேடுகிரேம்.

362. திகடுபடு கூலி-மெய்வருந்தப் பெறும் கூலி, குஞ்சிக்கா-இந்தக் குடுமிக்கோ. வீகடம்-உன்மத்தம்.

363. செழித்து எனக் கொள்க. விழல்-வீனே.

364. பழித்தது.-நிந்தித்தது தேட்டு—ஆராய்ந்து ஊணி-ஊன்றி.

365. மறைவாசுதேவரே நும் வழக்குச் சொல்லும் என்று மன்றத்தார் வினவ அந்தணர் கூறுகிருர்.

366. நிந்தை-பழியான வழக்குறைக்கும் பேய்க்கு-நீலி கதையை நினைவுறுத்துகிருர்.

367 போற்றிப் பறித்துமுழுப் பூசணிக்காயுங் கலத்துச்
சோற்றில் புதைக்கிலென்ன சொல்லுவேன்-
போற்றியே

368 மேனுளிற்செய் ததெல்லா மேட்டுவிழ லுக்கிறைத்த
தானுலினி வேற டுக்குமோ-ஞகை

369 கீர்த்தி செய்ததிந் தகிழவி நரைத்தலைக்கு
வார்த்த எண்ணெயானுல் வழக்குண்டோ-யேய்த்துப்

370 பறித்ததெல் லாம்போக விளைபாது காப்பென்ன
குறித்த வுடமை கொடாளோ-நறைக்குழலாய்

371 உங்களுக்கே யல்லவெங்க ளூர்க்கனுப்ப வென்று
வைத்த
தங்கமுடிப்பைத் தரச் சொல்லீர்-மங்கைநல்லாள்

372 மாயவயத்து வலிக்கென் றுகட்டி வைத்த
காயல்முத்து மாலைதரக் கட்டுரையீர்-நேயமுடன்

373 உங்கள் மனதிரங்கி உத்தாரம் பண்ணிஞ
லிங்கிதுவே போதுமெனக் கென்றேன்-அங்கவரும்

---

367. என்னை வாழ்த்தி என்பொருள் பறித்து பின் முழுப் பூசனிக்காயும் கலத்துச் சோற்றில் புதைக்கிருள். (இச்சொல் வழக்கு 17ம் நூற்றுண்டில் இருந்தது.)

369. இந்தத் தொடரால் தனது அலுப்பை வெளிப்படையாக்குகிருன் வாசுதேவ மறையோன். நான் பெற்ற புகழ் எல்லாம் இந்தக் கிழவியின் நரைத்த தலைக்கு வார்த்த எண்ணை போல் இழிவாக ஆயிற்று என்பான்.

370. என்னை ஏய்த்துக் பறித்துக் கொண்டது போக நான் இவளிடம் வைத்த பிற பொருள் சிலவுண்டு அவற்றை மட்டுமாவது இவள் கொடாளா? என்கிருர். 'நரைக் குழலாய்' என்று கிழவியை விளித்ததாக உள்ளது சுவையானது.

372. காயம் முத்துமாலை-காயல் பட்டணத்து முத்துமாலை. கட்டுரையீர்—ஆணையிடுங்கள் என்பான்.

373. உத்தாரம் பண்ணிஞல் இங்கு இதுவே போதும் என்ருன். உத்தாரம்-உத்தரவு.

374 பாத்து நகைத்துள்ள பசுமை பசுமையென
வேத்து சிரகம்பிதஞ் செய்தே-வாத்தையிலே

375 காண்கிலிவ ரெல்லாமுங் கற்றவர்காண் பெண்மாய
வீண்கிலேசங்கள் விடாதல்லவோ-பூண் கொங்கை

376 மங்கையிவ ளால்வருந்தி விட்டாரா மென்றே
தங்களிலே கூடித் தனிப்பேசிப்-புங்கவரே

377 வாரு முமதுவழக் கெல் லாமுந்தவே
நீரு முரைத்து நெறிநின் றீர்-காரிகையார்

378 பொங்கு மயல்க் கடலுக்குள் போட்ட பொருலேலேல
சிங்கன் பொருட்போலத் திரும்புமோ-மங்கைக்காய்

---

374. பசுமை—உண்மை, உண்மை என்று ஏத்து-ஏற்று என்பதில் திரிவு சிரசுகம்பிதம் செய்து-தலையை ஆட்டி.

375. சிலேசங்கள்-துன்பங்கள்.

377. முதல் மன்றத்தார் உரை.

378. பெண்களிடம் காமம் என்னும் கடலில் போட்ட பொருள் ஏலேலசிங்கன் பொருள் போல திரும்புமோ. ஏலேலசிங்கன் என்பவர் ஒரு கடல் வாணிகர் வள்ளுவர் இவரிடம் நூல் கொண்டு நெய்தல் தொழில் செய்தார். ஒரு நாள் வள்ளுவர் இவர் இருந்த இடம் சென்றார். அருகில் இருந்தவரிடம் வள்ளுவர் அவர் இங்கு செய்கிறாரோ குப்பத்தில் செய்கிறாரோ என்று கேட்டார். அதிலிருந்து ஏலேலசிங்கள் வள்ளுவரை சரணாகதி அடைந்தார். அவர் சொற்படி நடந்ததால் வெள்ளத்தில் நீந்த முடிந்தது. இவரது கப்பல் கரை தட்டியது. அப்பொழுது இவரது ஆசாரியர் வள்ளுவர் "ஏலையா" என்று சொல்லி இழுக்கச் சொன்னார். கப்பல் நீரில் மிதந்தது. நெல் விற்று வந்த பொன்னை உருக்கி தம் பெயர் வெட்டி கடலில் இட்டார். அதை மீண்டும் ஒரு மீன் வயிற்றில் இருந்து திரும்பப் பெற்றார். ஆசாரியரான வள்ளுவரின் அனுக்கிரகத்தால் இவரால் அனைத்தும் பெற முடிந்தது. ஆதலின் "ஏலேல சிங்கன் பொருள் ஏழுகடல் போனாலும் திரும்பும்" என்பது பழமொழி (அபிதான சிந்தாமணி) கடலுள் போட்ட ஏலேலசிங்கன் பொருள் திரும்பும். ஆனால் காரிகையார் மையல் கடலுக்குள் போட்ட பொருள் திரும்பாது என்பது பொருள்.

379 யெண்ணி யளித்தீரி றையவரே மூவரையன்
புண்ணியம் போல்வந்து பொருந்துமோ-நண்ணியன்று

380 சுந்தர ஞராத்திலிட்ட சொம் போலவே வேசைக்
குந்து பொருள்வந் துதவுமோ-வெந்த

381 யிரும்பு குடித்த நீரெய்துமோ சிந்துங்
கருங்க மரில்ப்பால் வருமோ கண்டீர்-பெரும்பகலே

382 பாலும் பதக்குப் பருகிய பூனையிராக்
கால முழக்குக் கறக்குமோ-நூலறிந்து

---

379. இப்பாட்டுடைய தலைவனாகிய மூவரையன் புண்ணியம் வந்து பொருந்தும், ஆனால் மங்கைக்காய் அளித்தது வாராது எனப் பாட்டுடைத்தலைவனின் புகழும் கூறுகிறார்.

380. சுந்தர மூர்த்தி நாயனார் முதுகுன்றம் பதியடைந்து பொன்னுக்காகப் பாடினார். கிடைத்த பொன்னை மணிமுத்தா நதியில் இட்டார். அது திருவாரூரில் குளத்தில் கிடைக்க வேண்டும் என்று வேண்டினார். திருவாரூர்க் குளத்தில் சென்று பார்த்த போது அப்பொன் கிடைத்தது. இதை சேக்கிழார் சுந்தர மூர்த்தி வரலாற்றில்—

பனிமதிச் சடையார்தாமும் பன்னிரண்டாயிரம் பொன்
நனியருள் கொடுக்கும் ஆற்றல் நல்கிட உடையநம்பி
தனிவரும் மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தருக சென்று
சனிவிடம் பற்றினர் முன்பின் ஒன்று கழலல் உற்றார்

அருளுமிக் கனகமெல்லாம் அடியனேற்காருள் உள்ளோர்
மருளுற வியப்ப அங்கே வரப்பெறவேண்டும் என்னத்
தெருளுற எழுந்தவாக்கால் செழுமணி முத்தாற்றிட்டு
பொருளினை முழுதும் ஆரூர் குளத்திற் போய் கொள்''

என்று பாடியுள்ளமைக் காண்க. சுந்தரனார் ஆத்தில் இட்டசொம் (பொருள்) திருப்பி கிடைத்தது. வேசைக்கு தந்த பொருள் கிட்டுமோ? என்பார். உந்து-தள்ளிய.

381. வெந்த இரும்பு-காய்ச்சிய இரும்பு, குடித்த நீர் எய்துமோ-பழுக்கக் காச்சிய இரும்பில் பட்ட நீர் வெப்பத்தில் வறண்டு போகும். திரும்ப வருமோ ! கமரி-ஒருவகைப்புல். அதிலிருந்து பால் பெற இயலாது.

382. பட்டப் பகலில் பதக்குப் பால் குடித்த பூனை இரவில் உழக்குப் பால் கரக்குமா பூனை பால் கறக்குமா? என்கிறார்.

383 மட்டுக்கு நச்சுமரம் வைத்து வளர்த்தீர் பாம்புக்
குட்டிக்குப் பாலுங் கொடுத்தீரே-நெட்டிக்குள்

384 ஈரமுண்டோ கல்லு மிரங்குமோ எட்டியின்பச்
சாரமுண்டோ வேசையுமத் தன்மைகாண்-பாரிடத்தே

385 பேசித்தன் கேடும் பிறர்சூடு மீதிலலால்
மாசுற்றுமை போல்வா டுவரோ-காசினிக்குள்

386 மிக்க புலவொற்கும், வேதியற்கும் வேசையற்கும்
மெய்க்குங் கலியாலிரப் போர்க்குங்-கைக்குள்

387 கொடுத்த பொருளைக் குறிப்பரோ-நீர்தான்
தொடுத்த வழக்கிதுவுந் தோர்க்கும்-நடுப்பகர்வ

388 தல்லயினி வீணிலரத் துவதென் போமென்றே
யெல்லவருந் தங்கள்மனைக் கெய்தினர்-வல்லடியில்

389 பாயும் புலியுமெ னைப்பற்றி வந்த
பேயுமெனத் தாயுமகளுந் தனிச்சென்றாள்-தீயெனும்

---

383. மட்டுக்கு-எல்லைக்கு, நச்சுமரம் வைத்து வளர்த்தீர் நெட்டி-ஒருவகைப் புல் அல்லது எலும்பு.

384. கல்லும் இரங்குமோ-உருகுமோ, எட்டியின் பச்சாரம்-எட்டு இன்பச்சாரம் என்று பிரிக்க. எட்டு-இறந்த இடத்தில் சடங்கு, சாச்சடங்கில் ஒன்று, செத்த இடத்தில் இன்பச் சுவை உண்டா என்கிறார் அல்லது எட்டி என்பது மிகவும் கசக்கும் அது இன்சுவை அளிக்குமா என்பது பொருள். இதுவே வேசையின் தன்மை என்பது மன்றத்தார் கூற்று.

385. பிறர் சூடும்-கோபமும், மாசு-களங்கம். காசினி-பூமிக்குள்.

386. புலவர்களுக்கும், அந்தணர்களுக்கும், வேசையர்களுக்கும் கலியினால் வாடி வருந்தி இரப்பவர்களுக்கும் கொடுக்கும் பொருளை யாரும் குறிக்க மாட்டார்கள் என்பர்.

387. நீர் தொடுத்த வழக்கு இது. தோர்க்கும் மேலும் நடுப் பகர்வது இல்லை.

388. இனிமேலும் அரட்டாது போம் என்று மன்றத்தார் கூறி வீடு சென்றனர்.

389. வல்லடி-ஒரு தலை வழக்கு. பாயும் புலியும் எனைப்பற்றி

390 மன்று தனந்தயலே வந்து வயறுபகீ
ரென்று கனலப்பட் டெரியவே-நின்று நின்று

391 தேங்கிப் பலகாலத் தியங்கி மதிமயங்கி
யேங்கிச் சிவசிவா வென்றுரைத்து-பாங்காகப்

392 பங்கமெனைச் செய்த பழிகாரி வீடரவக்
கங்கணநா ராடிடமாய்க் காணேனு-மங்கையிவள்

393 ஏற்பனவெல் லாமேத்திட் டில்லையென்ற பாவிதனைச்
சூற்பனகை கோலம் வந்து சூழாதோ-சூற்பனகை

394 வைய்த வர்க்கிந்த வடபத்திர சாயிபிள்ளைச்
செய்தவாறிங் கிவளைச் செய்யாரோ-பொய்தனையே

395 பற்றுமிவ ளன்றுசிவன் பாதத்தி னுலியமன்
பெற்ற பேறென்று பெறுவாளோ-முற்றுநீ

வந்த பேயும், தாய்க் கிழவி புலிக்கும் மகள் பற்றி வந்த பேய்க்கும் உவமை.

390. மன்று தனந்து-மன்றில் வருந்தி.

391. நின்று நின்று தேங்கி-வாசுதேவ மறையோனின் மன நிலையை பிரதி பலிக்கிறது. தியங்கி-சோர்ந்து, 'சிவசிவா' என்று அலறுகிறுர். 383 முதல் 395 வரை அத்தாய் வேசையைத் திட்டு வதும் தன்னை தானே இகழ்ந்துச் சொல்லுவதும்.

392. என்னை மானபங்கம் செய்த இந்த பழிகாரியின் வீடு பாம்புகள் நடமாடும் இடமாக வேண்டும் எனச் சபிக்கிறுர்.

393. நான் கொடுத்ததை எல்லாம் பெற்றுக்கொண்டு இல்லை என்கிறுளே இப்பாவி. இவளுக்கு சூர்ப்பனகைபோன்ற பேய்க் கோலம் வரவேண்டும்.

394. இந்த வடபத்திரசாயி பிள்ளை இந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் உறையும் வடபத்திரசாயி, இராமாவதாரத்தில் சூர்ப்பனகைக்கு மூக்கும் முலையும் அறுத்துப் போட்டது போல இவளுக்கும் யாரேனும் செய்யாரோ என்கிறுர்.

395. பொய்கூறும் இவள் அன்று காலசம்ஹரமூர்தியாக சிவபெருமான் காலில் எமன் பட்ட பாடு பெறுளோ!

396 தெருளும் பரம சிவனார் நகையி
னருளுங் கிவளை வீட்டாதோ-ஒருநாள்

397 மறைக்கே வளரும் நெடுமால் துயிலும்பள்ளி
யறைக்கே விருந்தமுத மாகாளோ-சிறைக்கோல

398 நாடுமொரு சீதை நங்கைசூழும் பழிதீர்
ஆடும் புன்லிலிவ ளாடாளோ-கேடின்றி

399 வாழக் கடவதிவள் மண்ணூழிக் காலமெல்லா
மேழைக் கணத்த பிழைத்தாளே-ஊழ்வினையின்

400 தொந்தமென வந்தறிவு தூண்ட மதிமயங்கச்
சிந்தை தெளிந் தெம்முரிச் செல்லுமென-வந்தேன்

401 வருந்துறவி லக்கோதை மயிலை நெடுமாலைப்
பொருந்துறவு முன்போலப் போற்றிப்-பெருந்தவனான்

---

396. முற்றுத் தெருளும்-முற்றும் அறியும், சிவபெருமான் அறிவின் கடவுள் "ஈசானஹ சர்வ வித்யானாம்" என்று வேதம் கூறும். அவரது அட்டகாசமான நகையினால் முப்புரமும் எரிந்தது போல இவளும் எரிந்து விழாளோ!

397. பள்ளியறைக்கு அமுது படைப்பது போல் இவளை நெருப்பில் இட்டு சமைக்காரோ.

398. சீதை பழிதீர அக்னிப்பிரவேசம் செய்தாளே அதுபோல் நெருப்பில் இவள் வீழாளோ! வாசுதேவ மறையோனின் மனம் வெறுப்பாலும், ஏக்கத்தாலும், வெறியாலும் எங்கெங்கோ செல்கிறது.

399. எனக்கு மிகவும் பிழைத்தாள் என "ஏழைக்கு கணத்த பிழைத்தாள்" என்று கூற "ஊழிக் காலமெல்லாம் இவள் கேடின்று வாழக்கடவது" என்று கூறி எதிர் மறையாக என்றென்றும் நாசமாய்ப் போகட்டும் எனத் திட்டுகிறார் எனக் கொள்க. அல்லது இது காறும் சபித்து வந்தவர், இறுதியில் நல்ல புத்தியுடன் முடிப்பதாக "கேடின்றி வாழட்டும்" எனக் கூறி முடித்ததாகவும் கொள்ளலாம். அடுத்து வரும் சொற்றொடர் இது என் "ஊழ்வினையால் வந்தது என அறிவுதூண்ட" என்பது காண்க.

401. வரும் துறவு-விட்டு வருதல். கோதைமயிலை-ஆண்டாளை, நெடுமாலை-திருமாலை. பொருந்துறவு-பொருந்தும் அன்பு (உறவு)

402 பெற்றேனே யிந்தப் பெருந்தலவா சப்பேறிங்
குற்றேனே யுள்ள முலேந்தேனே-முற்றுமுமை

403 நம்பலாம் நன்ருய்மெய்ஞ் ஞானம்பா வித்ததெல்லா
மம்பலா திக்கிடமே யானேன்-செம்பதுமக்

404 கோதா யுனேவிரும்பிக் கும்பிட்டுப் பெற்றபலன்
போதாதோ வென்று புறப்பட்டேன்-பாதகிமேல்

405 வைத்த தயவு மயலு மெனேப்பிணிப்ப
பொய்த்த வுடம்போடும் போயினேன்-யித்தலம்விட்

406 டேகக்கூ டாதுமன மென்செய்வேன் வஞ்சியவ
ளாகக்கூ டாதென்ரு லல்லளே-தோகையிவள்

407 இன்னந் தயவோ யிலேயோ அறிகிலேன்
முன்னஞ் சிலசொல் மொழியுண்டே-யென்னுடனே

408 ஆய்ந்தந்த ரங்கத்தி லன்றே யவளுரைத்த
நேயஞ் சிறிது நினேவளே-பாயலிலே

409 சொல்லுக் கிதத்த சுகமெல்லாம் வேருருவர்
புல்லிப் புணரப் பொருந்துமோ-சொல்லுமவள்

அவன் பட்டபாடு திருமால் மீதும் கோதை மீதும் எளக்காரமாக (வெறுப்பாக) வெளிப்படுகிறது, உன்னேப் போற்றி இத்தலவாசப் பேறு பெற்றேனே! இத்தலத்தில் வசிக்கும் பேறு பெற்றேனே! உள்ளம் உலேந்தேனே. உம்மை முற்றும் நம்பலாம். அம்பலாதிக் கிடமாயினேன். வழக்கு மன்றம் செல்லும் வகையில் ஆனேன். ஆண்டாளே உன்னே கும்பிட்டுப் பெற்ற பலன் போதாதோ! என்பது காண்க.

405. முதல் அவ்வூரை விட்டு வெளியேறும்போது அவ் வேசையின் நினேவு மீண்டும் வந்து அவன் அல்லல் உறுவது மனே நிலேக்கு எடுத்துக் காட்டு.

408. அவள் பேசிய இன்பப் பேச்செல்லாம் நினேவுக்கு வருகிறது.

409. பாயில்-படுக்கையில், சொல்லுக்கு இதத்த சுகம் எல் லாம்-சொல்வதற்கு இனிமையான சுகம் எல்லாம். வேறு ஒருவர் புல்லிப் புணர்வாரே-அவளே அணேந்து வேறு ஒருவன் புணர்வானே என எழுச்சியோடு ஏங்குகிருன்.

410 அஞ்சவு ரைப்பதுகேட் டஞ்சுமெனைப் பார்த்தய்யோ
நெஞ்சு தரித்தாளே நெட்டூரி-மஞ்சத்

411 திருப்பளே நம்மையுஞ்சற் றெண் ணுவளே கொங்கைப்
பொருப்பளே தோகனவோ பொய்யோ-யிருப்பளவும்

412 கூட்டுமோ யின்னமெனைக் கொள்ளுங் கலவிவிளை
யாட்டுவே றங்கொருவர்க் காகுமோ-வேட்டொருநாள்

413 யெங்கெங்கிற் பாக்கிலும்வந் தென்னெதிரே நிற்பளா
லங்கங் கிருப்ப தவள்தானோ-பங்கமென

414 வுன்மத்தம் போலு முரைதடுமா றிக்குளறி
வன்மத் தொடுநான் வழிக்கொண்டேன்-தன்
மத்தைச்

415 செய்தோமோ யெள்ளளவுஞ் செய்தாலும் நல்லகெதி
யெய்தோமோ பாழுக் கிறைத்தோமோ-ஊர்க்குள்ளே

416 நந்தவனங் கண்டகற்று நன் னுதலுக் கீந்ததொரு
நந்தவனங் கண்டால் நலனுண்டே-முந்துகொடும்

---

410. அவன் அஞ்சக் கூறிய சொற்களைக் கண்டு நான் அஞ்சுகிறேன். என் நெஞ்சத்தை பரித்தாளே அக்கொடியவள்.

411. இப்பொழுது மஞ்சத்தில் படுத்திருப்பாள். என்னையும் சற்று எண் ணுவாள். கொங்கை விம்முவாள். பொய்யோ என்றெல்லாம் மனது பேதலிக்கிறது.

412. இவள் எனக்குக் கொடுத்த கலவி விளையாட்டு வேறு ஒருவர்க்கு ஆகலாமோ என்கிறான்.

413. அப்பொழுது எங்கெங்கு பார்த்தாலும் என் எதிரிலே வந்து நிற்பாளே! இப்போது அங்கிருப்பது அவள் தானோ! என்றெல்லாம் உன்மத்தம் பிடித்தவன் போல பிதற்றினான். வன்மத்தம்-கடுமையான வெறியுடன் வெளியேறினான். வெளியேறும் போது "ஆகா நாம் இந்தப் பாவிக்குக் கொடுத்ததை நந்தவனம் செய்திருந்தால், அல்லது குளம் வெட்டி அதற்கு கல்படி பாவியிருந்தால், அல்லது கோதைப் பிராட்டிக்கு மண்டபம் கட்டியிருந்தால் நற்பயனைப் பெற்றிருக்கலாமே என்று எண்ணி எண்ணி ஏங்குகிறான்.

417 பாபத்தைச் செய்த பழிகாரிக் கீந்ததொரு
கூபத்தைக் காணக் குறித்தோமோ-ஆபத்தால்

418 தாவியா விக்குமந்தத் தாய்க்கிழவிக் கீந்ததொரு
வாவியாய்க் கற்கட்டி வைத்தோமோ-பாவிக்காய்

419 விண்டவமே செய்ததெல்லாம் வில்லிபுத்தூர் கோதைக்
கோர்
மண்டபமே செய்தால் மதிப்பாமே-சண்டைக்

420 கொடிக்காரிக் கீய்ந்ததெல்லாங் கோலப் புதுவைப்
படிக்காசுக் கீய்ந்தால் பலனே-அடிக்கடிதான்

421 கூறிப் பலனென்ன கூறுெண்ணு தென்றுமனந்
தேறிப் பயணத் திசைநடந்து-மாறுபடா

422 தொட்டு விடும்பறவை யொப்பாய் வலைத்தலையில்
கட்டுவிடு மானின் கலையென்ன-விட்டு

423 நடந்தேன் களவேள்வி நாட்டிற் புகழே
படந்தேறும் வீரைப் பதியில்-அடைந்தாரைக்

424 காப்பான் கொடைக்கனகக் காவான் கறைவடிவேல்
சேர்ப்பான் சினந்தாலுஞ் செவ்வியான்-வாய்ப்பாய்ச்

---

417. கூபம்-கிணறு. குறித்தல்-தோண்டல்.

418. ஆவிக்கும்-பெருமூச்சு விடும்.

419. அவம்-வீணான செயல்.

420. கோலப்புதுவை - அழகிய வில்லிப்பூத்தூர். படிக்காசு-கோயில் படித்தரத்துக்கு

421. ஒட்டுவிடும்-பொருந்தாமல் பிரிந்து செல்லும் பறவையைப் போலும்.

422. வலையில் சிக்கி கட்டுவிட்டுச் செல்லும் கலைமான் போலவும் நடந்தேன்.

423. புகழே படந்தேறும் வீரைப்பதியில்.

424. அடைந்தாரைக் காப்பான்-பட்டம். கறைவடிவேல் சேர்ப்பான்-போரில் வெற்றியில் இரத்தக்கரை படிந்த வேலை தாங்கியவன். செவ்வியான்-நேர்மையுடையவன்.

425 சிறந்தபுக ழெண்டிசையுஞ் சேர்க்கு மிசையா
லறந்தழையுஞ் செங்கோ லபயன்-இறந்த

426 தினியே ழுலகுமுய்யா தென்ன வருங்காலந்
தனியே பெரும்பஞ்சந் தாங்கி-முனியாது

427 சேய்போலும் வெங்கலியாற் றிக்கற் றிடைந்தோரைத்
தாய்போலுங் காக்குந் தயவினுன்-நேயப்

428 படிதாங்கி யென்றும் படியளந்தெல் லோர்க்குங்
குடிதாங்கி யென்றுபெயர் கொண்டோ-னெடிது

429 முனைதீர்த் தடையலரை மோதுங் கதிர்வேல்
வினைதீர்த் தவனுதவும் வில்வேள்-மனதுவஞ்சஞ்

430 செய்யா னமுதெனவே தித்திக்கு முத்தளக்குங்
கையாந் திருவேங் கடநாதன்-வைய்யமெல்லாம்

431 நிற்கும் புகழும் நெறியு மனுமுறையுங்
கற்குந் திருவேங் கடநாதன்-சொற்குலவு

432 செல்விக் கிணங்குஞ் சேய்மூ வரையன் இயற்
கல்வித் திருவேங் கடநாதன்-வில்விசையங்

433 கொண்டகண்ட தண்டமிண்டு கொம்பிரண்டி னுந்
திரண்டு
கண்டகண்ட கந்துரந்து கண்டுகண்டு-பண்டியன்ற

---

426. இனி ஏழுலகமும் உய்யாது என்னும் பெரும் பஞ்ச காலத்திலும் உயிர்களை தனியே காப்பான். பெரும் பஞ்சந்தாங்கி-ஒரு பட்டப் பெயராம்.

428. படிதாங்கி-பட்டப் பெயர்.

429. முனைதீர்த்து-பகையைவிட்டு. அடையலர்-இவனை அடையாத பகைவரை மோதுங் கதிர்வேல்.

432. சொற்குலவும் செல்வி-கலைமகள். இயல் கல்வித் திரு வேங்கடநாதன்-இலக்கியத்தில் ஈடுபாடுடையவன்.

433 முதல் 439 வரையில் வெற்றிநடை கூறப்படுகிறது. நடைகண்டு இன்புறத்தக்கது.

வில்விசயம் கொண்டு - வில்போரில் வெற்றி கொண்டு. அகண்ட-வலிமையான. தண்டம்-குடைக்காம்பு. மிண்டு-வலிமை

434 அண்டமுண்டெ ழுந்தகொண்ட லங்களந்தி லங்கலன் பிற்
சண்டமுந்து குன்றுபந்து தந்துகந்து-திண்டடங்கை

435 கொண்டளந்த மண்டலங்கள் குண்டலம்ப டுந்தரங்கம்
மண்டிடுந்த டங்கடங்க மண்டியே-விண்டடவி

436 மாறிட்டு நேரிட்ட மாதுட்டர் போருக்குள்
வீறிட்டு ஆலிக்க மேலிட்டு-மீறிட்ட

437 மத்தகத்து கள்ப்படுத்தி வைத்தபத்தி ரப்படைக்குள்
வித்தகத்த ரைத்தகர்த்து விட்டுழக்கி சத்தித்

யாகி, கொம்பிரண்டிலும் திரண்டு - இரண்டு தந்தத்திலும் திரண்டு. கண்ட-கண்ணில்பட்ட, கண்டகம்-வாள். துரந்து-(கண்ட-பார்த்த, கண்டகம் கொடுமையை, துரந்து-நீக்கி என்றும் பொருள்,)

434. பண்டு-முன்னுள். இயன்ற - தோன்றிய, அண்டம்-பூமி. உண்டெழுந்த-நீருண்ட, கொண்டல்-மேகம் அலங்கல்-அசைதல், அந்தியிங்க—ஒளிபெற. பிறசண்ட-கொடுமை. முந்து-முற்படு குன்று-குறைய. நிலைகெட பந்து-அடும் சவுக்கு. தந்து-கயிறு. கந்து-கெடுதல்.

435 திண்·வலிமையான. தடங்கை-பெரியகை. மண்டலங்கள்-இடங்கள். குண்டலம்படும்-வட்டம், ஆகாயம் வரை நீண்ட. தரங்கம்-ஈட்டி, கடல். மண்டிடு-விரைந்து செல்லுதல், செல்லும் வழி, கடங்கமண்டியே-மதம் பெருகும் யானைக்கூட்டங்கள் நெருங்க. வலியகையினுல் அளந்த இடங்கள் ஆகாயம் வரை நீண்ட ஈட்டிகள் விரைந்து செல்வதால் தடம் கடம் என்று ஒலி நிறைந்து நிற்ப என்று பொருள். இடங்கள் வட்டமான குழிந்த கடல் போலாகும்படி விரைந்து செல்லும் மதம் பெருகும் யானைக் கூட்டங்கள் நெருங்க என்றும் பொருள். விண்டு-மலர்ந்து, வெளிப்போந்து. அடவி-காடு, கூட்டம்.

436. மாறிட்டு-எதிரிட்டு, நேரிட்ட தொடங்கி. மாதுட்டர்—எதிரிகள். வீறிட்டு-வேகமாக. ஆலிக்கும்-களித்து. மீறிட்ட-அடங்காமல் போன. காடுபோல் வெளிப்பட்ட மாற்றரசர்கள் இட்ட போரில் வேகத்துடன் களிப்பு மிகுதியாக எதிர்த்த தலைகளை தூள் அடித்து என்று பொருள்.

437. மத்தகம்-தலை. துகள்படுத்தி—தூளாக்கி. வைத்த-காத்த, பத்திரப்படை-வாற்படை. வித்தகத்தர்-வல்லவரை. தகர்த்து-நொறுக்கி. விட்டுழக்கி-கலக்கி. சத்தித்து-பெரும்சப்தம் இட்டு.

438 திடிமுழங்க விடுபதங்க ளிடருரங்கள் பருவதங்கள்
நடைபயின்று வருவதொன்று நாட-விடுகடின

439 வேழக் கடாசலத்தின் மீதேறிப் பார்வேந்தர்
சூழக் குழாம்பவனி தோன்றுதலும்-தாளாது

440 கோட்டுக் கரட்டுக் குலமால் வரைசுமக்கு
மோட்டுப் பதலை முரசிரட்ட-வேட்டுத்

441 தனிச்சங்க வோசைத் தனங்கத் தளங்க
வனிச்செங்கொள் சீறடிய ரார்ப்ப-முனிச்சங்க

442 முத்தமிழோ ராசி முழங்கப் பரிக்குழாந்
தத்துந் தரங்கம்போற் றத்திவர-மொய்த்த

443 கடகர் குடகர் கவுடர் மகதர்
பிடகர் குகுதர் பிரள-நிடதர்

444 அடரு முரச ரரண ரரசர்
படரும் வரிசை படரத்-தொடருமொழி

444a ஆரியர் சீனர் கடாரர் விலாடர்கள்
சீரியர் சோனகர் சேரலர்-நேரியர்

445 வாரிதி நாடர் மராடர்கர் நாடர்கள்
ஏருறு மாகத ரீழர்கள்-பாரின்

---

438. இடிமுழங்க-இடிபோல் முழங்க. விடுபதங்கள்-வருங் கால்கள். இடர் உரங்கள்-மார்ப்புறங்களை இட பருவதங்கள் நடைபயின்று வருவது போல் மாற்றார் மார்புகளை இடரி யானை யின் கால்கள் வருகின்றனவாம்.

439. அப்போர்க் கொத்த யானை மீது ஏறிபவனிவர.

440. தாளாது - வளையாத. தனிச்சங்க-ஒப்பில்லாத சங்கம். கோடு—தந்தம். கரடு குலமால்வரை-குலமலை. பட்டத்து யானையு மாம். கரடு-முரடு, மதம் பெருகும் வளையாத தந்தங்களை உடைய மதம் பெருகும் பட்டத்து யானை மீது. மோட்டுப்பதலைமுரசு-உயர்ந்த முரசு. இரட்ட-கொட்ட.

445. சீரியர்-நல்லோர். நேரியர்-சோழர். சோனகர்— வாருதி நாடர்-கடல் நாடர், துலுக்கர். மருடர்-மராட்டர். கருனடர்.

446 புடைசுற்றச் சுற்றப் பொலியு மலிய
குடைசுற்றச் சுற்றக் கொடிகள்-இடையிடையே

447 தங்கள் மரபு தருஞ்செல்வ ருங்கருணை
பொங்கு மமைச்சர் புரவலரும்-எங்கும்

448 நிறையப் புகும்பவனி நேரேதொல் வாகைத்
துறையில் பொலிசின்னந் துன்ன-முறைபுரியும்

449 வீரை நெடுஞ்சிகர வீரை வருதலும்வெண்
டாரை நிலவில்ச் சகோரம்போல்-காருதவி

450 கண்டமயில் போலும்விண் காண்கின்ற சாதகம்போ
லெண்டமை யானொருபா லெய்தினேன்-முண்டகமான்

451 காந்தா திருவேங் கடநாதா மூவரையன்
வேந்தா அருளொளி வெள்ளமே-சேர்ந்தார்

மாகதர். ஈழர். புடை-பக்கம். பொலியும் - நெற்களஞ் சியம். மலிய-நிறைந்து நிற்ப.

448. வாகை-வெற்றி. பொலி-சிறக்கும். துன்ன-நெருங்க.

449. வெண்தாரை-வெண்மையான கதிர்கள் நிறைந்த நிலவு. சகோரம்-ஒருவகைப் பறவை. இது நிலாக் கதிர்களில் மகிழ்ந்து வாழும்.

450. கார்-மேகம், மேகத்தைக் கண்ட மயில் தோகைவிரித்து மகிழ்ந்து ஆடும். சாதகம் ஒருவகைப் பறவை. மேகநீர் உண்டு உலவும் பறவை என்பர். ஆதலின் மழை கண்டதும் மகிழும். அது போல் வாசுதேவ மறையோன் சகோரம் போலும், சாதகம் போலும், மயில் போலும் மகிழ்ந்தேன் என்கிறான்.

451. முண்டகம்-தாமரை. மான்-பொன். முண்டகமான்-இலக்குமி, செல்வம். பாட்டுடைத் தலைவன் பெயர் திருவேங்கடநாதன். இலக்குமியின் காதலன் திருமால் போன்றவனே என்றும், செல்வத்தின் தலைவனே என்றும் இரண்டு பொருள்படப்பாடுகிறார். மூவரையன் வேந்தா-மூவரையனாகிய வேந்தே என்பது ஒரு பொருள். மூன்று அரசர்களாகிய சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை அரசர்களுக்கு வேந்தே என்றும் பொருள்.

452 வளந்தாங்கி யம்பொன் மணிகுடந் தாங்கி
தளந்தார் தமையென்றுந் தாங்கி-உளந்தாங்கி

453 ஓங்கி மனுமுறையா லோருலகந் திண்புயத்தில்த்
தாங்கி அரும்பஞ்சந் தாங்கியே-தேங்குபுகழ்

454 ஆடப்பிரா தாபத்தி னுதிக்க மேதக்கக்
கூடற்பி ராநிச்சைக் கூருற்று-நீடிப்பின்

455 நேயத்த னேகற்ற நீர்மைக்கு ரைபத்து
பாயத்தனே முற்று பானுவே-யினிசைக்கும்

456 மந்தராகங் கள்நின் றிசைக்குமந் தத்திசைக்கும்
மந்தரா கம்தகுதி யாகா-குசைக்கவண

457 வெம்பரிக்கு ரம்பரித்து வென்றடத்த வன்றடக்கை
யம்பரிக்கு லங்களைச்சொ லம்புயர-யும்பர்பணி

458 வைத்தகுரு வைத்தருகை வைத்தருண வெற்றிபயில்
உய்த்துடல்வ ளைத்தகுண உத்தமா-முத்தமிழின்

---

452. வளந்தாங்கி-வலிமை அல்லது மாட்சியை தாங்குவோன். இதை ஒரு பட்டமாக ஏற்றவன். பொன்மணி குடம் தாங்கி-பொன்மணி மகுடம் தாங்குவோன். உளம்-நல்ல கருத்துக்களைத்தாங்கி.

453. பஞ்சந்தாங்கி-பட்டப் பெயர். தேங்குபுகழ் – நிலைத்த புகழ்.

454. கூடல் பிரானை மனதில் நினைவு கூர்ந்து. நீடிப்பின்

455. நேயத்தன்-மிகுந்த பக்தி உடையவனே.

455. நீர்மை-குணம். பத்து-பத்தி. பாயத்தன் - சிறப்பவன் அல்லது விளங்குபவன். முற்றுபானுவே-சூரியன் போல பிரகாசிப்பவனே.

456. மந்தராகங்கள்-மென்மையான இசை ராகங்கள். நின்றிசைக்கும்-நின்று ஒலிக்கும். அந்தத் திசைக்கும்: மந்தர் ஆகம்-சொர்க்கலோம் தகுதியாகாது.

457. குசை – கடிவாளம். கவனம்-வேகம். குரம் - குளம்பு. பரித்து-அறுத்து அம்-அழகிய, பரிக்குலம்-உயர்ந்த குலங்கள், சொல் அம்பு உயர்-மொழியில் சிறந்த உயர்ந்த.

458. உம்பர் பணிவைத்த-தெய்வப்பணியில் வைத்த குருவை.

459 வாரியுப் காரிநிதி வாரிமழை வாரிபொழி
பாரியென வோதுபரி பாலனே-வீரை

460 வருங்காவ லாவொழியா வாழ்வுகளு மீறு
நெருங்காவ லாவுதவு நீதா-தருங்காலம்

461 வெம்பஞ்சந் தாங்குதிரு வேங்கடநா தாகரடக்
கும்பஞ்செய் வேழக் குலக்களிறே-தம்பரமென்

462 றுற்றுரைப் பாட லுரைத்தாரைப் பாரிடத்தின்
மற்றுரை யும்புரக்கும் வள்ளலே-கற்றூர்

463 குறிக்குங் குறிப்பறியுங் கோவே திசையில்ச்
செறிக்கும் புகழ் அமிர்தச் செல்வா-நெறிக்குலவு

464 மாலே செயவிசய மங்களகல் யாணமென்றூர்
பாலேற் றிடுசோ பனமென்றேன்-மேலைப்

465 பழக்கத்தா லென்னையவன் பார்த்து நகைத்து
முழக்கத்தா லோசை முரசின்-றளக்கற்று

தருகைவைத்து-நிலை பெறவைத்து. அருள-சிவந்த. வெற்றிமயில்-வெற்றி நிகழ்த்து. இரத்தம் சிந்துதலால் சிவந்த வெற்றியை நிகழ்த்தும் என்பது ஒரு பொருள். அருண—அதிகாலையில் அருணோதயத்தில், எற்றிபயில்-உயர்த்தி நீர் வார்த்து தெய்வங்களைப் பரவும் முறை நிகழ்த்தர ஈடேறி என்பது இரண்டாம் பொருள் உடல்வனைத்த-வணங்கிய.

459. முத்தமிழின் வாரி-இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க் கடலோ. உபகாரி—பேருபகாரியே. நிதிவாரி மழைவாரி பொழிபாரி-நிதிக்கடலை மழைநீர் போலப் பொழிகின்ற. பாரி-பாரிக்கு நிகரானவனே. எனவோது பரிபாலனே-என்று கூறத் தகும் அரசே.

464. செய விசய மங்கள கல்யாண-வாசுதேவ மறையோன் திருவேங்கடநாதனுக்கு இவ்வாறு மங்கலம் கூறுகிறூர்.

465. மேலைப்பழக்கத்தால்-மேன்மையான பழக்கம், அல்லது முன் பழக்கம்.

466 லங்கே யழைத்து அருகிருத்திக் கோகனகச்
செங்கை விரலாழிச் செறித்திட்டு-பங்கயமின்

467 காந்தி யெரிக்குங் கனகமாத் தாணியணி
யேந்தி அழித்தே யிருகரத்தும்-தோய்ந்த

468 கனக மழைபொழியுங் காளமே கத்துப்
பனக மணிசொரியும் பண்டாளன்-வாழைதாழ்

469 மாலையணி வாகுவலைய முன்கை முதாரி
தால மதிக்குஞ் சரப்பணிகள்-மேலான

470 பட்டாடை யுந்துகிலும் பாய்நன் பரியுங்
கட்டாணி முத்தின் கவிகைகள்-மட்டில்லாத்

471 தானங் கொடுத்தினியச் சற்காரஞ் செய்துவெகு
மானங் களிணையு மன்னித்தான்-மீனவனே

472 மூதரணி காவலன் மூவரையன் வீரையான்
மேதக வின்னே விடைகொண்டே-நீதி

---

466. கோகனகம்-தாமரை போல். செங்கை - சிவந்தகை. செறித்திட்டு-சேர்த்து.

467. தரணி-பூமி. அழித்தே-பரிவுகூர்ந்து இரண்டு கரங்களாலும்.

469. வாழைத்தார் மாலை-வாழைப்பூ மாலை. வாகுவலையம்-கைக்கும் பூட்டும் ஓர் அணி. முதாரி-முன் கையில் பூட்டும் அணி. சரப்பணி-வயிரம் அமுத்தின கழுத்து அணிவகை.

470. பாய்நன்பரி-பாய்ந்து செல்லும் உயர் சாதிக் குதிரை. கட்டாணி-காது அணி. முத்தின் கவிகை-முத்துக்குடை.

471. சற்காரம் செய்தல்-உபசாரம் செய்தல். மன்னித் தான் பொருத்தினான்.

472. மூதரணி-மூன்று தரணிகளுக்கும் காவலன் மேதகவு-மேன்மையுடன். இன்னே-இன்ப முடன்.

473 பெருக்க முததி வெள்ளப் பருமுவகைச்
செருக்கினுடன் பவனி சென்றேன்-மருக்கமழுங்

474 கொங்தேறும் போதலங்கல் கொண்டவிற லிக்கொடியே
வந்தே னெமது மனைக்கென்ன-அந்தணரே

475 யின்ருே விடிந்ததர விந்தப் பைந்தொடிமார்க்
கன்ருே தவத்தினரென் ருதரித்தாள்-தென்றலங்கண்

476 ஊரும் பனிக்கென்றே யொப்பாக நின்றுதனிச்
சோருந் தனிமடவார் சோராரோ-வாரி

477 அருத்திதரு மோசைக் கஞ்சுமிவள் கொண்ட
வருத்தந் தணிய வசமே-முருத்துநகை

478 நல்லாரைத் திங்கள் நகைநிலா வென்றுதொடுத்
தெல்லார்க்கு மொற்குளிர்ச்சி யெய்துமே-
வல்லாற்கும்

479 கொங்கையணிச் சந்தனமுங் குங்குமமும் மான்மதமும்
மங்கையார் தொட்டணிய லாகுமே-வெண்கனகக்

480 காளகண்ட வாயுங் கனத்திடை சக்கிர
வாளகண்ட மண்டுமொலி மாற்றுமே-வேளெனவும்

---

473. மருக்கமழும்-மருக்கொழுந்து கமழ்கின்ற. கொந்து-கொத்து. ஏறு-மிகுந்த. போது-மலர். அலங்கல்-மாலை.

475. தென்றல்-தென்காற்று. அங்கண்-அங்கு.

476. ஊரும்-வீசுகின்ற. பனி-குளிர். ஒப்பு-அழகு. தனிச் சோரும்-தனிமையில் வாடுகின்ற. சேராரே-கண்ணீர் வடிக்காரோ.

477. வாரி-நீர். வசமே-ஒழுங்கே.

478. நல்லாரை-மாதரை. திங்கள் நகைநிலா-சந்திரனைத் தோற்கடிக்கும் நிலவு என. தொடுத்து-நெருங்கி இருந்து. வல்-முலைக்கச்சு. ஆர்க்கும்-கட்டிய.

480. காளகண்டம்-குயில். சக்கரவாளம்-வட்ட வடிவு. சக்கர வாகப் பறவையும் ஆகும். மண்டு-அதிகமாகி. ஒலி-ஓசை.

480. வேள் எனவும்-விருப்பம் என்றவுடன்.

481 போது மமளி பொருந்துமே மெல்லமளி
மீதுசம் போகம் விளையுமே-வேத

482 மறைக்கோலங் கண்டவுடன் மங்கைமார் பண்டைச்
சிறைக்கோலம் இன்றே தெளியுமே-பொறைக்கோலத்

483 தையர் வரவுபெற்ற தையா வெனத்துதித்துக்
கையால் விறலி களிகூர்ந்து-துய்யநீர்

484 உற்றவா றெல்லாமும் ஒண்டொடியார்பாற்சென்று
மற்றவா ருேதி வருவதுமென்-பொற்றொடிக்கை

485 பூணின் விறலி புகுந்தாள் மனைக்குமமை
வாணிதி போலுள்ள மடநல்லார்-காணவே

486 சென்றார் விறலி திருமுகம்பார்த் தார்வாச்சு
தென்றார் வளமை யியம்பினள்-குன்றாத

487 மங்கைமார் நல்ல வசனம் வசனமெனக்
கொங்கை மீதிற்புளகங் கொள்ளவே-கங்கைக்குப்

488 போனார்வந் தார்புனையும் பொற்பூவும் வாசமும்போ
லானார்வந் தாரேனு மாங்கவர்கள் தேனாருங்

---

481. அமளி-படுக்கை. பொருந்துமே-மனம் இசையுமே. சம்போகம்-சேர்க்கை. புணர்ச்சி.

482. வேத மணக்கோலம்-அந்தணர் நல்ல நிலையில் திரும்பும் கோலம். சிறைக்கோலம்-அடைக்கப்பட்டு கிடந்த நிலை. பொறைக்கோலம்-அடக்கம். அல்லது பொருமைக்கோலம்.

474ம் கன்னி முதல் 484ம் கன்னி வரை விறலி, அந்தணர்வரவு கண்ட அவர் மனைவியர் எவ்வாறு மகிழ்வர் எனக் கூறுகிருள்.

483. துய்யநீர்-தூய்மையான நீங்கள், உற்றவாரெல்லாம்-அடைந்ததெல்லாம் ஒண்டொடியார் பால் சென்று-உம் மனைவி.

484. அமைவாள்-பொருந்துவாள். நீதி-பொன்போலுள்ள பெண்கள்.

488. கங்கைக்குச் சென்று வந்தவர் பொற்பூவும் வாசமும் புனைவர்.

489 கொந்தளக பந்தி குழையக் குழைதுவளத்
தந்தரள மூரல் ததும்பவே-சிந்தை

490 யிளகிக் கரைபுரள வேயின்ப வெள்ளம்
புளகிக்கத் துள்ளிப் பூரித்-துளநெகிழ

491 சல்லாப வாரியின்பந் தத்துதல்போ லுங்கண்ணு
ருல்லாச மாக வுடன்களிப்ப-நில்லாக்

492 கலையும் வளையுமுலைக் கச்சு நெகிழ
நிலையு நிலையே நெகிழ-மலையுதிர்ந்த

493 கொம்பொன்மனைக் கண்டு குழைந்து குழைந்து
தெனச்
செம்பதும மேனியெல்லாஞ் செவ்விதாய்-தம்பொன்

494 சிகரமணி நீருஞ் செம்பதுங் கைக்கோடு
ரகமகிழ லொப்ப நிகராக-செகமதனி

495 லிணைத்தாள் பணிந்துமிக வெற்றி விளக்குத்
துணைத்தாமங் கொண்டு துலங்க-மகத்தான

496 திக்குத்தி கைத்தகப்பல் சேர்ந்தது போ லவ்வேசை
கைக்குட் கொடுத்தபொருள் கண்டதுபோல்-மைக்
கருணை

497 மூவரையன் செல்வி முகங்கண்ட நாவலர்போல்
காவலஞ்செங் கைமழை கண்டார்போல்-மேவுங்

498 களபசந்த னங்கதம்ப கலவைக்குஞ் சுகந்த
மளவுமந்த ரம்புயங்கள் ஆகத்-தளதளனெ

---

489. கொந்து-கொத்து. அளகபந்தி-கூந்தலின் ஒழுக்கு. குழைய-மணம் பெருக. குழை-குண்டலம். தாள்மூரல் ததும்ப-புன்சிரிப்பு.

490. புளகிக்க மயிர் சிலிர்க்க.

491. சல்லாபவாரி-பேச்சு முறை. பந்த. கட்டு. துதல்போல-துதிபோல. கண்ணுர்-பெண்கள்.

492. கலை-மேகலை. நிலை-நிற்பதும் நிலைநெகிழ.

499 மின்னுங் கழிப்பலகை வீரைவரு மூவரையன்
றுன்னும் புகழ்வரிசைத் தோற்றம்போல்-நன்னுதலார்

500 நலம்பெற்ற வாழ்க்கை நயம்பெற்று வேதங்
குலம்பெற்ற பேறுங்கைக் கொண்டாள்-நிலம்பெற்ற

501 தென்புலத்தோர் தெய்வம் விருந்தொக்கல்தா னென்
றுங்
கைம்புலத்தா ரேம்ப றலையென்று-பைம்புயற்கை

502 மூவரைய னீந்த முதலதனுற் சுற்றத்து
யாவரை யுங்காத்த றமியற்றித்-தேவர்

503 மகஞ்செய்து முக்காலம் வந்தனையுந் தப்பா
திகஞ்செய்த பேறினிதி னெய்தச்-செகஞ்சொல்லும்

504 வேந்த னெமதுகள வேள்வியான் முவரையன்
வாழ்ந்த கிளையு மனுமுறையுந்-தோய்ந்தமத

505 சூழிவயக்களிறுந் தொல்புவியு மெஞ்ஞான்றும்
வாழியென வாழ்ந்தார் மகிழ்ந்து

மூவரையன் விறலி விடு தூது.

முற்றிற்று.

பார்வாழி முத்தமிழ்ப்பா வலர்வாழி படைகுடிகூழ்
ஏர்வாழி நலமைச்சொல் லோரும்வாழி-யினித்திசை
யும்
சீர்வாழி மூவரையன் கிளைவாழி தினம்பொழியுங்
கார்வாழி வாழிதென் வீரையும் வைகையுங் கண்ணி
யுமே

சரசுவதி முன்னிற்க வேண்டியது.

———

மூவரையன் வண்ணம்

மூவரையன் வண்ணம்-

ஒளி வருபச்சைமாலை-வாடின தொடைக்கிசைந்த
புதுவயல் வைத்த கோதை-நாயகி கருத்துகந்து
விழி யுகந்துதந்துதேற-லருளுகந்த இன்சொல்வாணி
தமிழுவந்து பண்டசோதை-முலையுகந்ததயவினன்
எவரையு நடத்தினலு-மாதரவு பெற்றிணங்கி
யவரவர்மட்டிலேத-ராதர நடத்து நண்பன்
இடையில் வந்தடைந்துளோரு-முதலினங்கலந்துளோரு
மிருமருங்கிருந்து வாழ-நடுவிருந்த நிலைமையான்
வறுமை படைத்தவீடு-பாலொடு புசிக்கிலந்த
மகிமை நமக்கு வீறு-வீறென வளர்த்தகொண்டல்
வெடுவெடென்றவன் சொலோசை கனவிலும் பிறந்திடாது
வெகுரசம் பிறந்தவாயி-னகை புரிந்தலளிதவான்
இகல்வேந்தர் தொழுசேனைமூர்க்கவான்

விரிகடல் வட்டமேழு-தீவுமதிரத்துரங்க
வடகன வட்டமேறி–வாளரசரைத் துறந்து
வினையரண் பிடுங்கி நாக-முடியலைந்துலைந்து போக
வலமிடந்திரும்பியாடு-பவுரி கொண்ட லகிரியான்
மலையுமெதிர்த்த வேளை-யோர்மசகமொக்குமென்று
மனதுபெலத்த வீர-சாதனை செலுத்து சிங்கம்
வடகலிங்கர் வங்கர்சீனர்-குகுதர் கொங்கர் கங்கர் சேரர்
வகை விளங்கவந்தராசர்-தொகைவிளங்கு கொலுவினன்
விசையமகட்குமாலி-னுமலர்கள் மட்டலர்ந்த
தளவு கொடுத்தமாலை–தோளிலிடு முக்ரதுங்கன்
விசிறு தென்றல் மன்றல் வீசு-கவரிநின்றலம்ப நூறு
பரிசை சென்று கண்டராசர்-பணியவந்த சிவிகையான்
இசைதாங்கு கவிமாலை சூட்டினேன்,

எளியவரைப் பிரதாப-ராசரெனநட்டதன்றி
வலியவரைப் பிரசாத-ராயுமுலவிட்டவென்றி
எழில் சிலம்பு நின்றுலாவு-விருதுதண்டையொன்று பாத
சிறு சதங்கையொன்றுதாய-ரணியுமுந்தியணியுமால்
மதுரமிகுத்தபாகு-சாரமதனிற் சிறந்த
பொருளறிநற்பிரதாப-நூல் பல் தமிழ்ப் பிரசங்கி
மனிதரென்றிருந்த லோப-குடிதிறம்பு வஞ்சர்காண
உலகமெங்கணுந் தியாக-பிரபலஞ்செய்புகழினன்
எழுதரியிட்டநாள்-வெ-ளேடெழுது சட்டமிஞ்சி
நவரசமிட்டவோலை-மேல்வரியிலிட்ட நண்ப
னினிய நன்குணன்சுபால-பரிசனங்களின் பமேரு
வினைநலன் கனந்தராசு-நிறையினின்ற பெருமையான்
மகிழ்சாந்த மணவாள னுட்கொள்வோன்.

இரசிதசித்ரகூட-மாளிகை முகப்படர்ந்த
பகலவ-னெற்றையாழி தோரணமறுத்தகம்ப
மிடைதவழ்ந்து பஞ்சபாணி-குடையிதென்றியம்பவானி
லிரவு வந்த திங்கள் போல-விடிய வந்த நிலவுகால்
வரியளி தொட்டிலாடு-தாமரை முகப்பில் வந்து
சுரிமுக நெற்றிமீது நாளுமடிபட்டு நொந்து
வயவு கொண்ட பண்டியோசை-குமுகுமென்று
தொண்டையூதி
வளர்கிடந்தவம்பியேறி-மடைதிறந்த நெடியகால்
இருகரையுமுத்துவீசு வீரைநகரைப் புரந்த
திருமலைமுத்துவீர-மூவரையன் மைத்துனன்பொ
னிமயமுங்குலுங்கவீறு புயமணிந்திடுங்குமார
னிணையில் ரங்கனெங்கணுன—தமயனெங்கள் புணரியான்
வளமோங்கு கலைவேள்வி நாட்டிலே.

ஒளிவிடு முத்தடிபெணேயுன து பற்சிவந்த
பவளமுமொத்திராத-டியுனிதழுக்கு வஞ்ச
முடையமிஞ்சு-நஞ்சடிக-ணினியமென் கரும்படிசொ
லமுகுதந்த-மந்தகாச-முயிரையுண்டநமனடி
சிறுபிறையொப்ப-டிசெ-வா ணுதல் மணத்தகந்த
பொடியிடுசெப்படி-பொ-ஞபரணமிட்டகொங்கை
செறிசெறிந்தவிந்தை-யான-சொருகு கொண்டைமஞ்சடியி
னிசைமுழங்கு மெண்புளோசை-குமுறுசங்கமிட றடி.
யுதர தலத்தின்மீறு-ரோமவரை சிற்றெறும்பு
சரிரமெழுக்கடியு-ளீரமயமற்ற வம்பி
யுன து நெஞ்சிரும்படிமி-னிடை துவண்ட கொம்படிமெ
லடிகள் பஞ்சு பஞ்சடியென்மனது பந்தமெழுக-டி-
சுகிவேண்டிலெணவாரமாக்கடி.

உடையை நெகிழ்க்கவோக-ணுடிநிமுலொத்திலங்கு
மரவபடத்தை மூட-வோ துடி துடிக்குதென்கை
உபயமென்குறங்கின்மார-னபிநயக் தொடங்கவோமெல்
விரலரும்பு கொண்டுநாபி-மலர்வளைந்துகுடையவோ.
செவிமடலுக்குளேயெ-ஞவி னுனியிட்டளைந்து
புளகமெழுப்பவோ பலாலிருகதுப்பைமென்று
திரள்பமுங் கனிந்த கோவையிதழ்விளிம்பையுண்கவோ
சொலணி யிலங்கனங்கராச-கலைகங்கொடெழுதவோ.
உடலையிறுக்கவோசெ-வேமலைகளொத்த கொங்கை-
யொருகு கொடுக்கவேகணேயுன் முகமுத்தரும்பி
யொழுகுதென்று கொஞ்சவோவு-னுடன்மகிழ்ந்து கெஞ்ச
வோ
சொல்புளகி தஞ்செறிந்து மேவ-கரிகரஞ் செய்தணையவோ.
துடையேந்தி மடிமீதிலேற்றவோ.

D

நளினமுகத்தின்மோக- சேவையுமதற்கிசைந்த
கொடையுமளிக்குமேயுன்-மேனிபதறித்தியங்கி
நடுவு தொங்கல் விண்டபூவை-யளகபந்திசிந்துமே பொன்
வளை நெருங்கி முன்கை நீல-வளையுடைந்து சிதறுமே.
முழுமணி ரத்னமாலை-சீனமணியுட் கலந்து
சுவடுமறைக்குமேம-லாடு குழையத்திலங்கு
முலைமுகங் குலுங்குமேசெ-மதிமுகங்குலுங்குமேமெ
யழகுகந்தகுந்தளோலை-குழையிறங்கி-யுருளுமே.
நடுமணிபத்திபாய-ஆடுமொருசுட்டி தொங்கல்
அகலிய கொப்புமாடு-மேயது மறைக்கிணங்கி
நடனமிஞ்சுகொஞ்சுகாலி லிருசிலம்-பலம்புமேந
முபரியின்பமின்றுகாண-விழிய னந்தமமையுமே.
மிகமூண்டமனதாசை மூட்டுமே.

நயனமடைத்து மூடி-நாசியிலுயிர்ப் பிணங்கி
விரலைமடித்துவாயி-லூதியுறுமிச்சிணுங்கி
நயமுடன் பிணங்கிலீலை-புரியுமந்தரங்க மோடி
நினையநொந்து நொந்துவாட-இழைமருங்கல் குழையுமே.
படபடெனவுச்சி மீதி-லேசடச்சடச்சடென்று
விழுபதினெட்டுமேள-தாடனமலிந்து பொங்க
திகழ்பழங்குழம்பியாடு-கனதனம்பிதுங்கிமார்பி
லுதைய நெஞ்சுநைந்து சோர-உதையில்மிஞ்சி நகரவே.
இருதலை யொத்தகாம-மார்சலமடைத் திறந்து
நெடுகவிரித்தபாயி-லேறியணையிற் பரந்து
நறுமணங் கலந்த போதில்-உயிரிரண்டுமொன்றதாக
பரமவின்பம் வந்துமூடு-கலவியின் பமினிது காண்.
விதிதோன்றிலனுபோகம்வாய்க்குமே.

———

குறிப்பு:—புதுக்கோட்டை சமஸ்தானம் திருமயந்தாலூகா செட்டி ராயபுரத்து த. இ. பஞ்சுவையர் அவர்களின் ஏட்டுப்பிரதியிலிருந்து 1893ம் ஆண்டு (விஜய வருஷம்) சென்னையில் அச்சிடப்பட்ட "வண்ணத்திரட்டு" என்ற நூலில் இது உள்ளது.

பிழை திருத்தம்

கண்ணி	பிழை		திருத்தம்
12	திளேஞெர்	—	திளேஞோர்
20	கேடிற்றை	—	கேளிற்றை
24	கொற்ஞெடி	—	கோற்ஞெடி
31	சொற்திறத்தை	—	சொற்றிறத்தை
40 அகு	மெலெழும்	—	மேலெழும்
44	பேறுயிருக்குமணி	—	பேரூயிருக்குமணி
59	துணரனேக்கே	—	துணரணேக்கே
76	யிருந்து	—	இருந்து
	காண	—	கான
81	பென்	—	பெண்
84	மாதுனங்கு	—	மாதுனக்கு
90	சோதிடாய்	—	சோதிடராய்
110	கோளினுள்	—	கோலினுள்
125	துத்து	—	தூத்து
127	நிறுத்தகலே	—	நிருத்தகலே
128	கற்குமோகற்றிருவே	—	கற்குமோகத்திருவே
143	திளேஞெர்	—	திளேஞோர்
145	யேத்தியெ	—	யெத்தியெ
154	ஞரு	—	நாரு
162. அகு	துட்டித்து	—	துண்டித்து
174	தோட்ட	—	தொட்ட
	போட்டி	—	பொட்டி
189. அகு	உரை	—	உறை
	ணைவ	—	வைணவ
192	பின்னளக்க	—	பின்னளகக்
195	தோகை	—	தொகை
197. அகு	கூற	—	கூர
199	கானமிளத்த	—	கானமிழற்ற
	தையலால்	—	தையலாள்
201	விதம்பத்து	—	விதழ்பத்து
	கிதைய	—	இதைய
	மிடைந்தென	—	மிடைந்தேன்
201. அகு	கண்பரிபாஷை	—	delete
202	குணமலேந்தேன்	—	குண்மலேந்தேன்
205. அகு	அத்தானி	—	அத்தாணி
	வாலில்	—	இளமையான

B

கண்ணி	பிழை		திருத்தம்
210	னே நகை	—	னே நகை
226. அகு	பேராசைப்பட்டு!	—	உரையாடி
230	வளவில்லா	—	அளவில்லா
234	வீழுந்த	—	விழுந்த
246. அகு	பனே	—	பணே
254. அகு	கிசயா	—	கிச்சையா
266. அகு	கிரெவஞ்ச	—	கிரௌஞ்ச
268	நண் னும்	—	நண் ணும்
281	பாத்தாள்	—	பார்த்தாள்
288	தெனவீரை	—	தென்வீரை
293	கொன்டது	—	கொன்பது
298. அகு	இக்கித்து	—	சிக்கித்து
323	யெது	—	யேது
343. அகு	பனயம்	—	பணயம்
	பெண்ணங்கை	—	பெண்ணணங்கை
361	வலாவு	—	விலாவு
	தெனடமோ	—	தெண்டமோ
363. அகு	வீனே	—	வீணே
372. அகு	காயம்	—	காயல்
	ஆனே	—	ஆணே
386	புலவொற்கும்	—	புலவோற்கும்
387	தோர்க்கும்	—	தோற்கும்
390	தனந்தயலே	—	தணந்து
400	தெம்முரிச்	—	தெம்மூர்ச்
452	மணிகுடம்	—	மணிமகுடம்
455. அகு	பிரானை	—	பிராணே
	பரிக்குலம்	—	குதிரைக்கூட்டம்
457	யும்பர்	—	உம்பர்
482. அகு	மணக்கோலம்	—	மறைக்கோலம்
	பொருமை	—	பொறுமை
	நீதி	—	நிதி
489. அகு	தாள்மூரல்	—	தரளமூரல்
495	துனே	—	துணே

அகு என்பது அடிக்குறிப்பு.